# சங்ககால வேந்தரும் வேளிரும்

(உரை நடை)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1[illegible] MAR 1948
MADRAS

ஆசிரியர்

வித்துவான். பெ. கோவிந்தமூப்பனார்.

தலைமைத் தமிழாசிரியர்

சேவகப் பாண்டியன் போர்டு உயர்நிலைப் பள்ளி

இராஜபாளையம்

பிரசுரகர்த்தர்

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை

திருநெல்வேலி ஜங்ஷன்

காபிரைட்]

[விலை ரூபா 1-4-0.

முதற் பதிப்பு—1947.

106189

Printed at the Rajan Electric Press, Madras.
For S. R. S. Tny, Q. H. No. 1 C. 500—12-'47.

# முகவுரை

சங்ககால வேந்தரும் வேளிரும் என்ற இந்நூலிற் கூறப்படுகின்ற மன்னர்களும் வள்ளல்களும் பண்டைத் தமிழ்நாட்டரசியலோடும் தமிழர்களோடும் தமிழ்மொழியினோடும் மிகுந்த தொடர்புடையவர்கள். இவர்கள் வரலாறுகள்காப்பியச் சுவைகள் சிறந்து விளங்கும்படி என்னால் செய்யுளில் பாடப்பட்டிருக்கின்றன. அவைகள் அண்மையில் வெளிவரும். அவ் வரலாறுகளின் சுருக்கமாக இந்நூல் உரை நடையில் இப்பொழுது வெளியிடப்படுகிறது. வரலாறுகளுக்கிடையில், செய்யுள் நூல்களிற் சேர்க்கப்பட்டிருக்கும் இயற்கை வருணனைகளும், இல்லறவியல், அரசியல், அவற்றின் உட்பிரிவுகளாகிய போர், கொடை, புலமை, இசை, தெய்வவழிபாடு, தொழில் முதலிய தமிழர் சிறப்பியல்புகளும் இவ்வுரை நடை நூலிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வரலாறுகளைக் கூறிச் செல்லுமிடங்களில் அவ்வரலாறுகளோடு தொடர்புடைய புறநானூற்றுச் செய்யுள்களும் அவற்றின் கருத்து விளக்கங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பண்டைப் புலவர்களுடைய புலமைகளையும் எண்ணங்களையும் அரசர்களுடைய தமிழ்மொழி ஆதரவுகளையும் விளக்குதலோடு காப்பியங்களிலும் புறநானூறு முதலிய சங்கநூல்களிலும் மாணவர்களுக்குப் பற்றை உண்டாக்கி அவற்றைக் கற்கும் அவாவையும் ஏற்படுத்துமென்று எண்ணுகிறேன்.

பெ. கோவிந்தமுப்பனர்.

# பொருளடக்கம்


## 1. முடி மன்னர் மூவர் — பக்கங்கள்

1. சேரமான் கணைக்கால் இரும்பொறை 1—24
2. கோப் பெருஞ் சோழன் 25—53
3. தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் சேழியன் 54—86

## 2. கொடை மன்னர் மூவர்

கொடை மன்னர் மாண்பு (நூன்முகம்) 89—95
1. வள்ளல் ஓரி 96—109
2. வள்ளல் காரி 110—117
3. வள்ளல் அதியமான் 118—162

# முடிமன்னன்

## 1. சேரமான் கணைக்கா லிரும்பொறை

தாமரை மலர்கள் மலர்ந்து காண்பவர் கண்களைக் கவரும் நீர் நிலைகளில் எருமைகள் படிந்து, முன்பு தாம் வயல்களில் சென்று தின்ற கரும்புகளைக் குதட்டித் தின்றுகொண்டிருக்க, அப்பொய்கையில் விளையாடிய வரால்மீன்கள் அவற்றின் மடிகளை முட்டினவாக, அவ்வெருமைகள் தம் கன்றென்று எண்ணி அகங் குழைந்து அயராது தீம்பால் சொரியும். எருமைகளின் பாலும் நீர்நிலைகளின் நீரும் கலந்து மடைகளின் வெளியே சென்று அயலிலிருக்கும் வயல்களிலுள்ள நெற்பயிரை வளர்க்கும். அந் நெற்பயிர்களையும் கரும்புகளையும் கமுகுகளையும் வேலியாகவுடைய நகரம் சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சிமா நகரமாகும்.

வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு செங்கோல் செலுத்திய சேரமன்னர்கள் பலர். அவர்களில் சேரமான் கணைக்கா லிரும்பொறை என்பவன் ஒருவன். இவன் பொய்கையா ரென்ற நல்லிசைப் புலவரிடம் தேனினும் இனிய செந்தமிழ் மொழியை

ஐயந் திரிபறக் கற்றறிந்தவன். தமிழ் மொழியைத் தன்னுடெங்கும் வளர்த்தவன். தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவன். இல்லை என்று வந்த இரவலர்களுக்கு இல்லையென்னாது கொடுத்து நல்லிசை பெற்றவன். புலவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றவன். அரிவையர் விரும்பும் அழகுடையவன். குடிகள் விரும்பும் செங்கோலுடையவன். போரெனிற் புகலும் புனை கழல் மறவன். மானமே அணிகலமென மதிப்பவன். சேரமான் கோதைமார்பன் என்பவனுக்கு அண்ணன். இவனுக்குக் கற்றறிந்த அமைச்சர்கள் நூல்நெறி காட்டினார்கள். தானைத் தலைவர்கள் உறுதுணையா யுதவினர். நாட்டினர் நன்னெறியில் நடந்தனர். சேரமான் கணைக்கா லிரும்பொறை தன் நாட்டைச் செம்மையிற் காவல் செய்து வந்தான்.

சேரநாட்டில் திங்கள் மும்மாரி பெய்தன. வயலெங்கும் கூலங்கள் வளம்பட விளைந்தன. காவெங்கும் காய்களும் கனிகளும் காய்த்துக் கனிந்தன. செடி கொடிகளில் மலர்கள் மலர்ந்து திகழ்ந்தன. மலைகளிலும் கடல்களிலும் வளங்கள் மிகுந்தன. சேரநாட்டு மக்கள் நானில வளங்களையும் கொண்டுவந்து தங்கள் தங்கள் இல்லங்களில் நிறைத்து வைப்பார்கள். பல வற்றை எடுத்துத் தங்களைக் காக்கும் காவலனுக்குக் கொடுப்பார்கள். தங்கள் வேளாண்மைத் தொழிலுக்கு உதவிய ஏவலர்களுக்குக் கொடுத்துதவுவார்கள். கொல்லர், தச்சர், குயவர் முதலிய தொழிலாளிகளுக்கும் வழங்கி மகிழ்வார்கள். இல்லையென்று வந்த

இரவலர்களுக்கும் பாடி வந்த பாணர்களுக்கும் ஈந்து இன்புறுவார்கள். ஆடவரும் மகளிரும் இல்லிலிருந்து நல்லறங்கள் பல புரிந்து வாழ்வார்கள்.

பெண்கள் நீராடி நெடுநிலை மாடங்களி லமர்ந்து காரகில் புகைத்துக் கருங்குழல் புலர்த்துவார்கள். மலர் மாலை புனைந்து மகிழ்வார்கள். வாளனைய புருவங்களுக்கும் கயலனைய கண்களுக்கும் மைகொண் டெழுதுவார்கள். பொன்னும் மணியும் புனைந்து பூரிப்பர் பலர். மின்னற்கொடி போன்று வீதிகளில் நடந்து செல்வர் பலர். குழலிசையை வெறுத்துக் குறு நடைச் சிறுவருடைய மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்வர் பலர்.

ஆடவர்கள் வில் வித்தை பழகுவார்கள். பரியேற் றம் கரியேற்றம் பயில்வார்கள். அமிழ்தனைய அருந் தமிழ்நூல்களைக் கற்றறிவார்கள். காலையி லெழுந்து நீராடிக் கடவுளை வணங்குவார்கள். அடுபுகை யல்லது சுடுபுகையை அறியார்கள். உண்ணீ ரல்லது கண்ணீரை யறியார்கள். “வாழ்க சேர வளமலி நாடு; வாழ்க கணைக்கா லிரும்பொறை மன்னன்; வாழ்க தமிழ்மொழி” என்று வாழ்த்தி மக்கள் அனைவரும் மகிழ்ந்து வாழ்த்து வந்தார்கள்.

## சூழ்ச்சி

சேரநாட்டு மக்கள் செல்வக் களிப்பினாலும் செங்கோற் சிறப்பினாலும் உள்ளம் பூரித்துத் தங்கள் காவலனாகிய கணைக்கா லிரும்பொறையை வாயார வாழ்த்தினர். பொன்னையும், மணியையும், கனிகளை

யும், கறிகளையும், நெல் முதலிய கூலங்களையும் மன்னனுக்குக் கொடுத்து மகிழ்ந்தனர். இல்லையென்னாது தம்மிடம் வந்திரப்பார்க்குக் கொள்க என்று பல் பொருளும் கொடுத்தார்கள். போர் என்று எவரேனும் புகலுவராயின் எங்கு நடைபெறுகிறது என்று பூரித்தெழும் வீரர்களாய்ப் பரி யூர்வதிலும், கரி யூர்வதிலும், தேர்வூர்வதிலும் சிறந்துவிளங்கினர்.

கணைக்கா லிரும்பொறை தன் குடிகளின் உயர்வையும் படைகளின் வலிமையையும் கண்ணாரக் கண்டு களிப்படைந்தான். தன்னுடைய வாள் வலிமையும் தோள்வலிமையும் மனவலிமையும் தன்னைப் போருக்கு ஊக்கின. "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்னும் வள்ளுவர் மறைமொழியை மனத்தில் நினைந்தான். மாற்றாரை வென்று அவர் மண் கொண்டு ஆளுவதே மன்னர்க்கு அழகாகும் என்று எண்ணினான். அறிவிற் சிறந்த அமைச்சர்களையும் வலிமையிற் சிறந்த தானைத் தலைவர்களையும் அழைத்துத் தன்னருகிருத்தினான். "ஆளும் நாடு ஒரு வண்டிக்கு நிகராகிறது. அவ்வண்டியைச் செலுத்து கின்றவன்காவலனாவான். அவ்வண்டிக்குஅச்சு படைத் தலைவனாவான். அவ்வண்டியை இழுத்துச் செல்லும் காளைகள் அமைச்சராவர். ஆகையால் அமைச்சர்களும் படைத்தலைவனுமாகிய நும்மை அழைத்து ஆராய்ந்து எண்ணித் துணிந்த பின்பே ஒரு செயலைச் செய்வது என்னுடைய வழக்கம். இப்பொழுது நம் நாடு நன்னிலையி லிருக்கிறது. நன்செயும் புன்செயும்

நன்கு விளைந்தன. குடிமக்களிடம் கவலையும் அவலமு மில்லை. பசியும் பிணியு மில்லை. பகைமையும் சிறுமையு மில்லை. நாட்டைப்பற்றிய கவலை என்னிடம் இல்லை யென்றாலும், உள்ளத்தில் சின்னாளாக ஒரு கவலை உலாவிக் கொண்டிருக்கிறது. நான் உண்பன உண்டும், உடுப்பன உடுத்தும், காண்பன கண்டும் களித்துவாழ்கின்றேன். சின்னாட் பல்பிணிச் சிற்றறி வுயிர்களில் என்போல் இன்புற்று வாழ்பவர் ஒருவரு மிரார். என்னுடைய நாட்டில் படையெடுத்து இடர் செய்த பகைவர் ஒருவரு மில்லை. உயிரோடு வாழும் வரை இங்ஙனமே துன்பமின்றி இன்புற்று வாழ்வதே இனிய வாழ்க்கை என்று பலர் எண்ணலாம். ஆனால் மன்னர் வாழ்க்கை மாறுபாடுடையது. அல்லல் வாழ்க்கையே அரசர் வாழ்க்கை.

> "கல்லா மைபழி; கற்றார்க் கரும்பொருள்
> நல்கா மைபழி; நண்ணார் நாடு
> வெல்லா மைபழி; மெய்யில் விழுப்புண்
> இல்லா மைபழி; என்றென் றளவில
> சொல்லா நிற்கும் தொல்லைத் தமிழ்நூல்"

இப்பழிகளில் பல பழிகள் என்னிடம் இல்லா தொழிந்தன. விழுப்புண்படாமையும் பகைவர் நாடு கொள்ளாமையுமே என்னிடமுள்ளவை. என் தோள் வலி கொண்டும், படைவலி கொண்டும், துணைவலி கொண்டும் அப்பழிகளை நீக்கலாமென்று நினைக்கி றேன். இந்நினைப்பே என் கவலை. அறிஞர்களே! வடநாட்டு மன்னர்களாகிய கனகன், விசயன் என்பவர்களை வென்று அவர்களுடைய தலை

களின்மேல் இமயமலையிலிருந்து எடுக்கப்பட்ட கல்லை ஏற்றித் தன்னாட்டுக்குக் கொண்டு வந்து கற்புக்கரசி யாகிய கண்ணகி தேவிக்கு உருவஞ் செய்து, கோவிலும் எடுத்தான் செங்குட்டுவனென்னுஞ் சேரர் பெருமான். அதிகமான் நெடுமான் அஞ்சியோடு போர் செய்து அவனுடைய தகடூரை அழித்துப் பெரும்புகழ் கொண்டான் பெருஞ்சேர லிரும்பொறை யென்னும் மன்னன். என்னுடைய குலத்தோர் வலிமையையும் என்னுடைய வலிமையையும் ஆராய்ந்து துணிந்து உங்கள் க்ருத்தைத் தெரிவியுங் கள்'' என்று கூறினன் கணைக்கா லிரும்பொறை.

அமைச்சரில் ஒருவனாகிய பண்ணன் எழுந்து அரசனை வணங்கி, "மன்னவ தாங்கள் கூறியது உண்மை. நாடு நன்னிலைமையி லிருக்கிறது. குடிகள் கூறும் குற்ற மில்லை. நால்வகைப் படைகளும் சால வலிமையுடையன. தங்கள் முன்னோரைப் போலவே பகைவர்மேல் படையெடுத்துச் செல்வதில் பழி யொன்றுமில்லை'' என்று கூறினன். சாத்தன் என்னும் அமைச்சன் எழுந்து "அரசே, தாங்கள் எண்ணிய படியே போருக்கெழுவதில் குற்றமில்லை. அமைச்சர் பண்ணன் மொழியில் பழியும் இல்லை. முதலாவதாகக் குறுநில மன்னன் மூவனோடு போர் செய்வது நல்லது. மூவனை வென்றபின் சோழநாட்டு மன்னனாகிய கோச்செங்கட் சோழனோடு போர் செய்யலாம்'' என் ருன். பின்பு, படைத்தலைவனாகிய பணிக்கன் எழுந்து "மன்னவ! தாங்கள் மொழிந்த மொழிகள் எனக்கு உவகையை அளித்தன. அமைச்சர்கள் சொல்லிய

சொற்கள் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. தங்களுடைய நால்வகைப்படைகளும் போரின்றிப் புலம்புகின்றன. தங்கள் பகைவருடைய ஊரையும் பேரையும் உரைப்பீர்களானால் இப்பொழுதே சென்று அவர்களுடைய தலைகளைக் கொண்டு வந்து சேர்க்கும். காடுகளும் மலைகளும் கடக்க வேண்டியவையாயிருப்பினும் அஞ்சாது அவற்றைக் கடந்து சென்று பகைவரைப் பாழ்படுத்தும். கூற்றமே பல வுருவந் தாங்கி எதிர்க்க வருமாயினும், தன் வலிமையைக் கெடுத்து உன் அடிகளை வணங்கும்படி செய்யும். நான் படைகளைப் பற்றிப் பலவாறு புகழ்வதில் சிறிதும் பயனில்லை. அவைகள் பகைவரோடு போர் புரியும் பொழுது அவைகளின் திறமையைக் கண்டு கொள்ளுங்கள்'' என்றான்.

கணைக்கா லிரும்பொறை அமைச்சர்கள் சொல்லினாலும், தானைத்தலைவன் சொல்லினாலும் அகம் மிக மகிழ்ந்தான். உடல் பூரித்தான். அவர்களைப் புகழ்ந்து மூவன் நாட்டின்மேற் செல்வதற்குச் செய்ய வேண்டுவன செய்யும்படி கட்டளையிட்டு மன்னன் அகன்றான்.

## வென்றி

மன்னன் கணைக்கா லிரும்பொறை கவின் மிகு தவிசின் மிசை அமர்ந்திருந்தான். அமைச்சரும் படைத் தலைவர்களும் அரசனை வணங்கி அவரவர்க்குரிய இருக்கையில் இருந்தனர். போரைத் தொடங்கும் நாளையும் புறப்படும் நேரத்தையும் காவலனை வணங்

இக் கணி தெரிவித்தான். வலிமை மிகுந்த மறவர்களை அழைத்து மூவனுடைய ஆனிரையைக் கவர்ந்து வருமாறு காவலன் கட்டளையிட்டான். 'ஆனிரையைக் கவர்ந்தபின் வள்ளுவனை அழைத்துத் தான் படையெடுத்து வருவது குறித்து அவன் நகரில் பறை அறைவிக்குமாறு பணித்தான். பின்பு இரும்பொறை தன்னுடைய கரிப்படையையும், பரிப்படையையும், தேர்ப்படையையும் ஒன்றன்பின்னொன்றாக அனுப்பினான். வலிமை மிகுந்த மறவர் வாழ்த்தவும், முரசு ஆரவாரிக்கவும், சங்கம் முழங்கவும் வேந்தன் வில்லேந்தி வெகுண்டு புறப்பட்டான். காலாட்படை கடலென ஆர்த்துக் கனன்று சென்றது. அலைந்தலைந்து புரண்டு செல்லும் கடலலை போலப் பாய்ந்து பாய்ந்து பரிமாக்கள் வாதுகர்களைச் சுமந்து படர்ந்தன. தேர்கள் உருண்டும் கரிகள் கனன்றும் நெறியே சென்றன. படைத்தலைவனாகிய பணிக்கன் நால்வகைப் படைகளையும் நடத்திச் சென்றான்.

வழியில் நல்ல சகுனங்கள் காணப்பட்டன. மலர் மாலையைக் கையில் ஏந்திக்கொண்டு கொள்வார் கொள்க என்று ஒருவன் விலைகூறி எதிரே வந்தான். நிலத்தில் நடந்து சென்ற ஒரு கோழிக் குஞ்சினைச் செம்பருந்தொன்று வானத்திலிருந்துபாய்ந்து காலாற் பற்றிப் பறந்து சென்றது. படைகள் நடந்து செல்வதனால் மேலெழுந்தூளிகள் பகைவனாகிய மூவனுடைய உயிரும் அவன் படைகளுடைய உயிர்களும் நாளைத் துறக்கம் வந்து சேரும் என்று வானவர்க்குத் தெரிவிக்க உயர்ந்து செல்வன போன்று சென்று

ஞாயிற்றை மறைத்தன. காலாட்படை நடந்து நிலத்தைப் பொடி யாக்கிய பொடியை யானைகள் தங்கள் மத நீராலும் குதிரைகள் தங்கள் வாய்நுரையாலும் நனைத்து அளறுக்கி நடந்து சென்றன. அவ்வளறு புலர்ந்து பொடியாகுமாறு தேரினம் உருண்டுருண்டு சென்றன.

இங்ஙனம் நடந்து சென்ற படைகள் மூவன் நகரை அடைந்தன. அவனுடைய காவல் மரத்தை வெட்டின. நீர் நிலைகளைத் தூர்த்தன. மூவன் தன் பகைவனுகிய இரும்பொறை வருகையைக் கேள்விப்பட்டான். இரும்பொறையினுடைய பெரும்படையோடு போரிட முடியாமையால், அவனும் அவனுடைய துணைவியும் சுற்றமும் குடிகளும் அகழால் சூழப்பட்ட உயர்ந்த மதிலினுள் கதவுகளை அடைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். மூவன் எதிர்த்துப் போரிடாமையால் இரும்பொறை அவனிருக்கும் மதிலை முற்றுகையிட்டான். படைகள் நீர் நிறைந்த அகழ்களை அழித்து மதிலினுட் செல்வதற்கு முயன்றன. மதிலினுளிருந்தோர் உள்ளே இருந்துகொண்டே, வெளியிலிருக்கும்வீரர்கள் அகழிகளை அழிக்காமலும் மதில்களைச் சிதைக்காமலும் கணைகளாலும் வேல்களாலும் தடுத்தார்கள். இருபக்கத்துவீரர்களும் வேல்களை எறிந்தார்கள். அம்புகளை வீசினார்கள். வீரர்களுடைய தலைகள் விழுந்தன. கைகள் வெட்டுண்டன. கண்கள் புண்பட்டன. வீரர்கள் பலர் வெட்டுண்டு அகழில் வீழ்ந்தார்கள். பலர் அகழைத் தூர்த்துக் கடந்தார்கள்.

பலர் மதிலில் ஏணி வைத்து ஏறினார்கள். பலர் மதிலை இடித்தார்கள். கூர்ங்கோட்டுக் களிறுகளை ஏவி மதிலின் கதவுகளை உடைத்தார்கள். பலர் மதிலின் மேலேறி உள்ளே நுழைந்தார்கள். பலர்வாயிலின் வழியாக உள்ளே நுழைந்தார்கள். இரு பக்கத்து வீரர்களுக்கும் பெரும்போர் நடந்தது. வீரர் மெய்களில் அம்புகள் பாய்ந்தன. வேல்கள் விழுந்தன. வாள்கள் போழ்ந்தன. குடர்கள் சரிந்தன. கண்கள் பிதிர்ந்தன. கால்கள் முறிந்தன. கவந்தங்கள் ஆடின. அம்புகள் கரியினூடும், பரியினூடும், காலாளினூடுஞ் சென்றன. வேல்கள் வீரர்கள் மார்பினூடும் கண்களினூடும் பாய்ந்தன. கணைக்கா லிரும்பொறை வில்வளைத்துக் கணைகளை விடுத்தான். மூவன் அவனுக்கெதிரே வந்து போர் செய்தான். இருவரும் ஒருவரோடொருவர் சோர்வின்றிப் போர் செய்தார்கள். வேல்களை எறிந்தார்கள். வாள்களை வீசினார்கள். அம்புகளை ஏவினார்கள். இரும்பொறை எய்த அம்பொன்று மூவன் மார்பில்மூழ்கிக் கழன்று சென்றது. எதிர்த்து நின்ற மூவன் நிலத்தில் விழுந்து மாய்ந்தான். அவன் மாய்வுக்கு வீரர்கள் வருந்தினார்கள்; புலம்பினார்கள்; அழுதார்கள்; படைகளை எறிந்துவிட்டு இரும்பொறையைப் பணிந்து நின்றார்கள்.

தன் காதலன் மூவன் துறக்கம் அடைந்தான் என்று கேள்விப்பட்டாள் அவன் மனைவி. மின்னற் கொடி நிலத்தில் நடந்து சென்றாற்போல மெல்ல நடந்து தன் கணவனைக் கண்ணுற்று அலறினாள்; அழுதாள்; கண்ணீர் வடித்தாள்; மெய்யில் வீழ்ந்து

விம்மி யழுதாள். "மன்னா! மன்னா! வாய்திறவாய். என்னுயிர்க் காதல! எழுந்திரு, உன் திறமையை இகழ்ந்து இன்றுகாறும் உன்னோடெதிர்ந்து போர் செய்தவரொருவருமில்லை. இன்று சேரன் வந்தெதிர்த் தான். உன்னை வென்றான். உன்னைக் கொல்லும் கூற்றுவனானான். பரிசில் பெறாத பெருந்தலைச் சாத் தன் பரிசில் நீட்டித்த உன்னை வெகுண்டு பாடிய பாட்டின் பயனே. கொல்கணையாகி உன் உயிரைக் குடித்ததுபோலும். நின்னைப் பிரியேன் என்ற நீ இன்று பிரிவது தகுமா? நீ என்னைப் பிரியினும் நான் உன்னைப் பிரியேன்" என்று அழுது புலம்பினாள். அவ னுடைய மார்பில் விழுந்தாள். அவன் புண்பட்ட மார்பில் கண்ணை வைத்து அவன் உயிரை நோக்கி னாள். உயிரைக் காணாமையினால் அதனைத் தேடி மண்ணி னீங்கி விண்படர்ந்தாள்.

சேரன் கணைக்கா லிரும்பொறை தன் பகைவ னாகிய மூவன் பற்களைப் பிடுங்கினான். அவன் நகரில் தன் விற் கொடியை நாட்டி வெற்றி விழாக் கொண் டாடினான். பொன்னும் மணியும் புலவர்க்கும் வீரர் களுக்கும் கொடுத்தான். மூவன் பற்களை எடுத்துக் கொண்டு, மெய்ந்நூற் புலவனாகிய பொய்கையார் வாழ்த்தவும், தன் தம்பியாகிய கோதை மார்பன் தொடர்ந்து பின்வரவும், தன் படைகளோடும் மூர சொலியோடும் பரசொலியோடும் தொண்டி நகரை அடைந்தான். அந் நகர்க் கோட்டை வாயிலின் கதவில் மூவன் பற்களை அழுத்தித் தன் புகழையும்

வலிமையையும் பகைவர்க் கறிவுறுத்திச் சின்னாள் வாழ்ந்து வந்தான்.

பின்பு, தன் தம்பி கோதை மார்பனோடும் பொய்கையாரோடும் படைகளோடும் பேராரவாரத்தோடு மன்னன் தன் தலைநகராகிய வஞ்சிமா நகரை அடைந்தான்.

## சிறைப்பாடு

பன்னிறப் பூக்களாகிய பட்டாடை உடுத்துக் கயலாகிய கண்களை விழித்து மருத நிலமாகிய தாய் ஈன்ற நெற்பயிராகிய மக்களை அணுகி வளர்த்து மன்பதைகளுக்குச் சோறளிக்கும் காவிரியாறு பாயும் சோழ நாட்டிற்குத் தலை நகரம் உறையூராகும். அந் நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட சோழ மன்னர் பலர். அவர்களி லொருவன் கோச்செங்கட் சோழன். இவன் மன்னர்களில் ஏறுபோல்வான். வழங்குவதில் மாமுகில் போல்வான். பன்னூ லாராய்ந்த பாவலன். புலவர் புகழும் புரவலன். தன்னை அடைவார்க் கெல்லாம் குளிர் நிழல் தரும் மரம் போல்வான். கரிகாற் சோழன் கால்வழி வந்தோன். பிறவாயாக்கைப் பெருமானுக்கு அடிமை பூண்டவன். சேயைக் காக்கும் தாய் போலக் குடிகளையெல்லாம் உவகையிற் காத்துக் கோலோச்சி வாழ்ந்து வந்தான்.

சோழன் செங்கணான் தன் நாட்டை நன்குகாவல் செய்து வருகையில் சேரநாட்டு மன்னனாகிய கணைக் காலிரும்பொறை மூவனை வென்று அவன் பற்களைப்

பிடிங்கித் தொண்டி நகரின் கோட்டை வாசற் கதவில் அழுத்திய செய்தியைக் கேள்விப்பட்டான் அவன் தன் நாட்டின் மேலும் படையெடுத்து வருவதை ஒற்றரால் உய்த்துணர்ந்தான். அவன் தன் நாட்டின் மேல் படையெடுத்து வருமுன் தானே அவனோடு போர் செய்ய எண்ணங் கொண்டவனாய், வாளையும் கொடியையும் முன்னர் விடுத்து நாற்படைகளையும் நடத்திச் சென்றான். சேரன் சோழன் செங்கணான் வருகையை அறிந்து, அவனை எதிர்ப்பதற்குக் கழுமலமென்னும் ஊருக்கு வந்து சேர்ந்தான். இருவர் படைகளும் கழுமலத்தில் எதிர்ந்தன.

இரு பெருங்கடல்கள் கரையுடைந்து கடுகி ஓடி ஒன்றோடொன்று எதிர்ந்தாற்போல இருவருடைய பெரும் படைகளுஞ் எதிர்ந்து போராடின. வீரர்கள் வாள்களை வீசிப் பகைவரை வெட்டினார்கள். கணைகளை ஏவிக் கருதலர்களைக் கொன்றார்கள். வேல்களை எறிந்து எதிர்ந்தாரை வீழ்த்தினார்கள். சிலர் தலைகளை வெட்டினார்கள், சிலர் கைகளை வீழ்த்தினார்கள். சிலர் பற்களைச் சிதைத்தனர். சிலர் மார்பில் குத்தினர். சேல்கள் செல்வன போல வேல்கள் விரைந்து பாய்ந்தன. காற்றினும் அம்புகள் கடுகியோடின. பரிகள் அலையெனப் பாய்ந்து சென்றன. கரிகள் மலையெனக் காய்ந்து நடந்தன. வீரர்கள் கனன்று இவுளிகள் வீழ்த்தியும் களிறுகள் சாய்த்தும் நகர்வார்கள். களிறுகள் பரிகளையும் மறவர்களையும் குத்தி வீழ்த்தும். பரிகள் பகைவர் தலைமேல் காலை

வைத்துப் பாய்ந்து செல்லும். தலைகளும் கைகளும் கால்களும் வெட்டுண்டு நிலத்தில் வீழ்ந்து கிடக்கும். களத்தில் குருதியாறு பாய்ந்தோடும். வெண்குடைகள் குருதிவெள்ளத்தில் வெண்ணுரைபோல் விளங்கும். வேலும் வாளும் மீன்கள்போல் காணப்படும். நிமிர்ந்து நிற்கும் விற்கள் தூண்டில்போல் காணப்படும். வெட்டுண்ட கால்கள் வரால்போல் தோன்றும். கைகள் அரவெனப் புலப்படும். உதிர்ந்த எயிறுகள் முத்துப்போல் விளங்கும். வெட்டுண்ட களிறுகள் திமில்போல் திகழும். குருதி படிந்த காக்கை செம்போத்துப்போல் செந்நிறமுற்றன.

சேரன் கணைக்கா லிரும்பொறையும் சோழன் செங்கணானும் படையெடுத்துப் போர்க்களம் புகுந்தார்கள். கணை தொடுத்தும் எஃகம் எறிந்தும் வீரர்களையும் வேழங்களையும் பாய்மாக்களையும் வீழ்த்திப் பொருதார்கள். எதிர்ந்தவ ருயிரை விண்ணுக்கேகுவித்தனர். பகைத்தவர் உடம்பைப் பாழ்படுத்தினர். உடன்றவ ருயிரை உண்டு மகிழ்ந்தனர். முனிந்தவர் தலையைச் சினந்து துணித்தனர். இருபெரு வேந்தரும் தந்திறமை காட்டிச் செருச்செய்யும் பொழுது, சோழன் செங்கணான் முன்னர் அடிவைத்து படைகளை ஏவிப் பாய்ந்து சென்றான். சேரன் படைகள் எதிர்த்து நிற்றற்காற்றாது பின்னடிவைத்துப் பெயர்ந்து சென்றன. புலியின் முன் நிற்காத புல்வாய்கள் போலப் பலவிடத்தும் படர்ந்தோடின. சேரமான் கணைக்கா லிரும்பொறையும் அவன் தம்பி கோதை மார்பனும் சோழர் படைகளால்

வளைக்கப்பட்டுப் பிடிக்கப்பட்டனர். பிடிபட்ட வேந்தரிருவரையும் சோழன் கட்டிப் பற்றித் தன் படைகளோடு தன் தலைநகராகிய உறையூரை அடைந்தான். பின்பு அவ்விருவரையும் குடவாயிற் கோட்டத்தில் சிறைப்படுத்தினான்.

## பரிசிற்றுறை

சோழன் செங்கணானால் சிறை செய்யப்பட்ட கணைக்கா லிரும்பொறையும் அவன் தம்பி கோதை மார்பனும் கவலையினால் கண்ணீர் வடித்தார்கள், சினத்தினால் கொதித்தெழுவார்கள். நெட்டுயிர்ப் பெறிந்து நிலத்தை மிதிப்பார்கள். தோளால் முட்டிக் கதவை உடைப்பார்கள். பலகணியைப் பறிப்பார்கள். சுவரோடு மோதுவார்கள். கட்டுண்ட களிறு போலப் புண்பட்டு வருந்துவார்கள். உள்ளம் உடைவார்கள். முன் மன்னராய் வாழ்ந்த மாண்பையும், இன்று ஒன்னலர் சிறையிற் பட்ட தாழ்வையும் எண்ணி,எண்ணி மாழ்குவார்கள். "பிணம் வெண்டுண்டு கிடக்கும் களத்தில் பகைவர்கள் வாளால் மாய்த்திருப்பினும், வேலால் வீழ்த்தியிருப்பினும், கணையால் கொன்றிருப்பினும், எமக்கு வாழ்வுடையதாகும். சிறை செய்து பகைவர் எம்மை சிறுமைப் படுத்தினர். கொடியீர், தீயீர், கூர்வாளைக் கொண்டு வாருங்கள். எம்முடல்களை வெட்டுங்கள். கணைகளைக் கொண்டு வாருங்கள். எம்முடம்புகளைத் துளையுங்கள். ஈட்டிகளைக் கொண்டு வாருங்கள். எம் மெய்களைக் குத்துங்கள். அவற்றால் எமக்குப் பழி

யில்லை. கவலை இல்லை. அவலமில்லை. காவலர்களே "எம் வேண்டுகோளை அரசனுக்குரையுங்கள்" என்று புலம்புவார்கள். தலையி னிழிந்த மயிர்போல் சிறையில் பட்டுத் தாழ்வடைந்த தம் நிலைமைக்கிரங்கி வருந்து வார்கள். உடல் மெலிவார்கள்.

பொய்கையார், தம்மிடம் தமிழ்நூல் கற்றவர்களும் தமிழ்மொழியை ஆதரிப்பவர்களும், புலவர்களைப் போற்றுபவர்களும், இரவலர்களுக் கீபவர்களும் நன் னிலையில் நாடு காப்பவர்களுமாகிய கணைக்கால் இரும் பொறையும் கோதை மார்பனும் கழுமல மென்னும் ஊரில் நடந்த செருக்களத்தில் சோழன் செங்கணா னுக்குத் தோற்றுக் குடவாயிற் கோட்டத்தில் சிறைப் பட்டு வாழ்கிறார்கள் என்று கேள்விப்பட்டுப் பொரு ளிழந்து புலம்புவார் போன்று புலம்பி வருந்தினர். ஒருவாறு மனந்தெளிந்து அவர்களை மீட்கத் துணிந்து, கழுமலம் புகுந்து சோழன் செங்கணான் சேரர்களை வென்ற திறமையையும் படைகளைப் புறங்கண்ட பரி சையையும் உவமை யழகு பொருந்தக் களவழி நாற்பது என்னும் நூலைப் பாடிக் கைக்கொண்டு உறையூர் நோக்கிப் புறப்பட்டார்.

மெய் நூலுணர்ந்த பொய்கையார் உள வருத்தத் தோடும் உடல் வருத்தத்தோடும் ஆறும் கழனியும் கடந்து வழி நடந்து சென்றார். ஒரு பொய்கை புலவர் மெலிவைப் பார்த்துத் தாமரையாகிய முகத்தைக் காட்டிக் குவளை மலர்களாகிய கண்களால் கண்ணீர் வடித்துப் பாசியாகிய கூந்தலை விரித்து வண்டொலி

யூால் தன் வருத்தந் தெரிவித்தது. புலவர் அதனைக் கண்டு தாமும் வருந்தி வழிநடந்தார். ஒரு பக்கம் வேடரால் வளைக்கப்பட்ட மான் இண்டின் புதரினுட் புகுந்து தன்மயிர்சு இழந்ததனுல் உளம் வருந்தி உயிரிழந்தது. புலவர் அம்மானைக் கண்டு தாமும் வருந்திச் சென்றார். தோண்டப் பட்ட பொய்க்குழியில் அகப்பட்ட களிறொன்றினை வேறொரு களிறு கை கொடுத்து எடுப்பதைக் கண்டு அசங்களித்து நடந்தார். ஒரு சோலை பொய்கையார் வருகையை அறிந்து, பூம்பந்தரால் நிழல் செய்து, பல கனிகளையுங் கொடுத்து உண்பித்தது. புலவர் பசியை நீக்கிக்கொண்டு காவிரியின் கரை வழியே நடந்து பொய்கைகளையும் பொழில்களையும் கடந்து உறை யூரை அடைந்தார்.

உறையூர் அகழும் மதிலும் சூழ்ந்த பெரு நகரம். பல தொழிலாளர்களையும் தன்னகத்தேயுடையது. புலவர் அந்நகரினுட் சென்றார்.

மணவினைக்காகும் மலர் தொடுப்பாரையும், இரு செவி குளிர இசை பயில்வாரையும், அரமியத்திருந்து பந்தாட்டயர்வாரையும், மல் வில் கூர்வேல் வாள் பயில்வாரையும், கொல்லயில் வடித்துக் கூர்செய் வாரையும்,மரவினை பொன்வினைமகிழ்ந்து செய்வாரை யும், அரவுரி யன்ன அறுவை நெய்வாரையும், தொல் காப்பியக் கடல் தோய்ந்தெழுவாரையும், பல் காப்பி யப் பொழில் பார்த்துவப்பாரையும், திருவாசக நறுந் தேனுகர்வாரையும், வள்ளுவன் பொய்யா மறை

பயில்வரையும், உள்ளம் உவகை கொள்ளக் கண்டு கண்டு அரண்மனையை அடைந்து தான் பாடிய களவழி நாற்பது என்னும் ஏட்டினைக் கையி லேந்திக் கொண்டு அமைச்சர்களோடும் புலவர்களோடும் பொற்றவிசில் அமர்ந்திருந்த சோழன் செங்கணானை அணுகி, "வாழ்க மன்னவ! வாழ்க நின் சுற்றம் என்று வாழ்த்திக் காடும் மலையும் கடந்து உயர்ந்த புகழை யுடைய உறையூரை அடைந்தேன். அரசே கழுமலம் புகுந்து கடும்போர் செய்த நின் திறமையைக் கேள் விப்பட்டேன். நின்னுடைய செயற் கருஞ்செயலைச் செய்யுளில் வைத்துப்பாடும் ஆற்றலிலேன். என்னுடைய அவா என்னை ஊக்கியதால் யான் ஒரு சிறு நூலியற்றினேன். அதன் பெயர் களவழி நாற்பது என்பது.காவல! அதனைக் கேட்பதற்குச் செவிதரல் வேண்டும்" என்று கூறி நாண் ஞாயிறு முதலாகவுள்ள நாற்பது வெண்பாக்களையும் சொல்லி,அதன் கருத்தையும், உவமைகளையும் பொருள்களையும் பிற அழகுகளையும் விரித்துரைத்தார். புலவர் பாட்டையும் உரையையும் கேட்டுச்சோழன் செங்கணானுடையமுகம் மலர்ந்தது. முடியசைவுற்றது. தோள்கள் பூரித்தன. புன்னகை அரும்பியது. சோழன் முன்னால் செய்த போர் நிகழ்ச் சிகளை எண்ணினான். புலவர் பாடல்களையும் எண்ணினான். பாடல்களிலுள்ள உவமைகளையும் பொருள் களையும் நினைந்து நினைந்து உள்ளம் பூரித்தான். அரசன் புலவனுக்கு அருகில் இருக்கை தந்து அதில் இருத்தினான். புலவருக்கு உணவு உண்பித்து உப சரித்தான்.

சின்னாள் சென்றபின், சோழன் செங்கணான் பொய்கையாருக்குப் பரிசில் தருவதற் கெண்ணி, அவரையும் அருகிருத்தி ஏவலர்களை யழைத்து, புல வருக்குப் பொன்னும் மணியும் பூணும் ஆடையும் வேழமும் வேறு பொருள்களும் கொண்டு வருமாறு பணித்தான். அப்பொழுது, புலவர் எழுந்து நின்று "வேந்தே! யான் கூறுவதில் வெறுப்புக் கொள்ள லாகாது" என் மனம் நீ இப்பொழுது கொடுப்பதற் குக் கூறிய பொருள்களைப் பெறுவதற்கு எண்ண வில்லை. எண்ணியது வேறொன்று. அதனைக் கொடுப் பதற்கு உடன்படல் வேண்டும். நின்னால் செருக் களத்தில் பிடிக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட் டிருக்கும் சேர மன்னரிருவரும் என் மாணாக்கர்கள். தமிழ்நாட்டரசர் மூவரும் ஒருவர்க்கொருவர் உற வின் முறையினர். மூவரும் தமிழ் மொழியை வளர்க் கும் பெருந்தகையாளர்கள். பிறவாயாக்கைப் பெரு மானுக்கு அடியார்கள். வடநாட்டு மன்னர்கள் வலி மையை அடக்கித் தென்னாடு காக்கும் சிறப்புடைய வர்கள். தமிழ்நாட்டு மூவரசர்களில் சோழர்களும் பாண்டியர்களும் இன்புற்று வாழும் பொழுது சேரர் துன்புறுவது அறமன்று; ஆதலின் அரசே! சோழர் தோன்றலே! சினந் தணிந்து அருள் செய்யவேண்டும். நின்னோடு பகைத்த மன்னர்களைப் பலரும் நகைத் தார்கள். சிறையிலடைத்து அவர்களை நீயும் தண்டித் தாய். அரசே! என் மனம் மகிழுமாறும் யான் செம் மாந் தேகுமாறும் எனக்கு நீ கொடுக்கும் பரிசில் பொன்னன்று; வேறு பொருளன்று; எம் மாணவர்

களேயாவார்கள். அவ்விருவர்களையும் எனக்குப் பரிசிலாகக் கொடுத்தருளல் வேண்டும். ஞாயிறு போலவும் திங்கள் போலவும் மண்ணில் நிலை பெற்று நீ வாழ்வாயாக'' என்று பணி மொழியால் வேண்டிக் கொண்டார். சோழனும் கேட்டு மனம் நெகிழ்ந்து மறுத்துரைக்க மனமின்றி உடன்பட்டுப் புலவர் வேண்டிய பரிசில்களைக் கொடுப்பதற்குப் புலவரோடும் அமைச்சரோடும் சிறைக் கூடத்திற்குப் புறப்பட்டான்.

## மீட்சி

சிறையி லடைபட்டு வருந்தும் சேரமன்னரிருவருள் கணைக்கா லிரும்பொறை மன அமைதி யின்றி வாழ்ந்துவந்தான். நெட்டுயிர்ப்புற்றுப் பற்பலநினைந்து புலம்பினான். கல்விழியருவிபோல மார்பில் கண்ணீர் வடித்தான். பேழையு ளடங்கிய பாம்புபோல அடங்கி ஒடுங்கினான். வேழ முண்ட விளங்கனி போல உள்ளீடொழிந்து உவகை யிழந்தான். முகில் கண்ட குயில் போல மகிழ்வு ஒழிந்து வாயடங்கினான். அழல்படு தளிர்போல உடல் தளர்வடைந்தான். புகைபடு ஓவியம்போல முகவொளி யிழந்தான். உணவு உண்ணுவதையும், காய்கனி தின்னுவதையும், பால் பருகுவதையும் விட்டொழித்தான். நீருண்டு சின்னாள் வாழ்ந்து வந்தான்.

மன்னன் கணைக்கா லிரும்பொறை உடல் மெலிந்து உளம் வருந்திச் சிறையி லுறையும் நாளில், ஒரு நாள் நீர் வேட்கை மிகுந்தது. நீர் அருகி லில்லை. எதிரில் ஏவலாளனொருவன் இருந்தான். செங்க

ணுண்டத்திலிருந்த சினத்தினல் வேலைக்காரனை வெகுண்டு விளித்துப் பருகு நீர் கொணரப்பணித் தான். ஏவலாளனும் சினம் எய்தி, "நீ அரசன் அல்லை. அமைச்சன் அல்லை. எயிறிழந்த அரவம் நீ. எனக்கு உண்டி கொடுப்பவ னல்லை. மெள்ளக்கொண்டு வரு கிறேன்" என்று கூறி நடந்து காலந் தாழ்ந்து வந்தான்.

ஏவலாளன் கூறிய சொற்களாகிய அம்புகள் இரும்பொறை செவிகளிற் பாய்ந்தன. புண்ணில் அம்பு புகுந்தாற்போல் இன்னல் செய்தன. இடி யொலி கேட்ட அரவம்போல் பெருந்துய ரெய்தினன். இரும்பொறை ஏவலாளன் காலந் தாழ்ந்து கொண்டு வந்து கொடுத்த நீரை மன்னன் வாங்கி மண்ணில் உகுத்தான். வேட்கை மேலும் மேலும் மிகுந்தது. நாவு உலர்ந்தது. கண்கள் இருண்டன. "உடம்பு நிலையற் றது; என்றேனும் ஒருநாள் இறந்தொழிவது. தனக் குரியநாட்டை இழந்து மாற்ருர் சிறையில் வாழ்வது மானமன்று. தனக்குரிய மயிர்களில் ஒன்றினை இழக்கு மாயின் கவரிமான் உயிர்வாழாது. என்னை மட்டு மன்றி என்னுடன் பிறந்த தம்பி கோதை மார்பனை யும் சிறைப்படுத்தினேன். சிறையில் வாழாமல் தெவ்வர் வாளால் செருக்களத்தில் மாய்ந்திருப்பின் போர் வீரனுக்குப் புகழேயாகும். சிறைப்பட்ட அன்றே இறந்திருப்பின் அப்பழி நீங்கியிருக்கும். சிறையில் உயிரோடு வாழ்ந்ததனல் என்ன உயர்வு ஏற்பட்டது? மதியிடைப்பட்ட மறுப்போல உல கம் அறியப் பெரும்பழிகொண்டேன். ஈ என இரத்

தல் இழிவென மொழிப. இரந்தபின்னும் ஏவலாளன் நீர் கொடுத்திலன். உரமில்லாதவன் என்ற பெரும் பழியோடு இரவலன் என்ற பழியையும் எய்தினேன். கட்டுண்ட ஞமலிபோலச் சிறையில் காவலுக்குட்பட்டு வாழ்வது சிறப்பாகாது. என் வாழ்நாள் கெடுக" என்று எண்ணி எண்ணி இரங்கினன். "பிள்ளை இறந்து பிறப்பினும் தசையடியாகிய மணை பிறப்பினும் அவற்றையும் ஆள் அல்ல என்று கருதாது வாளோச்சுதலில் தவறார் அரசராயிருக்க, பகைவர் வாளாற்படாது சங்கிலியாற் பிணிக்கப்பட்டநாய் போலப் பிணித்துத் துன்பத்தைச் செய்து இருத்திய கேளல்லாத கேளிருடைய உபகாரத்தான் வந்த தண்ணீரை இரந்துண்ணக்கடவேமல்லேம். என்றும் மனவலியின்றி வயிற்றின்கண் தீயை ஆற்ற வேண்டித் தாமே இரந்துண்ணும் அளவினையுடையாரை (வானுலகஞ் செல்க என வாளோச்சுதற்கு) அவ்வரசர் பெறுவார்களோ இவ்வுலகத்தின் கண்" என்னும் பொருள்பட,

குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆள் அன்றென்று வாளிற் றப்பார்
தொடர்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத் தீத்தணியத்
தாமிரந் துண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே"

புறம்—74

என்னும் பாட்டைப் பாடி எழுதினன். துயர்

மிகுதியால் தன்னைப் பெற்றெடுத்து வளர்த்த மண்மகள் மடியில் விழுந்தான். அம்மங்கை அவனைத் தன் மடியில் அமைதியிற் கிடத்தினள். இமை திறவாமல் நெடுந்துயில் கொண்டான் நில மன்னன். செந்தமிழ்ச் செல்வி அவனை வருக என்று அழைத்துப் பிறவாயாக்கைப் பெருமானிடம் சேர்த். தாள்.

சோழன் செங்கணான் பொய்கையாரோடும் அமைச்சர்களோடும் குணவாயிற் கோட்டம் வந்தடைந்தான். சேர மன்னரிருவரில் ஒருவனாகிய கோதை மார்பன் சிறையை அடைந்து விடுவித்து அவனையும் அழைத்துக் கொண்டு கணைக்காலிரும் பொறை இருக்கும் சிறையை அடைந்தான். அவன் நிலத்தில் நெடுந்துயில் துயின்று கொண்டிருந்தான். உறங்குகின்றான் என்று சென்றோரனைவரும் சிறிது நேரம் தங்கியிருந்தார்கள். உயிர்ப்பின்றியும், விழிப்பின்றியும் அசைவின்றியும் கிடப்பதைக் கண்டு நெருங்கி 'மாணவ' என்று பெய்கையார் எழுப்பினார். மெய்யில் கை வைத்து 'வேந்தே' என்றனர். உடல் அசைந்திலது. உயிர்ப்பும் விழிப்பும் காணப்படவில்லை. பொய்கையார் அந்தோ! அந்தோ!! என்று அழுதார். நிலத்தில் விழுந்தார். புரண்டு புலம்பினார். கோதை மார்பனும் சோழன் செங்கணானும் அமைச்சரும் பிறரும் இரும்பொறை இறப்பினுக்கு வருந்தினர்.

இரும்பொறை எழுதிய பாட்டினை எடுத்துப் படித்தனர். ஏவலனை அழைத்து நிகழ்ச்சியைத் தெரிந்

தனர். மன்னன் ஏவலனைத் தண்டித்தான். இரும்பொறை மாய்வையும் மானத்தையும் நினைந்து நெட்டுயிர்ப்புற்றான். அவன் உடம்பிற்குச் செய்கடன் செய்தார்கள். பொய்கையார் சிறையினின்றும் விடுதலை செய்யப்பட்ட கோதை மார்பனோடு மனம் வருந்தி வஞ்சிமா நகருக்கு மீண்டார்.

சிறையில் புகுத்தி இரும்பொறையை இறப்பித்த பழியினைத் தீர்க்க நினைந்து, சோழன் செங்கணான் அச்சிறையிருந்த இடத்தில் அறச்சாலை அமைத்தான். தன்னுடைய கடவுளாகிய சிவபெருமானுக்கு மாடக் கோயில்கள் எழுபது செய்து வணங்கி வாழ்ந்தான்.

---

# 2. கோப் பெருஞ் சோழன்

## ஆட்சி

செந் நெற்பயிர்கள் தானிய மணிகளாகிய திறை களைக் கொடுக்கக், கரும்புகள் முத்துக்களை நல்கக், கமுகுகள் பவழங்களைச் சொரியத், தென்னைமரங்கள் நிழல் செய்ய, மாங்குயில்கள் வாழ்த்தப், பறவைகள் முரசொலிக்கக், கிள்ளைகள் புகழெடுத்துரைக்க, மலைபடு பொருள்களைக் கவர்ந்து பொழில் வளம் வாரி ஆரவாரத்தோடு செல்லும் காவிரி என்னும் மங்கையை மணந்த கரிகால் வளவன் வழியில் வந்தவன் கோப்பெருஞ் சோழனென்னும் கொற்றவன் இவன் செந்தமிழ் மொழியாகிய தேனை உண்பவன். புலவர்களுக்கு நிழல் தரும் பூம் பொழில் போன்றவன். மாற்றார்க்கு அசைந்து அடி பெயராத மாமலை போன்றவன். வஞ்சகமில்லா நெஞ்சையுடையவன். உண்மை பேசும் உயர்குண முடையவன். மறங் கடிந்து அறஞ்செய்யும் மாண்புடையவன். கந்தழிக் கடவுள் கழலிணையல்லது பிறரை வணங்கியறியாத சென்னியை யுடையவன். மன்னர் நெருங்கி மணி முடிகளால் வணங்கிய புண்ணன்றி வேற்று வேந்தரிடம் நடந்து புண்படாத காலையுடையவன். வலிய படைகளையுடையவன். புலிபொறித்த கொடியை யுடையவன். கொன்றை மாலையை அணிபவன். இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு, மீன்

கண் அளவும் வெற்றிடமின்றிக் குவளை மலரிலிருந் தும் தாமரை மலரிலிருந்தும் தேன்சிந்தி வழிந்தோட ஏறு பூட்டிக் கழனிகளை உழும் உழவர் துழனியும், மதகுகளில் நுழைந்து, சங்குகள் ஈன்ற முத்துக்களை வாரிக்கொண்டு, வரால்கள் புரண்டோடக் கால்களில் செல்லும் நீரோதையும், சிற்றிடைக் கடைசியர்கள் சேறு திருத்தி நாறு நடும் இசையொலியும், ஆமை களை அடுப்பாக வைத்துச் சங்குகளை மட்கலமாக அவ் வடுப்பி லேற்றிச் செங்கரும்பீன்ற செழு முத்துக் களை அரிசியாகப் போட்டுச் சிறுசோறு சமைத்து உண்டு விளையாடும் சிறுமியர் அரவமும், கங்குவளை மலர்கள் தங்களுக்குப் பகையாகுமென்றும், தாமரை மலர்கள் தங்கள் முகங்களுக்குப் பகையாகுமென்றும் நினைந்து, வயல்களில் அவைகளை களை எடுக்கும் கடைசியர் அம்மையும், நெல் லறுத்துக் களத்தில் பரப்பி அதரி திரித்துப் பதர் களைந்து காவலனுக்கு இறை தரும் கலிப்பும், பாவலர்க்குக் கொடுக்கும் பாடும், தங்கள் ஏவலர்க்குக் கொடுக்கும் இசையும் கடலொலி போலத் தொடர்ந்து முழங்கும் இடம் அகன்ற சோழநாட்டை, அம்மன்னன் தன் இளங்குரு ளையைக் காக்கும் புலியைப் போலக் காவல் செய்து வந்தான்.

சோழ நாட்டில் குன்றம் போன்ற சிவபெருமான் கோயில்கள் பல உள்ளன. விண்ணளாவிய பொற் குடங்கள் விளங்கும் வெண் சுதை மாடங்கள் எண் ணிலாதன எவ்விடத்தும் காணப்படும். மன்னர் மகா ரும் வணிகச்சிருரும் பொற்றேரூர்ந்து சுடை கற்பார்

கள். மின்னிடை நுடங்கப் பொன்னிழை புரள அரி வையர்கள் அன்னம் போன்று நடப்பார்கள். கரை புரண்டோடும் காவிரி யாற்றில் இளைஞர்கள் கரை யருகிலுள்ள மரத்திலேறித் துடுமெனப் பாய்ந்து மண லெடுத்து விளையாடுவார்கள். குழ லொலியோடும், மாறுபடாது இன்னிசை பாடுவார்கள். ஆடரங்கில் நங்கையர்கள் நடமாடுவார்கள். பொன்னுலக மென் பது ஐம்பொறிகளுக்கும் ஆர இன்பமளிக்கும் பொன்னி நாடேயாகும் என்றும், பழைமையான மொழிகளில் வடமொழி முதலியன வழக்காெழிய, இறவாத சிவபெருமானைப் போல இறவா தியங்கி இன்பந்தருஞ் செந்தமிழே தெய்வ மொழியாகும் என்றும், புகழ்ந்து உள்ளம் பூரித்து மக்கள் வாழ்வர். கோப்பெருஞ் சோழன் நல்லறங்கள் பலவற்றை நன்கு செய்தான். செந்தமிழைச் சீர்பெற வளர்த்தான். இருங்கோ, இளங்கோ என்னும் இருமக் களைப் பெற்று மனைவியோடு மலரும் மணமும் போல மனம் ஒன்றி வாழ்ந்தான்.

## ஒத்தவுணர்ச்சி

மெல்லிய தளிர்களுடைய சந்தனமரங்கள் நெருங் கிய சோலையிலிருந்து தோன்றிப், பொன்னிறமுடைய கொன்றை மலர்களிலுள்ள மகரந்தப் பொடிகளை அளைந்து, மலர்ந்த மல்லிகை மலர்களை முகர்ந்து, நறுஞ்சுவைக் கனிகளை அசைத் தாட்டி விளையாடி மெய்க்கு இன்பந்தரும் தென்றல் உலாவுஞ்செந்தமிழ்ப் பாண்டி நாட்டிடை அறிவுடை நம்பி என்னும் அரசன்

ஆண்டு வந்தான். அவன் கற்றறிந்த காவலனாகியும் பா மொழியும் பாவலனாகியும் விளங்கியவன். "படைக் கப்படும் செல்வம் பலவற்றையும் படைத்துப் பலரு டனே கூட உண்ணும் உடைமை மிக்க செல்வத்தை யுடையோராயினும் காலம் இடையே உண்டாகக் குறுகக் குறுக நடந்து சென்று சிறிய கையை நீட்டிக் கலத்தின்கட் கிடந்ததனைத் தரையிலே யிட்டும், கூடப் பிசைந்து தோண்டியும்; வாயாற் கவ்வியும், கையால் துழாவியும், நெய்யை யுடைய சோற்றை உடம்பின்கட் படச் சிதறியும், இங்ஙனம் அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வரை இல்லாதார்க்குப் பயனாகிய முடிக்கப்படும் பொருள் ளில்லை. தாம் உயிர் வாழும் நாளின்கண் இல்லை" என்னும் பொருள்படப்,

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்டும்
உடைப் பெருஞ் செல்வ ராயினும் இடைப்படச்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே"

புறம்—188

என்னும் பாட்டைப் பாடி நல்லிசைப் புலவர் வரிசை யில் எண்ணப்படுகின்றவன்.

இம் மன்னன் நாட்டில் களவு இன்மையால், குடி மக்கள் தங்கள் பொருள்களைக் காவல் செய்தறியார். பகைமை யின்மையினால், பழிமொழி கூறியறியார். வறுமை யின்மையால். இரவலை மேற்கொண்டறியார்.

மடைமை யின்மையால் வசை பெற்றறியார். பலரும் மனைவியர்களோடும் மக்களோடும் உற்ருர் உறவின ரோடும் கவலையின்மையினுல் நீண்ட வாழ் நாட்களைப் பெற்றுப் பிணியின்றி வாழ்ந்து வந்தனர்.

அறிவுடை நம்பியின் ஆளுகைக் குட்பட்ட ஊர் களில் பிசிர் என்பதொன்று. பிசிர் கடற்கரையைச் சார்ந்த ஒரு சிற்றூர். அவ்வூரில் ஆந்தை என்னும் புலவ ரொருவர் இருந்தார். பிசிரென்னும் ஊரில் வாழ்ந்து வந்ததனுல் இவர் பிசிராந்தையார் என்று அழைக்கப் பட்டு வந்தார். இவர் நல்ல வுள்ளமும் நல்ல எண்ண மும் நல்ல செய்கையு முடையவர். உலகியல் அறிந் தவர். செங்கோல் முறைமையில் தேர்ச்சியுடையவர். பைந்தமிழை வளர்ப்பதில் பற்றுடையவர். நல்லவ ரோடு நட்புக் கொள்ளுமியல்பினர். இவருக்குத் தம்மனம் போல் ஒழுகும் மனைக்கிழத்தி இருந்தாள். மக்களில்லா மனக் குறையில்லாதவர். ஏவலாளர்கள் இவர் எண்ணத்தின் படியே வேலை செய்வார்கள். ஊரிலுள்ளா ரனைவரும் கற்றறிந்தடங்கிய சான்ருேர் ராவார்கள். இவர் நெடு நாள் வாழ்ந்தும் மனக்கவலை இன்மையினுல் நரை திரை யின்றிப் பிணி மூப்பின்றி நடுக்கமின்றி வாழ்ந்து வந்தார்.

சோழ நாட்டிலிருந்து செங்கோல் செலுத்திய கோப் பெருஞ் சோழனுடைய குணத்தையும் அவன் அர சாட்சியையும், அவன் அறச்செயல்களையும் செந் தமிழ்க்கு அவன் செய்யுந் தொண்டுகளையும், புலவர் களைப் போற்றும் நலங்களையும், செய்யுள் செய்யும்

திறமையையும், பிறவற்றையும் பிசிரென்னும் ஊருக்கு வந்த புலவர்கள் பலர் பிசிராந்தையாரிடம் மிகவும் புகழ்ந்து கூறினார்கள்.

சோழன் அண்மையில் இல்லாமையினால் அவனை அவர் சென்று காணமுடியவில்லை. அவனைக் காணாமலே அவனிடம் அன்பு செலுத்தினர். பிசிராந்தையார் தன்னிடம் அன்பு வைத்துத் தன் நலங்களையும் செயல்களையும் கேட்டறிவதைக் கோப்பெருஞ் சோழன் புலவரால் கேட்டறிந்தான். அவருடைய குணங்களையும், திறமைகளையும், செயல்களையும் பாண்டிய நாட்டிலிருந்து தன்னிடம் வருகின்ற புலவர்களிடம் கேடு மகிழ்வான். கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் இங்ஙனம் ஒருவரை ஒருவர்காணாமலே ஒத்த வுணர்ச்சியோடு நண்பர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் பிசிராந்தையார் தம் நாட்டு மன்னனாகிய அறிவுடை நம்பியைக் காண விழைந்தார். நடந்து நடந்து மதுரைமாநகரை அடைந்து அரண்மனையினுட் சென்று அரசனைக் கண்டார். அரசன் புலவரை வரவேற்று இருப்பதற் கிருக்கை தந்தான். "காய்த்த நெல்லை யறுத்துக் கவளமாகக் கொள்ளின், ஒருமாவிற் குறைந்த நிலத்தில் கதிரும் பலநாளைக் காகும்; நூறு செய்யாயினும் யானை தனித்துப் புக்கு உண்ணுமாயின் அதனது வாயின்கட் புகுந்த நெல்லினும் கால் மிகவும் கெடுக்கும்; அப்பெற்றியே அறிவுடைய அரசன் இறைகொள்ளும் நெறியை அறிந்து கொள்ளின் அவன் நாடு கோடி பொருளை ஈட்டிக்

கொடுத்துத் தானும் மிகவும் துழைக்கும். வேந்தன் அறிவால் மெல்லியனாகி நாடோறுந் தரமறியாத உறுதி கூறாது அவன் விரும்புவதனையே தானுங் கூறும்ஆரவாரத்தையுடைய சுற்றத்தோடுகூடி அன்பு கெடக் கொள்ளும் பொருட்டொகுதியை விரும்பின் "அந்தயானைபுக்க புலம்போலத் தானும் உண்ணப்பெருன்; உலகமுங் கெடும்" என்னும் பொருள்படக்,

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறு செறுவாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கொடுக்கும்.
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்.
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே

புறம்—184

என்னும் பாடலைப் பாடி, இறை கொள்ளும் முறையைத் தெரிவித்தான்.

பாண்டியனும் பாவலரும் கலந்த அன்பினால் உரையாடிக் கொண்டிருக்கும்பொழுது தன்னுடைய நெருங்ஙிய உறவினராகிய கோப்பெருஞ் சோழனுடைய அருங்குணங்களைப் பற்றியும், ஆற்றுந் திறங்களை பற்றியும், செய்யும் நல்லறங்கள் பற்றியும், தமிழுக்குச் செய்யும் தொண்டுபற்றியும் பாண்டியன் அவருக்குத்

தெரிவித்தான், பிசிராந்தையார் தம்நண்பன்புகலைழக் கேட்டு நனிமகிழ்ந்தார்; பின்பு பாண்டியனிடம் விடை பெற்றுப் பிரிந்து அரண்மனையை அகன்றார்.

பிசிராந்தையாருக்குக் கோப் பெருஞ்சோழனை ஒருமுறையாவது பார்க்கவேண்டும் என்ற எண்ணம் மிகுந்தது. மதுரையிலிருந்தே உறையூர்சென்று மீளலாம் என்று எண்ணினார். எண்ணி உறையூர்நோக்கி வழி நடக்கும்பொழுது "சென்று மீள்வதற்குப் பல நாளாகுமே; மனைவி முதலியோர்களைப் பிரிந்தும் பல நாளாயின. உறையூர் போய் மீள்வதாக அவர்களிடம் சொல்லவில்லை. தம் வருகையை எதிர் நோக்கிக் கொண்டிருப்பவர்கள் மேலும் பல நாள் வராதிருந்தால் வருந்துவார்களல்லவா' என்று நினைப்பார்; மீள்வார்; சென்று திரும்புவதே நன்று என்று செல்வார். பின்பு மீள்வார். பாவிலாடுங் குழல் போல அங்குமிங்கும் அலைவார். புலவன் அங்குமிங்கும் வெயிலில் அலைவது கண்டு வருந்திக் கதிரவன் தன் கதிர்களைச் சுருக்கி மேலை வெற்பி லிவர்ந்தான், இரை தேடிப்பல விடங்களுக்குஞ் சென்றிருந்த புட்கள் தங்கள் கூடுகளுக்கு மீண்டன. பொய்கைகளில் ஆம்பல் மலர்கள் மலர்ந்தன. கல்லார் மனம் போல் காரிருள் செறிந்தது திங்கள் வானில் திகழ்ந்தது. புலவர் தம் ஊர்நோக்கி நடந்தார். நடந்து செல்லும்பொழுது ஓரன்னம் தென்குமரியாடித்தன் பெடையோடுவடக்கேசென்று கொண்டிருந்தது. அதனை நோக்கிக் கோப்பெருஞ் சோழனிடத்திலுள்ள அன்பினால் "அன்னச் சேவலே! அன்னச் சேவலே! கொல்லுதலைப் பொருந்திய வெற்

றியையுடைய அடுபோரண்ணல் தன்னுட்டைத் தலையளி செய்யும் விளங்கிய முகம் போல இரண் பங்கும் வந்து பொருந்திய மதியம் அரும்பும் நிலா விளங்கும் தமியோராயினுர்க்கு மயக்கத்தைச் செய் யும் மாலைப்பொழுதின்கண் யாம் செயலற்று வருந் தக்குமரியாற்றினது பெரியதுறைக் கண்ணே அயிரையை மேய்ந்து வடதிசை இமயமலைக்கண்ணே போகின்ருயாயின், இவ்விரண்டிற்கும் இடையதாகிய நல்ல சோழநாட்டின்கண் சென்று பொருந்தின், உறையூரின்கண்ணே நினது குறும்பறையோடு தங்கி வாயில் காவலர்க்கு உணர்த்திவிடாதே தடையின்றிக் கோயிற்கண்ணே புக்கு எம்முடைய பெருங்கோ வாகிய கிள்ளி கேட்பப் பெரிய பிசிரென்னும் ஊரின் கண் ஆந்தையுடைய அடிக்கீழென்று சொல்லின், மாட்சிமையை யுடைய நினது இன்புறும் பேடை பூணத் தனது விருப்பமுறும் அணிகலத்தை நினக்கு அளிப்பன் என்னும் பொருள்பட,

அன்னச் சேவல் அன்னச் சேவல்
ஆடுகொள் வென்றி அடுபோ ரண்ணல்
நாடுதலை யளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலையாம் கையறு பிணையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின் இடையது
சோழ நன்னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்குஎம்

பெருங்கோ கிள்ளி கேட்க இரும்பிசிர்
ஆந்தை யடியுறை யெனினே மாண்டநின்
இன்புறு பேடை யணியத்தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே புறம்-67

என்னும் பாட்டைப் பாடித் தன் அன்பைப் புலப் படுத்தி அன்னத்தை விடுத்தார். சோழனை நினைத்துக் கொண்டே நடந்து தன்னூராகிய பிசிரை அடைந் தார்.

## வடக்கிருப்பு

பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் ஒத்த உணர்வோடு நண்பர்களாய் வாழ்ந்து வரும் காலத்தில், சோழனுக்கும் அவன் மக்களுக்கும் பிணக்கு ஏற்பட்டது. அரசியல் காரணமாகவோ, மொழி காரணமாகவோ, சமயங் காரணமாகவோ, மக்களுடைய ஒழுக்கத் தவறு காரணமாகவோ அப் பிணக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். சோழனோடு உடனிருந்த புலவர்களுளொருவராகிய புல்லாற்றூர் எயிற்றியனார் பொதுவாக அப்பிணக்கைப் பகைமை யென்றே கூறுகிறார். பகைமை கருத்து வேற்றுமை யோடு நிற்க வில்லை. சொல் வேற்றுமையோடு நிற்க வில்லை. நாளுக்கு நாள் முற்றிச் செய்கைக்கு வந்து விட்டது. மக்கள் தங்களைப் பெற்றெடுத்த தந்தை யோடு போர் செய்வதற்குப் புறப்பட்டு விட்டார்கள். சோழனும் போருக் கஞ்சியவ னல்லன். மன வேற் றுமை தான் பெற்று வளர்த்த மக்களோடும் போர் செய்வதற்குத் துணிந்துவிட்டது. படைகளைத் திரட்

டிக்கொண்டு போருக்குப் புறப்பட்டு விட்டான் சோழன்.

சோழன் பன்னூல்களையும் கற்றறிந்தவன். அற வியல்புகளை ஆராய்ந்தறிந்தவன். பல புலவர்களைத் தனக்கு உற்றவராகக் கொண்டு அவர்களோடு உரை யாடிப் பலவற்றை உணர்ந்து கொள்பவன். புலவர் களில் புல்லாற்றூர் எயிற்றியனார் என்பவர் ஒருவர். அவர் அரசனும் அவன் மக்களும் ஒருவரோடொரு வர் கொண்ட பகைமையை அறிந்தவர். தன் மக்கள் மேல் மாறுகொண்டு மன்னன் போருக்கெழுவது அவ ருக்கு அறமாகத் தோன்றவில்லை. மன்னன் செல்கை யைத் தடுக்க எண்ணினார் புலவர்.

"மடுத்தெழுந்த போரின்கட் கொன்ற மிகுதி பொருந்திய வலிய முயற்சியையுடைய வெண் கொற் றக் குடையால் உலகத்தை நிழல் செய்து புகழால் விளக்கும் வெற்றியையுடைய வேந்தே" கிளர்ந்த நீரையுடைய கடல் சூழப்பட்ட இப்பரந்த இடத்தை யுடைய உலகத்தின்கண் நின்னிடத்துப் போர் செய்ய வந்த இருவரையும் கருதின், பழையதாய்த் தங்கப் பட்ட வலியையுடைய நின் பகை வேந்தராகிய சேர பாண்டியரு மல்லர், போரின்கண் விரும்பிய காட்சி யுடனே நின்னோடு பகையாய் வேறுபட் டெழுந்த அவ்விருவர்தாம் நினையுங்காலத்து நீயும் அவர்க்கு அத் தன்மையையாகிய பகைவனல்லை. பகையைக் கொல் லும் யானையை யுடைய தலைவ! நீ பரந்துபட்ட நல்ல புகழை இவ்வுலகத்துப் பொருந்தித் தேவருலகத்தின்

கட் போய்ப் பின்பு நீ ஒழித்த அரசாட்சி உரிமை அவர்க்குரித்து; ஆதலால், அப்பெற்றித்தாதலும் அறிவோய்! பெரிதும் இன்னடுங் கேட்பாயாக. புகழை விரும்புவோய்! நிலைபெற்ற வலியோடு நின்னைக் கருதிப் போர் செய்வதற்கு எழுந்திருந்த சூழ்ச்சியில்லாத அறிவையுடைய நின் புதல்வர் தோற்பின் நினது பெரிய செல்வத்தைஅவர்க்கொழிய யாவர்க்குக் கொடுப்பை; போரை விரும்பிய செல்வ! நீ அவர்க்குத் தோற்பின், நின்னை இகழும் பகைவருவப்பப் பழியை உலகத்தே நிறுத்துவை. ஆதலால், ஒழிவதாக நின்னுடையமறன். கடிதின் விரைந்தெழுந்திருப்பாயாக. நின்னுடைய உள்ளம் வாழ்வதாக. அஞ்சினோர்க் கரணுகும் நினதுடி நிழல் மயங்காமற் செய்தல்வேண்டும் நல்வினையை; விண்ணோரது பெறுதற்கரிய உலகத்தின்கண் அமைந்தவர் விரைந்த விருப்பத்தோடு விருந்தாக ஏற்றுக்கொள்ள'' என்னும் பொருள்பட.

மண்டம ரட்ட மதனுடை நோன்றாள்
வெண்குடை விளக்கும் விறல் கெழு வேந்தே
பொங்குநீ ருடுத்த இம்மலர் தலை யுலகத்து
நின்றலை வந்த இருவரை நினைப்பின்,
தொன்றுறை துப்பின் நின்பகைவரு மல்லர்.
அமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்
நினையுங் காலை நீயும்ற் றவர்க்கு
அனையை யல்லை அடுமான் றோன்றல்
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
உயர்ந்தோ ருலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்குரித் தன்றே.

அதனால், அன்ன தாதலும் அறிவோய் நன்றும்
இன்னும் கேண்மதி யிசை வெய் யோயே,
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையின்
இகழுந ருவப்பப் பழியெஞ்சுவையே.
அதனால், ஒழிகதி வல்லிரைந்துலத்தை நின்மறனே.
எழுமதி வாழ்க நின்னுள்ளம் அழிந்தோர்க்கு
ஏம மாகும் நின் ருள்நிழல் மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே வானோர்
அரும்பெற லுலகத் தான்றவர்
விதுப்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே.

புறம்-213

என்னும் பாட்டைப் பாடி அரசனுக்கு அறம் அறிவுறுத்தினர். அவனும் இடு நீற்றால் பை யவிந்த நாகம்போல் சினந் தணிந்து செருமேற் செல்லலை விடுத்தான்.

மன்னனுக்கு உலக வாழ்க்கையில் வெறுப்பேற் பட்டது. மக்களிடத்தேற்பட்ட வெறுப்பினால் அவன் மனைவியையும் உறவினரையும் அமைச்சரையும் உலகத்தையும் துறக்க எண்ணினான். வடக்கிருந்து உயிரைத் துறக்க முடிவு செய்தான். மனைவி முதலிய அனைவரையும் பொன் முதலிய பொருள்களையும் நகர முதலிய இடங்களையும் துறந்து வடக்கிருத்தற் கெழுந்தான்.

மன்னன் புறப்பாடு, நகரமக்களுக்குத் தெரிந்தது. அமைச்சர், புலவர் முதலியோர்களுக்குத் தெரிந்தது.

அறநெறியில் ஆட்சி செய்த அரசனைத் துறப்பதற்கு வருந்தினார்கள். முதியவர்களும், இளைஞர்களும், மங்கையர்களும், மன்னர்களும், அமைச்சர்களும், புலவர்களும், படை மறவர்களும், தலைவர்களும் அரண்மனையை அடைந்தார்கள். வடக்கிருத்தற்கெண்ணிய மன்னனைச் சூழ்ந்து கண்ணீர் வடித்தார்கள் அவன் செல்கையைத் தடுத்தார்கள். தடுத்தும் மன்னன் தான் மேற்கொண்ட கொள்கையை மாற்றவில்லை. அரண்மனையை விட்டகன்றான். அரண்மனை மதியமிழந்த வானமாயிற்று. பூ நீங்கிய பொய்கையாயிற்று.

கோப்பெருஞ் சோழன் நகர் வழியே நடந்து சென்றான். அமைச்சர், புலவர் தானைத் தலைவர்கள், பொருவேல் மறவர்கள், நகரமக்கள் முதலியோர் அவனைப் பின் தொடர்ந்தனர். வீடுகளிலிருந்த மங்கையர்கள் வேந்தன் செல்கையைக் கண்டு விம்பியழுது கண்ணீர் வடித்தார்கள். சிறுவர்கள் செயலற்று நின்றனர். இளைஞர்கள் தொழுது அழுதனர். புலவர்கள் புலம்பினர். மற்றவர்கள் மனம் வருந்தினர். அமைச்சர்கள் அகம் நெகிழ்ந்து உருகினார்கள்.

நகர் கடந்து மக்கள் பின்றொடர வடக்கு நோக்கி நடந்தான் மன்னன். வானம் பொய்ப்பினும் மன்னுயிர் வளர்க்கும் காவிரிக் கரையை அடைந்து மலர் மலர்ந்து, வண்டு பாடும் மரநிழலை மன்னன் நண்ணினான். தொடர்ந்த மக்களனைவரும் அவனைச் சூழ்ந்து வருந்திப் புலம்பினர். வருந்திய அம்மக்களுக்கு

அம்மன்னன் "அறவினையைச் செய்வோமோ அல்லேமோ என்று கருதி ஐயப்பாடு நீங்கார், அழுக்குச் செறிந்த காட்சி நீங்காத உள்ளத்தினையுடைய தெளிவில்லா தோர்யானை வேட்டைக்குப் போவோன் யானையையும் எளிதாகப் பெறுவன். குறும்பூழ் வேட்டைக்குப் போவோன் வறிய கையினனாயும் வருவன். அதனால் உயர்ந்த விருப்பத்தையுடைய உயர்ந்தோர்க்குத் தான் செய்யப்பட்ட நல்வினைக் கூற்றிலே அதனை அனுபவித்தல் உண்டாகுமாயின், அவர்க்கு இருவினையுஞ் செய்யப்படாத உம்பருலகத்தின்கண் இன்பம் அனுபவித்தலுங் கூடும்: அவ்வுலகத்தின்கண் நுகர்ச்சியில்லையாயின் மாறிப் பிறத்தலிலே கூடும் பிறப்பின் கண் இன்மை எய்தவுங் கூடும். மாறிப்பிறவாரென்று சொல்லுவா ருளராயின், இமய மலையின் சிகரம் ஓங்கினாற் போன்ற தமது புகழை நிலை பெறுத்தி வசையில்லாத உடம்போடு கூடி நின்றிறத்தல் மிகத் தலையாயது. அதனால் எவ்வாற்றானும் நல்வினை செய்தல் அழகிது" என்னும் பொருள் படச்,

"செய்குவங் கொல்லோ நல்வினை எனவே
ஐய மருஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே.
யானை வேட்டுவன் யானையும் பெறுமே.
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே.
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனின்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்,
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்

மாறிப் பிறப்பின் இன்மையுங் கூடும்.
மாறிப் பிறவாராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே''

புறம்-214

என்னும் பாட்டைப் பாடி விளக்கிக் காட்டித் தொடர்ந்து வந்த மக்களனைவரையும் தத்தம் மனைகளுக்கு மீளும்படி வேண்டிக் கொண்டான். தொடர்ந்து வந்தவர்கள் அவன் வேண்டுகோளுக் கிரங்கி விடை பெற்று மீண்டனர்.

மக்களை நகருக்கனுப்பியபின் மன்னன் தன்னிற் பிரியாது உடனுறையும் புலவர் சிலரோடு வடக்குநோக்கி நடந்து சென்று எழில் மிகுந்த பொழி லொன்றை அடைந்தான். மரங்கள் மலர் தூவின. குயில்கள் வம்மின் என்று வந்தாரை வரவேற்றன. கிள்ளைகள் அவர்கள் புகழைப் பாடின. அரசனும் புலவர்களும் மரஞ் செறிந்த ஓரிடத்தை அடைந்தனர். காய் கனிகளையும் அன்றிலிருந்து அருந்துவதைத் துறந்தனர். நீரருந்துவதை ஒழித்தனர். உண்ணாமலும், உறங்காமலும் உள்ளக்கோயிலி லுறையும் பிறவா யாக்கைப் பெருமானை எண்ணிக் கண்மூடி வழிபாடு செய்தனர். உள்ளத்துள்ளே அவனைக் கண்டு உவகை யடைந்தனர்.

கோப்பெருஞ் சோழன் தன் நாடு துறந்து சில புலவரோடு வடக்கிருக்கிறான் என்பதைப் பிசிராந்தையார் அறிந்தார். அறிந்ததும் தம் மனைவி மக்கள் முத

லியோரையும் பிறவற்றையும் அறவே துறந்து மன்னனைக் காணக்கருதி நடந்தார். நடந்து நடந்து சோழ நாட்டை அடைந்தார். தன்பால் அன்புடைய பிசிராந்தையார் தன்னைக்காண வருவதைச் சோழன் மெய்யுணர்வால் அறிந்தான். அறிந்து, அவரும் வடக்கிருப்பதற்கு ஓரிடம் வகுக்குமாறு,

*தென்னன் பொருப்பன் நன்னாட் டுள்ளும்*
*பிசிரோ னென்ப என்னுயிரோம் புநனே*
*செல்வக் காலை நிற்பினும்*
*அல்லற் காலை நில்லலன் மன்னே*

புறம்-215

என்று பாடித் தெரிவித்தார். புலவர்கள் மன்னன் சொல்லில் நம்பிக்கை கொள்ளவில்லை. பிசிராந்தையார் இதற்கு முன் வந்தவரல்லர். இன்ப முறுங்காலத்தில் உடனிருந்து துன்பமுறுங் காலத்தில் துறப்பது மக்களி னியல்பு. பிசிர் என்ற ஊர் நெடுந்தொலைவிலுள்ள பாண்டிய நாட்டிலிருக்கிறது என்ற காரணங்களால் ஆந்தையார் அடையார் என்று பேசிக் கொண்டிருந்தனர். மன்னன் அப்புலவர்களுடைய ஐயத்தை நீக்குவதற்கு, "ஐயப்படா தொழிமின் நிறைந்த அறிவினையுடையீர். அவன் என்னை என்றும் இகழ்ச்சியிலனாய் இனிய குணங்களையுடையவன். பிணித்த நட்பினையுடையவன். புகழ் அழிய வரும் பொய்யை விரும்பான். தனது பெயரைப் பிறர்க்குச் சொல்லும் பொழுது,என்னுடைய பெயர் பேதைமையையுடைய சோழன் என்று எனது பெயரைத் தனக்குப் பெயராகச் சொல்லும் மிக்க அன்பு பட்ட உரிமையையு

முடையன். அதற்குமேலே, இப்படியான் துயர முறுங்காலத்து ஆண்டு நில்லான். இப்பொழுதே வருவான். அவனுக்கு இடம் ஒழிக்க” என்னும் பொருள்பட,

“ஐயங் கொள்ளன்மின் ஆரறி வாளீர்
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ் கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழ னென்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்கவற் கிடமே.

புறம்-216

என்று பாடி ஐயமகற்றினர். புலவர்கள் வரும் புலவருக்கு இடம் ஒதுக்கினர்.

சிறிது நேரத்திற்குள் மன்னன் சொல் பழுதாகாமல், அங்கிருந்தா ரனைவரும் வியக்குமாறு பிசிராந்தையார் வந்து மன்னனையும் புலவர்களையும் வணங்கி நின்றார். புலவர்களில் பொத்தியாரென்பவ ரொருவர். மன்னன் சொல்லிய சொல்லிலும் பிசிராந்தையார் வருகையிலும் வியப்புக்கொண்டார். “கருதுங் காலத்து வியக்குந் தன்மையை யுடைத்து, எத்துணையும் பெரிய தலைமையுடனே கூடியும் இவ்விடத்தே இவன் சிறப்புக்களைக் கைவிட்டு வரத் துணிதல்; இவன் இவ்வாறு துணிந்த அதனினும் வியக்குந் தன்மையை யுடைத்து,வேற்று வேந்தனது நாட்டின்கண் விளக்கம் அமைந்த சான்றோன் பாதுகாத்துப் புகழ் மேம்பா

டாக நட்பே பற்றுக்கோடாக இத்தன்மைத்தாகியஓர் இன்னுக் காலத்து இவ்விடத்து வருதல். இவ்வாறு வருவன் என்று துணிந்துசொல்லிய வேந்தனது மிகு தியும் அவன் சொல்லியசொல் பழுதின்றாக வந்தவனது அறிவும் வியக்குந் தோறும் வியக்குந் தோறும் வியப்புக்கை மிக்கது. ஆதலால் தன் செங்கோல் செல்லாத தேயத்துறையும் அமைந்தோனது நெஞ்சைத்தன்னிடத்தேஉரித்தாகப்பெற்ற பழைய புகழையுடைய அப்பெற்றிப்பட்ட பெரியோனை யிழந்த இத்தேயம் என்னஇடும்பை யுறுங் கொல்லோ? இதுதான் இரங்கத்தக்கது'' என்னும் பொருள்பட

நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினும் மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே
அதனால், தன்கோ லியங் காத்தேயத் துறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை யிழந்த இவ்வுலகம்
என்னா வதுகொல் அளியது தானே

புறம் - 217

என்னும் பாட்டைப் பாடிப் புகழ்ந்தார்.

மற்றொரு புலவர் கண்ணகனார் என்பவர். அவர் "பொன்னும் பவளமும் முத்தும் நிலைபெற்ற பெரிய மலை தரப்பட்ட விரும்பத் தக்க மணியும் ஒன்றுக் கொன்று இடை நிலம்படச் சேய் நிலத்தின வாயினும் கோவை பொருந்தி அரிய விலையினையுடைய நல்ல அணிகலங்களைச் செய்யுங்காலத்து ஓரிடத்துத் தோன் றினாற்போல எந்நாளும் அமைந்தோர் அமைந்தோர் பக்கத்தராவார்" என்னும் பொருள்பட,

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பாலபரா
சாலார் சாலார் பாலரா குபவே

புறம் - 218

என்று பாடிப் பாராட்டினார்,

பின்பு, புலவர்கள் பிசிராந்தையாரைப் பார்த்து "வாழ்ந்த ஆண்டுகள் பலவாயிருக்க, உடம்பில் நரை திரையில்லாமைக்குக் காரணம் யாது" என்று கேட்டனர். பிசிராந்தையார், "நுமக்குச் சென்ற ஆண்டு கள் பலவாயிருக்க நரையில்லையாகுதல் எப்படியாயினீ ரெனக் கேட்பீராயின், என்னுடைய மாட்சிமைப் பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினார். யான் கருதிய அதனையே கருது வர் என்னுடைய ஏவல் செய்வாரும் அரசனும் முறையல்லன செய்யானாய்க் காக்கும். அதற்குமேல்

யான் இருக்கின்ற ஊரின்கண் நற்குணங்களால் அமைந்து பணியவேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினை யுடைய சான்றோர் பலராதலான் நரையிலேமாயி னேம்'' என்னும் பொருள்பட,

யாண்டு பலவாக நரையிலவாகுதல்
யாங்கா கியரென் வினவுதி ராயின்
மாண்ட என்மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும். அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே

புறம் - 219

என்று பாடித் தமக்கு நரை ஏற்படாமைக்குக் காரணங்கூறினர். பின்பு தங்கள் தங்கள் இடங்களி லிருந்து யோகஞ்செய்து வந்தனர்.

## கல் நாட்டல்

கோப்பெருஞ்சோழனோடு சென்று வடக்கிருந்த பொத்தியாருடைய மனைவி கருக் கொண்டிருந் தாள். கருவுயிர்க்குங்காலம் அண்மியது. பொத்தியார் மன்னனிடத்துள்ள அன்பினால் மனைவியை அவள்தாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டு அம்மன்னனைத் தொடர்ந் தார். பொத்தியார் மனைவி கருவுற்றிருப்பதும் கரு வுயிர்க்குங் காலம் நெருங்குவதும் அம்மன்னனுக்குத் தெரியும். மனைவி கருவுயிர்த்த தலைமகனைக் கணவன் காணவேண்டும் என்பது பண்டைக்கால வழக்கு.

பொத்தியாரை விளித்து, ஊருக்குச் சென்று மனைவி கருவுயிர்த்தபின் வருக என்று கூறினன் கோப்பெருஞ் சோழன். "செல்வக் காலத்து நீ வரையாது கொடுத்த செல்வத்தைப் பெற்று இன்புற்று வாழ்ந்த நான், நீ துன்புறுங் காலத்து என் மனைவியைக் கண்டும் அவள் பெறும் பிள்ளையைக் கண்டும் மகிழ்வது நன்றன்று. கண்களால் காணுத பிசிராந்தையார் நீ செல்வத்தில் சிறந்து வாழ்ந்த காலத்தில் வாராமல், நீ துன்புறுங் காலத்தில் வந்து நின்னோடு வடக்கிருப்பதைக்காண். மனைவியையும் அவள் பெறும் மகனையும் கண்டு மகிழ்வதனினும் நின்னோடு வடக்கிருப்பதே எனக்கு இன்பந் தருவதாகும்" என்று கூறி மறுத்தார். மறுத்தும், சோழன் சென்று வருக என்று கூற, வருந்திப் பிரிந்து வழி நடந்தார். காவிரிக்கரை வழியாக நடந்து மனைவியைக் காண்பதற்கு ஓங்குயர் மாடத்து உறையூர் வழியாகச் செல்கின்றவர் மன்னன் துறவினுல் விழவற்றுப் பாடலற்று வறிதே காணப்படும் மாடங்களையும், சிறுவர்கள் சிறு தேருருட்டி விளையாடாத தெருக்களையும், மலரும் மணியும் அணியாது வனப்பிழந்த அரிவையர்களையும், முயற்சி முகமலர்ச்சியின்றி வருந்தித் திரியும் ஆடவர்களையும், மழலையிழந்த மகார்களையும், பண்ணையும் பாட்டையும் விடுத்த பாணர்களையும் கண்டு வருந்தி அவ்வூரிலுள்ள மன்றத்தை அடைந்தார்.

உறையூர் மன்றம் மன்னன் இன்மையால் வனப்பிழந்து பாழ்பட்டிருந்தது. "பெரிய சோற்றை உண்டாக்கிப் பல்யாண்டு டாதுகாத்த பெரிய களிற்றை

யிழந்த வருத்தத்தினையுடைய பாகன் அவ்யானை சேர்ந்து தங்கிய இரக்கத்தையுடைய கூடத்தின்கண் கம்பம் வறிதே நிற்கப் பார்த்துக் கலங்கின தன்மை போல் யான் இறந்து படுதலின்றிப் பொன்னால் இயன்ற மாலையுடைய தேர் வண்மையைச் செய்யும் கிள்ளி போகப்பட்ட பெரிய புகழையுடைய பழைய உறையூரின் மன்றத்தைப் பார்த்துக் கலங்கினேனல் லனோ" என்னும் பொருள்பட,

பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
அது சேர்ந் தல்கிய அழுங்க லாலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினே னல்லனோ யானே பொலந்தார்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே

புறம்-220

என்னும் பாடலைப் பாடி வருந்திச்சென்று தன் மனைவி உறையும் ஊரையடைந்தார்

கோப் பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும், புல்லாற்றூர் எயிற்றியனாரும் கண்ணகனார் முதலி யோரும் உணவு தவிர்ந்து வெயிலென்னாமலும், மழை யென்னாமலும், அரவென்னாமலும், முதலையென்னா மலும், இருந்த இடத்திலிருந்தே உறங்கா துறங்கிச் செவிப்புலம் அறியா அகத்தொலி கேட்கும், மெய்ப் புலனறியாத் தட்பம் பெற்றும், நாப்புலனறியா நறுஞ் சுவை பெற்றும், மூக்கு அறியா நன்மணம் முகர்ந்த தும் பெறற்கரிய பெருமானைப் பெற்றின்புற்று வாழ்ந்

தனர். மரங்கள் மலர்கள் தூவி அவர்களை வணங்கின. புள்ளினம் தவ நிலையைக் கண்டு வியந்தன. கிள்ளைகள் அவர்கள் அருஞ்செயலைப் புகழ்ந்தன. பூவைகள் அவர்கள் நட்பினைப் புகன்றன. அவைகள் அருகே சென்று அரவஞ் செய்யாது அவர்களைப் போல் தாமும் கண்மூடி ஒவ்வோரிடத்திலிருந்து சிறிது நேரம் சென்றபின் நீங்கும்.

கோப் பெருஞ் சோழன் தன் தவ விளக்கினால் அகவிருள்கடிந்து இருவினையி னீங்கிப் பரமனைப் பற்றறப் பற்றிப் பெறற்கரும் பேரின்ப மெய்தினான். பிசிராந்தையார் முதலிய புலவர்களும் அவன் சென்ற நெறியை எய்தி அவனைப் போலவே பேரின்பமடைந்தனர்.

புரவலனும் புலவர்களும் வீடுபே றெய்திய செய்தியை நகர மாந்தர் அறிந்தனர். சிறியரும் முதியோரும் திரண்டு அவர்கள் தவஞ்செய்த இடத்தை அடைந்தார்கள், அமைச்சரும் அறிஞரும் கூடி ஆரஞ ருற்று நடந்தனர். உற்றாரும் உறவினரும் புலம்பி ஒருங்கெழுந்தனர். மகளிரும் மகாரும் வருந்திச் சென்றனர். படைமறவர்கள் துயருற்றுச் சோர்ந்து படர்ந்தனர். கோப்பெருந்தேவி துணையையிழந்த அன்றில் போலத் துயருற்று ஏகினாள். உடம்புகளைக் கண்டார்கள். உயிர்களைக் கண்டாரில்லை. முகங்களைக் கண்டார்கள். அவர் முகமனுரைகளைக் கேட்டாரில்லை. மன்னா மன்னா என்று அழுதார்கள். வேந்தே வேந்தே என்று தரையின்

மேல் விழுந்தார்கள். அரசே அரசே என்று அலறி யழுதார்கள். கோப் பெருந்தேவி மன்னன் மார்பில் விழுந்து வேடன் எய்த அம்பினுக்கு இலக்காகி விழுந்து வருந்தும் மயில் போல மாழ்கினாள். சென்றவரனைவரும்,

"அரசனைக் காண்பார் ஆந்தையைக் காண்பார்
இருவர் நட்பும் இனிய என்பார்
அருகு கிடக்கும் அறிவரைக் காண்பார்
பெரியருள் இவரே பெரிய ரென்பார்
நெஞ்ச மொன்றி நிலமிசை வாழ்ந்தார்
வஞ்ச மின்றி வடக்கி லிருந்தார்
துஞ்சிச் சேர்ந்தார் துறக்க மென்பார்"

என்று புலம்பினர்.

மன்னனுக்கும் அவனோடு வடக்கிருந்து வீடுபே-றெய்திய புலவர்களுக்கும் குழி யகழ்ந்து நிலமகள் மடியின்மேல் அவர்களைக் கிடத்தினார்கள். அவர்கள் பெயரையும் உருவையும் புகழையும் செயல்களையும் கல்லிற் பொறித்து நட்டு நறுமலர் சூட்டி வாழ்த்தி வணங்கினார்கள்.

## பரிசில் விடை

பொத்தியார் தம்மூருக்குச் சென்றிருந்த சின்னாளில் அவர் மனைவி ஓராண்மகவைப் பெற்றெடுத்தாள். புலவர் அம்மகவைப் பார்த்துவிட்டு, உற்றார்உறவினரிடம் தாமும் கோப் பெருஞ் சோழனோடு வடக்கிருக்கச் செல்வதாகத் தெரிவித்து அவர்களைப்பிரிந்து வழி நடந்தார். வழியில், புலவரைக் கண்ட சிலர் மன்னன்

முதலியோர் நடுகல்லாயினர் என்று தெரிவித்தனர். புலவர் அடிபறை கேட்ட அசுணம் போல வருந்திப், "பாடுநர்க்குக் கொடுத்த பல புகழினையுடையவன். அறத்திற முடையோர் புகழப்பட்ட நீதி நூற்குத் தக ஆராய்ந்து நடத்திய செங்கோலை யுடையவன். சான்றோர் புகழப்பட்ட திண்ணிய நட்பினை யுடையவன். மகளிரிடத்து மென்மையை யுடையவன். வலியோரிடத்து மிக்கவலியையுடையவன். குற்றமற்ற கேள்வியையுடைய பெரியோர்களுக்குப் புகலிடம். அத்தன்மையுடையோனென்று கருதாது அத்தகுதியுடையோனை அவ்வாறு கருதாத கூற்றம் அவனது இனிய உயிரைக்கொடு போயிற்று. அதனால் பையாப்புற்ற நமது சுற்றத்தை அணைத்துக்கொண்டு மெய்யுரையை யுடைய புலவீர் நல்ல இடத்தினையுடைய உலகம் துன்பமிகக் கேடில்லாத நல்ல புகழ்ச்சி மாலையைச் சூட்டி நடப்பட்ட கல்லாயினான் எம்மைப்பாதுகாப் போனெனச்சொல்லி, அக்கூற்றத்தை வைவோமாக; வாரீர் என்னும் பொருள்பட,

பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே.
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே.
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே.
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே.
மகளிர் சாயல். மைந்தர்க்கு மைந்து.
துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்.
அனைய னென்னு தத்தக் கோனை
நினையாக் கூற்றம் இன்னுயி ருய்த்தன்று.
பைதல் ஒக்கற் றழீஇ அதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்.

நனந்தலை உலகம் அரந்தை தூங்கக்
கெடுவில் நல்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே."

புறம்—221

என்னும் பாட்டைப் பாடி வருந்தினர்.

பின்பு, புலவர் நடந்து சென்று சோழன் நடுகல்லை யும், புலவர் நடுகல்லையும் கண்டு உள்ளம் உடைந்து அழுது புலம்பினர்; புலவர்கள் நட்பைப் புகழ்ந்தார். மன்னன் நடுகல்லி னருகே சென்று வணங்கித் "தீயால் விளங்கிய ஒளியையுடைய ஆபரணத்தாற் சிறந்த வடி வினையுடையவளாய் நின் நிழலினும் ஒரு பொழுதும் நீங்காத நீ விரும்பத்தக்க மனைவி பெறப்பட்ட புகழ் அமைந்த பிள்ளையானவன் பிறந்தபின் வா எனச் சொல்லி என்னை இவ்விடத்தினின்றும் போக்கிய என்னோடு உறவில்லாதவனே! உன்னோடு என்னிடை நட்பைக் கருதாதிருப்பையல்லை.புகழ் விரும்பு வோய்! நீ எனக்குக் குறித்தவிடம் யாது? சொல்வாயாக" என்னும் பொருள்பட,

அழலவிர் வயங் கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
என்னிவண் ஒழித்த அன்பி லாள,
எண்ணா திருக்குவை யல்லை.
என்னிடம் யாதுமற் றிசை வெய்யோயே.

புறம்—222

என்னும் பாட்டைப் பாடித் தனக்கு இடந்தருமாறு வேண்டினர்.

பொத்தியார் உள்ளமுடைந்து தன்பிரிவுக்குவருந்தி, மற்றைப் புலவர்களைப் போலத் தாமும் தன்னுடன் உறைதற்கு விரும்பித் தன்னிடம் வேண்டிய வேண்டுகோளை மன்னன் ஏற்றுத் தானிருந்த குழியில் அப்புலவருக்கும் இடங்கொடுத்தான். கல்லாகிய பின்னும் தனக்கு இடங் கொடுத்த கோப் பெருஞ் சோழனைப் பொத்தியார் புகழ்ந்து "பலருக்கும் அருளுடைமையால் நிழலையொத்து உலகத்தார் மிகுத்துச் சொல்ல உலகத்தை ஆளுந்தன்மை முடியச் செலுத்துதற்கு மறுமையை நினைத்தால் முடிவு போகாமையின் வடக்கிருத்தற்கு வரைந்த சிறிய இடத்தின்கணிருந்து உயிர் நீத்தலின் நிலைபெற நடப்பட்ட கல்லானவிடத்தும் இடங்கொடுத்தளிப்பர் நிச்சயமாக. உடம்போடு இனிய வுயிர் விரும்புமாறு போல விரும்பும் உரிமையையுடைய பழையதாகிய நட்பையுடையோர் தம்மிடத்துச் செல்லின்'' என்னு பொருள்பட,

> பலர்க்கு நிழ லாகி உலக மீக் கூறித்
> தலைப்போ கன்மையின் சிறுவழி மடங்கி
> நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
> இடங் கொடுத் தளிப்ப மன்ற உடம் போடு
> இன்னுயிர் விரும்புங் கிழமைத்
> தொன்னட் புடையார் தம்முழைச்செலினே.

புறம்—223

கல்லிற் என்ற பாட்டைப்பாடி மன்னன் கொடைக்கு மகிழ்ந்து அவ்விடத்தே புக்கு வீடுபே றெய்தினார்.

சோழனும் பிசிராந்தையார் முதலியோர்களும் வடக்கிருந்து நடுகல்லாயினர் என்று கேள்விப்பட்டு

வருந்தி அவர்கள் நடுகல் லருகே வந்து கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனுர் என்பார் "யாற்றிடைக் குறையுள் புள்ளிப்பட்ட மரநிழற்கணிருந்து உடம் பாகிய முழுத்தசையை வாட்டும் வீர, நின் கருத்திற் கேற்ப நின்னோடு வடக்கிருந்தார் பலராதலால், யான் இதற்கு உதவாது பிற்பட வந்ததற்கு என்னை அவ ரோடு சொல்லி நீ வெறுத்தி" என்னும் பொருள்பட,

*"உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்*
*முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள!*
*புலவுதி மாதோ நீயே*
*பலரா லத்தைநின் குறியிருந் தோரே"*

புறம் —219

என்னும் பாட்டைப்பாடிக் கவலையோடு பிரிந்து தம் ஊராகிய கருவூர் மீண்டார்.

புலவர்களுடைய மாய்வும் புலம்பலும் கோப் பெருஞ் சோழனிடத்தில் அவர்கள் வைத்திருந்த நட்பையும் அன்பையும் நமக்கு விளக்குகின்றன.

# 3. தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

வானம் மிகுதியாக மழை பெய்தலினால், உயர்ந் தோங்கிய மேற்கேயுள்ள மலையிலிருந்து தோன்றி, மேட்டிலும் பள்ளத்திலும் விழுந்தெழுந்து, காந்தள் மலர்களையும், வேங்கை மலர்களையும், மணிகளையும், சந்தனக் கட்டைகளையும் அடித்துக் கொண்டு நெடுவழி நடந்து தன் இரு கரைகளிலும் அவற்றை எடுத்தெறிந்து புரண்டோடும் வையையாறு அருகிலுள்ள செய்தோறுஞ் சென்று விதைத்த வித்தொன்றை ஆயிரமாக விளைவிக்கும் நல்ல உணவை உண்பித்து உடல் வளர்த்துத், தென் றலில் பிறக்குஞ் செந்தமிழ் மொழியால் அறம் பொருள் இன்பங்களை அறிவுறுத்திப், பரவையிடப் பிறக்கும் பருமுத்துக்களாலாகிய அணிகலங்களை அணிவித்து, வில், வாள், வேல், கணை முதலிய படைகளை நல்கிப், பணியும் மன்னருக் கின்னுரை பகர்ந்து திறை பெற் றும், மாறுகொள் மன்னரை மாய்த்து அவர் நாடு கொண்டும், வடக்கே சென்று சென்று இமயத்தில் மீன் கொடியை நாட்டித் தென்திசை கூற்றுத்திசை யென்று உலகம் புகழுமாறு வெற்றியொடு மீளுமின் என்று வீர மொழி பகர்ந்து தன் மக்களை வளர்க்கும் பாண்டிய நிலமடந்தை பெற்றெடுதத ஆண்மகன் கலைக்கடலைக் கடந்தவன். பகைவர் படைக்கடலைக் கடக்கும் படையையுடையவன். பாவலருடைய வறு

மையை நீக்குபவன். பணியும் மன்னரைப் பொறுக்கும் பண்புடையவன். காணுதற் கெளியவன். இன்னுரை பகரும் இயல்புடையவன். பகைவர், அயலார், நொதுமலர் என்று நோக்காது யாவர்மாட்டும் நிறைகோல் போலும் செங்கோலுடையவன். நீரளவாக நிற்கும் தாமரையைப்போலப் போரளவாக எதிர்த்துப் பகைவரோடு போர்புரியும் திறமையுடையவன். இவன் நெடுஞ்செழியன் என்னும் பெயருடையவன். பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையிலிருந்து அரசாண்ட மன்னன். இவன் குடிகளைக் குறைவறக் காத்தான். நாட்டையும் நன்கு அமைத்தான்.

மன்னன் தன்னுட்டின் பல இலவந்திகைகளை அமைத்தான். அவற்றில், வெள்ளிக் கம்பிபோல் மேல் நோக்கி நாற்புறத்திலும் எழுந்து செல்லுகின்ற நீரை அனைத்தும் நடுவில் மோதும்படி செய்யும் நீர்ப் பொறியும், வெண்பூக்களைப் போல் பல நீர்த்துளிகளை மேலே எறியும் நீர்ப்பொறியும், பொய்கை நீரைக், குறைக்க வேண்டுமிடத்துக் குறைத்து நிறைக்க வேண்டுமிடத்து நிறைக்கும் பொறியும், உயிருடைய மீன்,அன்னம் முதலியவற்றைப்போல அவை போன்று செய்யப்பட்ட செய்பொருள்களை இயங்குவிக்கும் பொறியும், ஒத்து உயர்ந்து வளராத புற்களையும், செடிகளையும் ஒழுங்காக ஓரளவில் கத்தரித்து அழகு செய்யும் பொறியும், செல்லுகின்ற வழிகளில் இருள் சேர்ந்த இராக்காலத்தில் பல மின் விளக்குகளை எரிவிக்கின்ற பொறியும், இயங்குகின்ற மக்கள்

முதலிய பல வடிவங்களைக் காட்டி, அவை பாடுவது போல் இன்னிசை பாடிக் காண்பாரை மயங்குவிக்கும் பொறியும் உள்ளன. வண்டுகளும், பறவைகளும் மகிழ்ந்து இசைபாடும் தென்னை, பலா, தேமா, கமுகு புன்னை, வாழை, தாழை, மல்லிகை, பிச்சி, முல்லை முத லியன வளர்ந்து செறிந்து நிற்கும். கண்டார் கண் களுக்கு மேலும் காணுமாறு அவாவை உண்டாக்கும். பாத்திகளில் வைத்து வளர்க்கப்பட்ட பல நிற முடைய பூக்களைப் பூத்திருக்கும் செடிகளும் வேறு கொடிகளும் மணம் விரிக்கும்.

கடை வீதிகளில் பூவும், காயும், கனிகளும், மஞ்ச ளும், இஞ்சியும், வெற்றிலையும், பாக்கும், அகிலும், சந்த ணமும், கறியும், துகிலும், உப்பும் பிறவும் கொள்வா ருவப்பக் குறையாது விற்கப்படும்.

மக்களிற் பலர் யானை, குதிரை, தேர் முதலிய வற்றிலேறிப் பழகுவார்கள். பலர் விற்பயிற்சி, வாட் பயிற்சி, மற்பயிற்சி செய்வார்கள். விலங்குகள்பூட்டிய வண்டிகளையும், பொறிகளால் இயக்கும் வண்டிகளை யும் பலர் ஓட்டிக்கொண்டு செல்வார்கள். செல் நெறிகளில் போவோரும் வருவோரும் பலராகலின் ஏவலர் ஏவலின்படி செல்வோர் வீதியின் ஒரு பக்க மாகச் செல்வார்கள்; வருபவர் மற்றொருபக்கம் வருவார்கள்.

மக்கள் ஆடை நெய்தல், அணிகலஞ் செய்தல், மட்கலம் வனைதல், வேல் வடித்தல், பயிரிடல் முதலிய பல தொழில்கள் செய்து வாழ்வார்கள். அகக்

கருத்தை முகக் குறிப்பா லறியும் மக்களும் யாழின் குரல் என்று மருளும்படி பெண்கள் இசைப்பாட்டுப் பாடுவார்கள். நாடக மேடையில் நாடகம் நடிப்பார் கள். அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழியைக் கற்றும் கேட்டும் களித்தும் வாழ்வார்கள். வையம் பெறினும் பொய்யொன்றும் புகலமாட்டார்கள். வஞ் சகத்தை மறந்தும் நினையார். பிற வுயிர்களுக்குப் பிழை புரியார். குடிகள் தன்னிடம் வந்து குறை கூறு மலும், முறைவேண்டாமலும், நன்னெறியில்நடத்தல் கண்டும், வண்டமிழ் மொழியை வளர்த்தல் கண்டும் மகிழ்ந்து, நெடுஞ் செழியன் கண்ணை இமைகள் காத் தல் போலத் தன்னாட்டைக் காவல் செய்து வந்தான்.

## வஞ்சினம்

கமுகின் பாளையை அரவெனக் கருதிச் சினந்து அதனைச் சிதைக்கும் மயில் கோம்பியைக் கண்டஞ்சும் காவிரி நாட்டரசனாகிய சோழன் சேரனையும் பிற வேளிரையும் அழைத்துத் தன்னோடு போர் செய்யக் கருதுவதையும், இளையன் வலியிலன் என்று தன்னை இகழ்வதையும் நெடுஞ்செழியன் ஒற்றரிருவர் வந்து கூறக் கேட்டான். சோழன் வேறு சில மன்னர்க ளோடு சேர்ந்து தனக்குத் துன்பஞ் செய்ய முயல்கின் றான் என்று ஒற்றரில் தலைசிறந்தானொருவனும் கூறத் தெரிந்தான். பின்னாளில், சோழன் தன் வீரர்களை ஏவிப் பாண்டிய நாட்டிலுள்ள தன் ஆனிரையைக் கவர்கி றான் என்று கேள்விப்பட்டு, நெடுஞ் செழியன் தன் வீரர்களை ஏவி அவற்றை மீட்டி வருமாறு செய்தான்.

சோழன் நெடுஞ்செழியனோடு போர் செய்யத் துணிந்து சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேர லிரும் பொறையையும், எழினி, திதியன், எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற குறுநில மன்னர் ஐவரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு நால் வகைப் படையையும் நடத்தித் தூளிகள் வானி லெழவும், துடிகள் செவி கெட ஆர்க்கவும், ஞாலம் நடுக்குறவும் மதுரையின்மேல் படையெடுத்து வருஞ் செயலைக் கேட்டான் செழியன். சினந்தான்; சிரித் தான்; தலையசைத்தான்; நெருப்பெழ விழித்தான்; பற்களைக் கடித்தான்; நாட்டிலுள்ள வீரர்களைத் திரட் டுவதற்குப் பறை யறையப் பணித்தான். வீடு செறிந்த வீதிதோறும், பாடல் ஆடல் பயிலிடந் தோறும், வேல் முதலியன செய்யும் தொழிலகந்தோ றும்,போர்ப்பறைஅடிக்கப்பட்டது. மூதில் மகளிர்கள் மகிழ்ந்தார்கள். போர் மறவர்கள் தோள் பூரித்தார் கள். பலர் படைகள் எடுத்துப் புறப்பட்டார்கள். புதிதாக மணஞ்செய்து கொண்ட வீரர்களும் வாளெடுத்து வழி நடந்தார்கள். மூதின் மகளிர் தங்கள் மைந்தர்களுக்கு ஆடை அணிகளால் அழகு செய்து படைகளை எடுத்துக் கொடுத்துக் களிறுகளை வெட்டி மீளுங்கள் என்று கூறிப் போருக்கு விடுப் பார்கள். நும் முன்னோரும் தந்தையர்களும் மன்ன ரிடம் மாராயம் பெற்றவர்கள். நீவிரும் புகழுண் டாகும்படி போர்செய்து வாருங்கள்.தெய்வத்தமிழை வளர்ப்பதும், மெய்ந்நெறியில் ஒழுகுவதும், மன்னன் ஏவலைச் செய்வதும் நும் கடன் என்று செருக்களஞ்

செல்விப்பார்கள். கடல் கடந்து கடாரநாட்டையும் இலங்கை நாட்டையும் கைப்பற்றினர் நும் முன்னோர். ஆரியப்படைகளை அடி பணித்தார் நும் முன்னோர். நீவிரும் இன்று எதிர்க்கும் பகைவரை வென்று மீளுங்கள் என்று தம் மைந்தர்களை நடப்பிப்பார்கள்.

வீரர்கள் விரைந்து அரண்மனையை அடைந்தார்கள். இருந்த படைகளும் எழுந்து நின்றன. வேழங்கள் வெகுண்டு நின்றன. பரிகள் பருமந் தாங்கி நின்றன. தேர்கள் கொடிகளோடு விளங்கின.

நெடுஞ்செழியன்

“ கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்த கைச்சாபம்பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்.”

புறம்—77

தன் தோளினை நோக்கியும், தன் சுடர்வேல் நோக்கியும், வாள் நோக்கியும், மற்றோர் உயிருணற்கு எழுமின் என்று கூறினான். “வழி வழி வந்த மறக்குடியில் பிறந்தவர்களே! விழுப்புண்படாத நாள் மறவர்க்கு வாழ்நாளாகாது. பகைவருக்குப் புறமுதுகு காட்டுதல் பழிச் செயலாகும். போரில் மாய்தலும் பகைவரை வெல்லுதலும் ஆடவர்க்கழகாகும். வசையைத் தவிர்த்து இசையைப் பெறுவதற்கு வாருங்கள்” என்று அழைத்தான்.

"நம்மாற் சிரிக்கத்தக்கார் இவன் ஆளும் நாட்டை மிகுத்துச் சொல்லுவர் எனவும், இவன் இளைஞன் எனவும் யான் வெறுப்பச் சொல்லி, ஒலிக்கும் மணி இருமருங்கும் ஒன்றோடொன்று மாறி யிசைக்கும் பரந்த அடியினையும் பெரிய காலினையுமுடைய உயர்ந்த நல்ல யானையினையும் தேரையும்குதிரையையும் படைக்கலத் தொழிலமைந்த வீரரையும் உடையோம் யாமென்று எனது மிக்க வலிக்கு அஞ்சாதே மாறுபடும் சினம் பெருகிப் புல்லிய வார்த்தைகளைக் கூறிய சினம் பொருந்திய அரசரைப் பொறுத்தற்கரிய போரின் கண்ணே சிதறப் பொருது முரசத்தோடுகூட அவரைக் கைக்கொண்டிலேனாயின், பொருந்திய எனது குடைநிழற்கண் வாழ்வார் தாங்கள் சென்றடையும் நிழற்காணாதே கொடியன் எம்முடைய வேந்தன் என்று கருதிக் கண்ணீரைப் பரப்பிக் குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோலை யுடையே னாகுக. உயர்ந்த தலைமை யுடனே, மேம்பட்ட கேள்வியை யுடைய மாங்குடி மதருன் முதல்வனாக, உலகத்தோடு நிலை பெற்ற பலரும் புகழும் தலைமையையுடைய புலவர் பாடாது நீங்குக, எனது எல்லையை. என்னாற் புரக்கப்படும் கேளிர் துயரம் மிக இரக்குமவர்கட்குக் கொடாத வறுமையை யானுறுவேனாக" என்னும் பொருள்பட,

" நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்

படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை
புரப்போர் புனகண் கூர
இரப்போர்க் கீயா இன்மையா னுறவே''

புறம்—72

என்னும் பாட்டைப் பாடி வஞ்சினங் கூறிப் பகைவர் படை வருகையை எதிர் நோக்கி நின்றான். பறையும் துடியும் சங்கும் முழங்கக் கரை கடந்து நகருங் கடல் வெள்ளம் போல் பகைவர் படைகள் நெருங்கின. வீரர்கள் தோள் தட்டியும், வீர மொழி புகன்றும் எழுந்தார்கள். கையினாலும், காலினாலும் எதிர்த்தார்கள். கணைகளையும் ஈட்டிகளையும் வாள்களையும் வேல்களையும் ஏவினர். வீரர்கள் தலைகளை வெட்டி வீழ்த்தினார்கள். பற்களைத் தட்டிப் படர்ந்தார்கள்.

நெடுஞ் செழியன் படைகள்:— பகைவர் படை வருகையை எதிர்த்துத் தடுத்தன. வீரர்கள் நான் முன் செல்வேன் நான்முன் செல்வேன் என்று முந்தினார்கள்.

பகைவரோடு போர் புரிந்தார்கள். மறவர்களை வீழ்த்தினார்கள். வேழத்தை வீழ்த்தினார்கள். புலி போல் பாயும் புரவியை வீழ்த்தினார்கள். அரவெனச் சீறும் அம்புகளை ஏவினார்கள். போர்க்களத்தில் அடிக்கப்பட்ட முரசொலி இடியொலி போன்றது. எறியப்பட்ட கணைகள் மழைத் துளிகளைப் போன்றன. வேல்கள் மின்னலை யொத்தன. குருதி செம்புனல் போல் சென்றது. பகைமன்னர்முன் பாண்டியன் நெடுஞ்செழியன் பாய்ந்தெழுந்தான். படைகளை ஏவினான். சோழனும் சேரனும் பிற அரசர்களும் அவனோடு போர் செய்வதற் கஞ்சிப் புறங் கொடுத்தார்கள். அவர்களும் அவர்கள் படைமறவர்களும் மதுரையை விட்டகன்று சோழநாடு நோக்கிச் சென்றனர். பாண்டியன் படைகள் அவர்களைத் தொடர்ந்தன. அவர்களை நிறுத்தி, வந்தெதிர்த்த பகை மன்னரை நம் நாட்டில் வெல்வது சிறப்பன்று. அவர்கள் நாடு சென்று அவர்களுடைய மகளிர் நாணுமாறு வெல்வதே சிறப்பாகும் என்று கூறினான் நேரரைப் புறங்கண்ட நெடுஞ்செழியன்.

## வென்றி

புலி கண்டஞ்சிய புல்வாய் போல வலி யிழந்து புறங்கொடுத் தோடிய மன்னர்களும் மறவர்களும் காலடிகள் சிவக்கக், கல்லும், முள்ளும், காடுங் கடந்து சோழநாட்டை யடைந்தார்கள். படையெடுத்து வந்த பகைவரைத் தன்னாட்டில் வெல்ல எண்ணாமல் அவர் நாட்டில் அவர் மங்கையரும்

நாணும்படி வெல்ல வேண்டும் என்று கருதிய நெடுஞ்செழியன் காலனைப் போலக் காலம் பாராமல் பறை முழங்கவும் சங்கம் ஆர்ப்பவும் குடையும் வாளும் முன் செல்லப் படையுடன் சென்றான். பொன்னி நாட்டின் எல்லையை அடைந்தான். பாண்டியன் வருகையைப் பகைவர்கள் கேட்டார்கள். இடியொலி கேட்ட அரவம் போலப் பதைத்தார்கள். எல்லையிலிருந்து எதிராமலும் ஒருவரை விட்டொருவர் பிரியாமலும் வானளாவிய மதிலையுடைய தலையாலங் கானத்தை அடைந்து கதவடைத்து மதிலினுள்ளிருந் தார்கள். நெடுஞ்செழியன் சோழநாட்டினுள் புகுந்து, கடிமரந் தடிந்து, காவற் குளங்களை அழித்து, ஊரை எரியூட்டி, அஞ்சிய பகைவர் சென்ற நெடுவழியே நடந்து போய்த் தலையாலங்கானத்தை அடைந்தான். பகைவர்கள் தன்னை எதிராது மதிலினுள் மறைந் துறைவதைக் கேள்விப்பட்டான். உழிஞைமாலை சூடி மறவர்களோடு மதிலை முற்றுகையிட்டான். பகைவர்கள் அகழ் அழித்து மதிலழித்து உள்ளே நுழையாதபடி நொச்சிசூடி அவற்றைக் காவல் செய் தனர். பாண்டியன் படைவீரர்கள் அகழைத் தூர்த் தனர். மதிலை நெருங்கினார்கள். நொச்சி வீரர்கள் வாளாலுங் கணையாலும் வேலாலும் தடுத்தனர். வெட்டிப் பலரை அகழியில் வீழ்த்தினார்கள். குத்திப் பலரை நிலத்தில் குவித்தார்கள். எய்து பலரை இறப்பித்தார்கள். உழிஞை மறவர்கள் எயிலில் ஏணி சாத்தி இவர்ந்தார்கள். மதிலையிடித்துப் பலர் வழிகளாக்கினர். களிறுகளைத் தூண்டிப் பலர் கதவு

களை உடைத்தார்கள். உடும்பு போன்று எயிலைச் சார்ந்து ஏறி, இரை கண்டிழியும் பருந்துபோலப் பலர் உள்ளே குதித்தார்கள். பாண்டியன் படை மறவர்கள் பல வழியாலும் மதிலினுட் புகுந்தார்கள்.

பாண்டியன் படையும் அவன் பகைவர் படையும் போர் புரிந்தன. புலியும் புலியும் பொருதன போல வலிமிகு மறவரும் மறவரும் மலைந்தனர். முகிலும் முகிலும் முனிந்தெதிர்ந்தன போலக் கரியும் கரியும் காய்ந்து பொருதன. குன்றும் குன்றும் சென்று எதிர்ந்தனபோல் சென்று சென்று தேரும் தேரும் எதிர்ந்தன. திமிலும் திமிலும் சினந்து உடன்றன போல் புரவியும் புரவியும் வெகுண்டு பொருதன. மறவர்கள் பகைவரை வாளால் மாய்ப்பர். தோள்களை வெட்டிச் சுற்றித்திரிவர். சென்னியை வீழ்த்திச் சினந்து பாய்வர். பரியை வீழ்த்திக் கரியொடு மலைவர். யானையைக் கொன்று யாளிபோல் நிற்பர். கைவேல் எறிந்து களிற்றினை வீழ்த்துவர். மெய்ம்வேல் பிடுங்கி மீளியை மாய்ப்பர். கையை இழந்தவர் பலர். காலிழந்தவர் பலர். புண்பட்டவர் பலர். கண்ணிழந்தவர் பலர். கணைகள் பாய்ந்து விழுந்த களிறுகள் குருவி சேர்ந்த குன்றங்கள் போன்றன. வெட்டி வீழ்த்திய அவற்றின் தலைகள் நாஞ்சில் போன்று கிடந்தன. அம்புகள் பாயப்பெற்ற மறவர்கள் முள்ளம்பன்றிபோல் காணப்பட்டனர்.

சோழனும் சேரனும் திதியன் முதலிய ஐவரும் செருக்களம் புகுந்து சினந்து போர் செய்தார்கள்.

ஆள்களை வெட்டினர். கரிகளை வீழ்த்தினர். குதிரைகளைக் கொன்றனர். தேர்களைச் சிதைத்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் நீரில் மூழ்கி வேப்பந் தார் மிலைந்து படைக எடுத்துப் பறை முழங்கப் பணிலம் ஆர்ப்பச் செருக்களம் சென்றான். சிலை வளைத்துக் கணை செலுத்தினன். கணைகளிற் சில ஆள் மேலும் யானை மேலும் பாய்ந்து அப்பாற் செல்லும் சில பரியி னுடம்பிலும் கரியி னுடம்பிலும் பாய்ந்து கழன்று செல்லும். சில மறவரையும் யானைப் பாகரையும் வீழ்த்தும். பகைவர் பாண்டியனைச் சூழ்ந்தார்கள். அம்பை ஏவினார்கள். வாளை வீசினார்கள். வேலை எறிந்தார்கள். பரிசையினால் அவற்றைத் தடுத்துப் படைகளை ஏவித் தன்னைச் சூழ்ந்து பொருதவேளிர் ஐவரையும் நெடுஞ்செழியன் மண்ணில் வீழ்த்தினன். சேரனோடும் சோழனோடும் சினந்துநின்றான். அவர்கள் வலியிழந்து அம்மன்னனால் கட்டுண்டார்கள். தலைவனை யிழந்த சேனைகள் படைகளை யெறிந்து பணிந்து நின்றனர். பலர் ஓடி ஒளிந்தனர். சோழநாட்டு மங்கையர் நாணித் தலைகுனிந்து நாவடங்கி நின்றனர். சங்கம் முழங்கியது. பறைகள் ஆரவாரித்தன. வீரர்கள் வேந்தனை வாழ்த்தினர்; வணங்கிப் புகழ்ந்தனர்; மீன்கொடி நாட்டிக் களவேள்வி செய்தான் பாண்டியன்.

"வெண்மை யில்லாத வலிய வயிரக் கம்பத்தை யுடைய கூடத்தில் நிற்றலை வெறுத்துச் சென்று யானைபடிந்து நீருண்டதாகக், கலக்கமுற்ற துறையையும், கார்காலத்து நறிய கடம்பினது பசிய

இலையோடு விரவிய மாலையையுடைய சூரபன்மாவைக் கொன்ற முருகனது கூளிச் சுற்றத்தை யொக்கும் நின்னுடைய கூரிய நல்ல அம்பினையும் வளைந்த வில்லினையுமுடைய மறவர் தம்மாற் கொள்ளலாவதனை முகந்துகொண்டு, கொள்ளாத ஒழிபொருளை மாற்றார் முகந்துகொள்ளப்படும் உணவாக்காமல் சிதறிய நிலங்களையும், வடித்தல் பயின்ற கோடாலி வெட்டுதலால் ஊர்தோறும் காவல்மரங்கள் நிலை கலங்கிய காவையும், நெடிய நகரின்கண் தொழில் புனைந்த நல்ல மனைகளிடத்து விரும்பும் அடுதீயைக் கெடுக்க மிக்க தீ முழங்கிய பக்கத்தையும் பார்த்துப் பகைவர் நாண, நாடோறும் அவரிடத்துச் சென்று இன்னமும் இத்தன்மையான பலவுஞ் செய்குவன் யாவரும் தன்னை அணுக ஒண்ணாத சூழ்ச்சித் தெளிவினை யுடையோ னெனக் கருதி, உலகம், பொறையாற்றாது நெளியத் திரண்ட பரந்த படையினையுடைய தலையாலங்கானத்தின்கண் போரை எதிர்நின்றுகொன்ற காலன்போலும் வலியை யுடையாய்! அற்ற கோட்டையுடைய பெரிய கலை புலியின் கண்ணே அகப்பட்டதாகச் சிறிய மறியை அணைத்துக் கொண்ட துள்ளிய நடையையுடைய மெல்லிய மான் பிணை பூளையோங்கிய அஞ்சத்தக்க பாழியிடத்து வேளையினது வெளிய பூவைத் தின்னும் ஆளற்ற அருஞ்சுரமாகிய காட்டுவழியே நின்னைக் கண்டேனாய் வந்தேன்" என்னும் பொருள்பட,

"வெளிறி னோன்காழ்ப் பணைநிலை முனைஇக்
களிறுபடிந் துண்டெனக் கலங்கிய துறையும்

கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியற்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்
கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
கொள்பத மொழிய வீசிய புலனும்
வடிநவில் நவியம் பாய்தலின் ஊர்தொறும்
கடிமரந் துளங்கிய காவும் நெடுநகர்
வினைபுனை நல்லில் வெவ்வெரி யினைப்பக்
கனையெரி யுரறிய மருங்கும் நோக்கி
நண்ணூர் நாண நா டொறுந் தலைச்சென்
றின்னும் இன்னபல செய்குவன் யாவரும்
துன்னல் போகிய துணிவி னோனென
ஞால நெளிய ஈண்டிய வியன்படை
ஆலங் கானத் தமர் கடந்தட்ட
கால முன்பநிற் கண்டெனன் வருவல்
அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளி லத்த மாகிய காடே'' புறம்—23

என்று கல்லாடர் அவனைப் பாடிப் புகழ்ந்தார்.

"ஒருவனை ஒருவன் கொல்லுதலும் ஒருவனுக் கொருவன் தோற்றலும் புதிதன்று. இந்த உலகத் தின்கண் முன்னேதொட்டு இயல்பு. திரண்ட தாளையுடைய மன்றத்திடத்து வேம்பினது பெரிய கொம்பின்கண் உண்டாகிய ஒள்ளிய தளிரை நீண்ட கொடியாகிய உழிஞைக் கொடியுடனே விரவிச் செறியத் தொடுக்கப்பட்ட தேன்மிக்க மாலையை

வளைய மாலையுடனே சிறப்பச் சூடி ஓசையினிய தெளிந்த போர்ப்பறை யொலிப்பக் காட்சிதக நாடு பொருந்திய செல்வத்தினையுடைய பசும் பொன்னாற் செய்த பூணையணிந்த நெடுஞ்செழியனது பெருமை யையும் உயர்ந்த தலைமையினையும் அறியாராய்த் தம்மிற் கூடிப் பொருவே மென்று தன்னிடத்து வந்த புனைந்த வீரக் கழலினையுடைய இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய ஏழரசருடைய நல்ல வெற்றியடங்கத் தான் ஒருவனாய் நின்று பொருது களத்தின்கட் கொல்லுதலை இன்றையின் முன் கேட்டறியோம்'' என்னும் பொருள்பட,

'' ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை.
இன்றி னூங்கோ கேளலம். திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியல் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடுஞ் செம்மலு மறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழ லெழுவர் நல்வல மடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே''

புறம்—16

என்றும் பிறவாறும் இடைக்குன்றூர் கிழார் அவனைப் புகழ்ந்து பாடினார்.

களத்தில் நாட்டிய கொடியிலுள்ள மீனைப் பார்த்து வியப்படைந்து எட்டிப் பார்ப்பன போல விண் மீன்கள் மாலையில் விளங்கித் தோன்றின. பாண்டியன் பாடி வீட்டை யடைந்து இரவில் துயில் கொண்டான்.

## மீட்சி

"சேவல்கள் கூவின. சங்கம் ஆர்த்தன. முரசம் கறங்கின. பகைவரைவென்று புகழ்கொண்ட வேந்த! பாவலர் புகழும் பாண்டிய! போர்களத்தில் பகைவர் படை நின்னைக்கண்டு அஞ்சி அகன்றதுபோல் இருள் ஏகியது. தானைத் தலைவர்களைப்போல மீனினம் விளங்குத லொளிந்தன. கட்டுண்ட காவலரைப் போலக் கலைமதி ஒளியிழந்தது. பகைவர்முன் நீ வெகுண்டு நின்ற நின் தோற்றம்போல் பகலவன் வானில் தோன்றினான். நெருஞ்சிப் பூக்கள் கதிரவனை நோக்கி நிற்பதுபோலப் பெருங்குடிமக்கள் நின் மலர் முகம் நோக்கி நிற்கிறார்கள்" என்று சூதர் துயிலெடை பாடினார்கள். பாண்டியன் துயிலுணர்ந்து தவிசில் அமர்ந்தான்.

உயர் குடிப்பிறந்தாரும், அறிஞரும், செல்வர் களும், பிறரும் பாண்டியன் அடிபணிந்து, மன்ன, ஆறுக வெஞ்சினம், எமக்கருள் செய்க என்று பணி மொழி பகர்ந்து, பொன்னும் மணியும் பிறவும் குவித் தார்கள். சினந் தணிந்து சின்னாள் அங்கிருந்து பின்பு துடியும் முரசமும் முழங்கச், சங்குங் கொம்பும் ஆர்ப் பப், பாவலர் பாடக் கட்டுண்ட மன்னரிருவரையும்

முன்னடத்தி நால்வகைப் படையோடு தேரேறித் தென்னவன் புறப்பட்டுத் தலையாலங்கானம் அகன்று, வானம் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரிபாயும் கழனிகளையும், காடுகளையும், பலவூர்களையும், தாயெனப் பயிர்களுக்குத் தண்ணீரளிக்கும் வையையையும் கடந்து மதுரையை யடைந்தான். மாடமுயர்ந்த மறுகூடு சென்றான். சோழ நாடு சென்று துன்னலர் ஐவரை மாய்த்துப் பேரரசர் இருவரைப் பிடித்துக் கட்டி வெற்றிபெற்றும் விழுப்புண் பட்டும் மீளும் மன்னனையும் வீரர்களையும் பாவையனைய பாண்டிய நாட்டு மங்கையர்கள் கண்குளிரக் கண்டார்கள். "வடுப்பல வுற்ற மறவரை நோக்கிக் குடிக்குப் பெரும் புகழ் கொணர்ந்தனரென்றும், புண்ணொடு மீண்ட பொருநரை நோக்கி, நாம் எண்ணிய வண்ணம் நண்ணினரென்றும், பொருவேல்பாய்ந்த புதல்வரை நோக்கிப், பெருமையும் புகழும் பெற்றன மென்றும், விழுப் புண்பட்ட வீரரை நோக்கி, இறப்பினும் இவர் புகழ் இருக்குமென்றும், சின்னஞ் சிறிய செம்மல் சினந்த கன்னிப் போரில் காவிரி நாட்டில் மன்ன ரைவரை மாய்த்து இருவரை யாத்துத் தென்னாட்டினுக் கிசைதேடினன் என்றும் புகழ்ந்தார்கள்.

பாண்டியன் அரண்மனையை அடைந்தான். கட்டுண்ட காவல ரிருவரையும் சிறைப்படுத்தினான். கொண்டு வந்த பொருட்குவியல்களை வாயிலிற் குவித்தான். புலவர்களையும், புண்பட்ட தானைத் தலைவர்களையும், களிறெறிந்த மறவர்களையும், புரவிகளை மாய்த்த போர்வீரர்களையும், விழுப்புண்பட்ட வீரர்களையும்,

பிறரையும் என்முன் கொணர்க என்று ஏவலர்களிடம் கூறித் தவிசிலிருந்தான். அவர்களுக்குப் பொன்னையும் மணிகளையும் பூண்களையும் வாளையும் வேலையும் வயல் நிலங்களையும் ஊர்களையும் கொடுத்துச் சிலர்க்கு ஏனுதிப்பட்டமும் ஈந்தான். "வீரர்களே, நம்மை யிகழ்ந்து போர்செய்யவந்த மன்னர் ஐவரைக் கொன்ளுேம். இருவரைச் சிறைப்படுத்திளுேம். நம்மைப் பெற்ற நாட்டினுக்கும் குலத்திற்கும் வெற்றிச்சிறப்பையும் புகழையும் கொண்டுவந்தோம். எம் வஞ்சினம் முடிந்தது. மீண்டும் போர் நிகழுமாயின் நும்மை அழைக்கிறேன். நும் உதவி போற்றத் தக்கது" என்று வீரர்களைப் பாராட்டினுன். போர்க்களத்தில் புண்பட்டு மாய்ந்த பலர்களுடைய உருவையும் பெயரையும் செயலையும் பொறித்துக் கல்நாட்டுவிழாச் செய்து வணங்கினுன். இறந்தவர்களுடைய உறவினர்களுக்குப் பொருளும் நிலமும் கொடுத்துப் பாதுகாத்தான்.

சிறையில் அடைக்கப்பட்ட யானைக்கட் சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறையும் சோழனும் உடல் தளர்ந்து தலை குனிந்து கண்ணீர்வடித்து நெட்டுயிர்ப்புற்று வருந்தி வாழ்ந்து வந்தனர். உண்ணுமலும் உறங்காமலும் சின்னுட்களைச் சிறையில் கழித்தனர். இருவர்களுள் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை பயம்பிடை வீழ்ந்த யானை அதனைத் தூர்த்துக் கடந்து செல்வது போலக் கதவை உடைத்துச் சிறையை விட்டகன்று, பாண்டிய நாட்டின் பலவூர்களையும் கடந்து, சேரநாடு போய்ச் சேர்ந்தான். சோழன் தானும் சிறைவீடு பெறக் கருதிப் பூண்

களுக்கு அழகுதரும் பொற்பையுடையவளும் மதியை வென்ற முகத்தை யுடையவளும் வேலைவென்ற விழிகளையுடையவளும் தேனை வென்ற தீஞ்சொலுடையவளும் மயிலை:வென்ற சாயலையுடையவளுமாகிய தன் மகள் பொன்னியைத் திறைப்பொருளாகவும் மணமகளாகவும் கொடுப்பதற்கு எண்ணிப் பாண்டியனுக்குத் தெரிவித்தான். பாண்டியன் உடன் பாடு பெற்று மணநாள் உரைத்துத், தோல்வியால் வருத்தமும், மகட்கொடையால் மகிழ்ச்சியும் பெற்று, விடுதலையுற்று உறையூரை யடைந்தான்.

சோழன் சிறைவீடு பெற்றுச் சென்றபின் பாண்டிய நாட்டிலுள்ள குடபுலவியனார் என்ற புலவர் நெடுஞ்செழியன் பகைமன்னரைத் தலையாலங்கானத்தில்போர் செய்து வென்ற வலிமையைக் கேட்டு அவனைக் கண்டு களிப்பதற்கும், அவனிடம் ஒரு வேண்டுகோள் செய்!து கொள்வதற்கும் மதுரையை அடைந்தார். அரண்மனையை அடைந்தார். செழியன் அரியணையி லமர்ந்திருந்தான். அவனை அணுகி அவன் மார்பினைப் புல்லி மகிழ்ந்து,"ஒலிக்கும் கடலாற் சூழப்பட்ட அணுச்செறிந்த அகன்ற உலகத்துக்கண் தமிழ்ப்படை கைகலந்த தலையாலங்கானத்தின்கண் நிலைபெற்ற உயிரது பன்மையையும், அவ்வுயிரைக் கொள்ளுங் கூற்றினது ஒருமையையும், நின்னுடனே சீர்தூக்கிக் காட்டிய வெற்றி வேலையுடைய செழிய! கலங்கி மலைக்கண்ணே தங்கிய குருவியினம்போல அம்பு சென்று தைத்த பொறுத்தற்கரிய புண்ணையுடைய

யானையினது துளையையுடைய பெருங்கைவாயுடனே துணிந்து வீழ்ந்து கலப்பையை யொப்ப நிலத்தின் மேலே புரள வெட்டிப் போர்க்களத்தின் கண்ணே வீழ்த்த ஏந்திய வாள் வெற்றியையுடையோராய் எந் தலைவனோடு கிடந்தார், எம்முடைய புல்லிய தலையை யுடைய மைந்தர். இப்பெற்றிப்பட்ட வென்றியும் உளவோ நமக்கென்று சொல்லி முதிய மறக் குடியிற் பிறந்த பெண்டிர் இன்புற்று உவகையால் அழ, அதுகண்டு நாணிக் கூற்ற மிரங்கிய அஞ்சத்தக்க போர்க்களத்தின்கண்ணே இருபெருவேந்தரும் ஐம் பெரு வேளிருமாகிய எழுவரது நல்ல வலியை வென்றோய், நினது கழுவி விளங்கின முத்தாரம் அகத்திட்ட மார்பைப் பெரும்புலியைப் படுக்கும் வேட்டுவன் எந்திரமறிந்து கொளுத்திய பெரியகல்லையுடைய அடாரையும் போலுமென்று புல்லினேனல்லனேயான்'' என்னும் பொருள்பட,

'இமிழ்கடல் வளைஇய ஈண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத் தொருமையும்
நின்னொடு தூக்கிய வென் வேற் செழிய
இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடாரும் போன்மென விரும்பி
முயங்கினே னல்லனோ யானே மயங்கிக்
குன்றத் திறுத்தகுரீஇ யினம் போல
அம்பு சென்றிறுத்த அரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள
எறிந்து களம் படுத்த ஏந்துவாள் வலத்தர்

எந்தையொடு கிடந்தோர் எம்புன் றலைப் புதல்வர்
இன்ன விறலும் உளகொல் நமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை
எழுவர் நல்வலங் கடந் தோய்நின்
கழூஉ விளங் காரங் கவைஇய மார்பே''

புறம்—19.

என்று பாடிப்புகழ்ந்தார்.

பின்பு, புலவர் தம்நாட்டின் நிலைமையைத் தெரிவிக்க எண்ணிப் "பெரியோய் நீரை இன்றி யமையாத உடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தார். உணவை முதலாக வுடைத்து அவ்வுணவாலாகிய உடம்பு. ஆதலால் உணவென்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடியநீர். அந்நீரையும் நிலத்தையும் ஒருவழிக்கூட்டினவர்கள் இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் படைத்தவராவர். நெல் முதலியவற்றை வித்தி மழையைப் பார்த்திருக்கும் புல்லிய நிலம் இடமகன்ற நிலத்தை யுடைத்தாயினும் அது பொருந்தி ஆளும் அரசனது முயற்சிக்குப்பயன் படாது; ஆதலால் கொல்லும் போரையுடையசெழிய! இதனைக் கடைப்பிடித்து விரைந்து நிலங் குழிந்த இடத்தே நீர்நிலை மிகும் பரிசு தளைத்தோர் தாஞ் செல்லுமுலகத்துத் தம்பேரோடு தளைத்தோராவர். அந்நீரைத்தளையாதவர் இவ்வுலகத்துத் தம்பெயரைத் தளையாதோராவர்" என்னும் பொருள்பட

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.

உண்டி முதற்றே உணவின் பிண்டம்.
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே.
நீரும் நிலனும் புணரியோ ரீண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே.
வித்திவா னோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே அதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவட்டட் டோரே;
தள்ளா தோரிவட் டள்ளா தோரே''

புறம்—18.

என்று பாடினார்.

புலவன் புகழ்த்துரையையும் முறையீட்டையும் பாண்டியன் கேட்டு மகிழ்ந்தான். புலவருக்குப் பொன்னையும் மணியையும் பிறவற்றையும் பரிசில் கொடுத்தான். அவர் வேண்டுகோளின்படி நீர்நிலை களை வெட்டி வேளாண்மைக்கு வேண்டிய உதவி புரிந்தான்.

## திருமணம்

சோழன் தன்னாடு சென்ற பிறகு, கற்றறிந்த அமைச்சரோடும் உற்றார் உறவினரோடும் சூழ்ந்து, பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் என் மகள் பொன்னிக்கும் இன்றைக்கு ஏழாம் நாள் மணம் நடைபெறும் என்று நாடெங்கும் முரசறைவித்தான். அறிஞர்களுக்கும், புலவர்களுக்கும், மன்னர்களுக்கும், பிறருக்கும் முடங்கல் அனுப்பினான். அரண்மனையும்

வீதிகளும் வீடுகளும் பந்தலிட்டு அழகு செய்யப்பட்டன. மாடங்களில் கொடிகள் அசைந்தாடின. வாசல்களில் வாழையும் கமுகும் நாட்டப்பட்டன. பாவை விளக்கும் பொற்குடங்களும் வைக்கப்பட்டன. பழமணல் நீக்கிப் புதுமணல் பரப்பப்பட்டது. மரங்களும் செடிகளும் கொடிகளும் புல்லும் நிரல்பட வளர்க்கப்பட்ட பூம்பொழில்களில் குறுக்கும் நெடுக்குமாகவுள்ள வழிகளில் இருக்கைகளும் படுக்கைகளும் அமைக்கப்பட்டன. இலையும் மலரும் நிறைந்த நீருண்துறைகளும் புதுப்பிக்கப்பட்டன. அரண்மனையில் பொன்னாலும் மணியாலும் அழகுசெய்யப்பட்ட மணமண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. பன்னிறமணிகளால் செய்யப்பட்ட இலை, பூக்களையுடைய செடிகள் பந்தரிற் பலவிடத்தும் வைக்கப்பட்டன. எண்ணெயும் திரியுமின்றி எரியும் மின் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. செந்தமிழ் பாடல்களையும் பிறமொழிப் பாடல்களையும் பாடும் ஒலிபரப்பிப் பொறிகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டு இசைகள் எழுப்பப்பட்டன.

எழுவரை வென்ற இளம்போர் மடங்கலை அமைச்சரும் பிறரும் சோழ நாட்டிற்கு அழைத்தனர். தென்னவர் கோமான் தேரி லேறினன். கொடிகளும் குடைகளும் முன் சென்றன. குறள்களும் சிந்துகளும் நெடில்களும் புறப்பட்டன. நால்வகைப் படைகளும் நடந்து சென்றன. உற்றாரும் உறவினரும் ஊர்திகளில் ஏறி ஏகினர்கள். அமைச்சர்களும் புலவர்களும் அருகில் படர்ந்தார்கள். மயிலஞ்சாயல்

மங்கையர்கள் பின் தொடரச் சங்கமும் கோடும் தடாரியும் முழங்க, மங்கலப் பாடல்கள் மகளிர் பாடச் செவ்வேள் போன்ற தென்னவன் சென்றான். மதுரையைக் கடந்து தன்னுடைகன்று பொன்னி நாடடைந்தான்.

செழியன் வருகையைச் சின்னங்கள் தெரிவித்தன. மாளிகைமேலும் வாயில்முன்னும் மங்கையரிருந்து முகிலைக் கண்ட மயில் போல மன்னனை நோக்கினார்கள். மலர் மழை பொழிய, வாழ்த்தொலி முழங்க, உறையூரை யடைந்து அரண்மனையை அடைந்தான் பாண்டியன். புகழமைந்த புரவலனுக்கும் பொற்பமைந்த பொன்னிக்கும் உடுப்பன உடுத்து, அணிவன அணிவித்து, முடிப்பன முடித்துப், பூசுவன பூசி அழகு செய்தார்கள். வனப்பு மிகுந்த மண மண்டபத்தில் அவிரொளி மணித்தவிசில் அமர்த்தினார்கள் கற்பு மிகுந்த தமிழ் நாட்டுக் காரிகையர் அருஞ் செயல்களைக் கூறி அவர்களைப் போல் மலரும் மணமும் போலவும் உடலும் உயிரும் போலவும் நெஞ்சம் ஒன்றி நெடுநாள் வாழ்வீர்களாக என வாழ்த்திப் பெற்றோரும் பெரியோரும் பொன்னியைத் தென்னவர் கோன் செழியனுக்கு நல்கினார்கள். மலர் மழை பொழிந்தது. வளைகள் முழங்கின. முழவம் ஆர்த்தன. வாழ்த்தொலி எழுந்தது.

"செழியனைக் காண்பார்; செல்வியைக் காண்பார்.
அழகும் உருவும் அறிவும் குணனும்
இலயந்தன என்பார். இவரைப் படைத்திங்கு
ஒருவழிக் கூட்டி உயிருட லாக்கிப்

பெருமகிழ் வெய்தப் பிணைத்த தெய்வம்
வாழ்க என்பார். வனப்பினைக் காணக்
காழகிற் குழலிர் கண்பல வேண்டும்
இரண்டே பெற்றனம் என்று புலம்புவார்.
அணிகள் உடலுக் கழகு செய்தில அவைக்கு
இவருரு வேஅணி இயற்றுவ என்பார்.
கண்டு கண்டு களிப்பார் பலரால்''

சீரும் சிறப்பும் தெரிவையர் ஏந்திச் சென்றார்கள். முழவங்கள் முழங்கிச் சென்றன. கோடும் சங்கும் சின்னமும் ஆர்த்துச் சென்றன. குறளும் சிந்தும் கூனும் முன் சென்றன. படைகள் பலவும் நடந்தன. தெரிவையர் திரண்டு பின்வரப் பொற்றேரூர்ந்து பொற்பு மிகுந்த பொன்னியோடு தேரிலேறி ஊர்வலஞ் சென்று புனல் நாடு கடந்து மதுரையை யடைந்தான் மன்னன் நெடுஞ் செழியன். உடன் வந்தார் பலருக்கும் பரிசில் வழங்கி விடை கொடுத்தனுப்பினான். பொன்னியும் செழியனும் பூவும் மணமும் போல உள்ளம் ஒன்றி உறைந்தார்கள். இன்பந் துய்த்து இனிது வாழ்ந்தார்கள். காவிலாடிக் களிமகிழ் வெய்தினார்கள். வாவியிலாடி மகிழ்ந்தார்கள். மலைமிசை யிவர்ந்தும் அலைகடல் படிந்தும் அகங் களித்தார்கள்.

இங்ஙனம் மணமக்கள் இன்பந் துய்த்து வாழுங் காலத்து, வேள் எவ்வியும் முத்தூர்க் கூற்றத்து மன்னனும் உட்பகை யுடையவராய்ப் நட்பிலராய் பாண்டியனுக்கு மாறுபட்டு வாழ்ந்தார்கள். அவ்விருவர் வலியையும் அடக்குதற் கெண்ணி மயிலனைய மங்கை

பொன்னியைப் பிரிந்து நால்வகைப் படைகளையும் நடத்திச் சென்ருன் தென்னவர் கோமான் செழியன். ஞாயிறு மேலை வெற்பை மேவிற்று. மாலையும், பிறையும்,வாடையும் தோன்றிக் கணவனைப்பிரிந்த காரிகை பொன்னிக்கு இன்னல் விளைத்தன. துணையைப் பிரிந்த அன்றில் போன்று அவள் துயருற்று வாழ்ந்து வந்தாள்.

## வாடை

ஞாயிற்றின் வெம்மையினுல் கீழைக்கடலில் தோன்றி நீராவியாய் நெடு விசும்படைந்து பகைவர் மேற் செலும் பாண்டியன் நெடுஞ் செழியன் படை போல் பரந்து ஆர்த்து, அவன் வில் வளைத்து எய்யுங்கணைபோல் பல துளிகளைச் சிதறுங் கருமுகில், புகழ்ந்து பாடும் புலவர்க்கு அவன் வரையாது கொடுக்கும் வண்மையைப்போல மலையினும் நிலத்தினும் பெரும் மழையைப் பெய்தலினுல் பெருகி ஓடுகின்ற நீர் கல்விற் புரண்டு, காலில் நடந்து, கிளைகளோடு சேர்ந்து, ஓடையிலோடிக், குளம் புகுந்து, அவன் புகழ்போல் நிறைந்து, மதகூடு சென்று முன்னிருந்த கடலுக்குச் செல்லுந்தொறும் நிலமெங்கும் தண்ணீர் ஓடுதலினுலும், மரங்களும் செடிகளும் கொடிகளும் பன்மலர்களை அடி முதல் முடிவரை மலர்த்தி வானவில்லில் வயங்கித் தேன் துளிகளையும் மழைத்துளிகளையும் சிந்துதலினுலும், வெண் முத்துக்களை வெளிப் படுத்துவது போலப் பல்வகைப் புல்களும் நெற்பயிர்களும் துளிகளைச் சுமந்து கொண்

டிருத்தலினாலும், வாவியில் உலவி, வயலில் நடந்து, காவில் நுழைந்து வாடைக்காற்று வீசுதலினாலும், துளிகளால் நனைந்த சிறகுகளையுடைய புட்கள் இரை தேர்ந்துண்டு இன்புற்று வாழ்தலை ஒழிந்து மாடங்களின் கொடுங்கைகளில் தங்கி வருந்தும்; குயில்களும் வண்டுகளும் பாடல்களை மறந்து நடுங்கித் துயருறும்; ஆடுகள் புற்களை உண்ணுமலும் வேறோரிடம் செல்லாமலும் மெலிந்து மாயும்; யாழை விடுத்துப் பாடுதலொழிந்து போர்வையால் மூடி மங்கையர்கள் நடுங்குவார்கள்; சிறுமியர் பொய்கையில் நீராடார், பொழிலில் பூக்கள் கொய்யார்; சிறுவர் தெருக்களில் விளையாடார்; கணவரைப் பிரிந்த மகளிர் உணவு கொள்ளார். மலர் புனையார்; போருக்குச்சென்ற தன்காதலர் மீள்வர் என்று அவர் வருகை நோக்குவர்.

பகைவர் மேற் சென்ற பாண்டியன் மனைவி பொன்னி உயர்ந்த கால்களையுடைய கட்டிலில் தலையணைமேல் தலையை வைத்துக் கருங்கூந்தல் மார்பில் புரளவும், கைவளையல்கள் கழலவும், மெய் பசலைபூப்பவும் வெய் துயிர்ப்புற்று வெந்துயருறுவாள் தோழியை அழைத்து மன்னன் வருகையைக் கண்டு வா என்று ஏவுவாள். படுக்கையில் புரள்வாள். கிள்ளைக்குப் பாலூட்டி வேந்தன் பெயரை விளம்பும்படி செய்வாள். வாடைக்கு மெலிந்துவருந்தி எரியிடை அகப்பட்ட பூங்கொடிபோல இன்னலெய்துவாள். தோழிகள் சொல்வன சொல்லிச் அவளைச் சூழ்ந்திருந்து அவள் துயரை ஆற்றிக் கொண்டிருந்தனர்.

போர்மேற்சென்ற புரவலன் நெடுஞ்செழியன் படைகள் நெடுவழி நடந்தன.

"துடியும் முரசும் போரெனச் சொல்லக்
கொடிமுன் செல்ல இடியென ஆர்த்துக்
கயலினந் தாவக் கடல்புரள் வதுபோல்
அயில் வேல் தாங்கி ஆட்படை சென்றது.
கடும்பரி மேற்செல் காளைகள் போலத்
தொடுகணை மறவர் துரகமேற் சென்றனர்.
வேழ மேற்செல் வெம்புலி போல
வாளினர் யானை வயினிவர்ந் தேகினர்.
தேரின் மேற் செலுஞ் சீயம் போல
வீரர் தேரின் மேலிவர்ந் தேகினர்.
கோளுலாம் வானைக் குறுகுதல் நலமெனத்
தூளி யெழுந்து துதைந்து பறந்தன"

இவ்வாறு நால்வகைப் படைகளும் நடந்து வேள் எவ்வி மிழலைக் கூற்றத்தை அடைந்தன. எவ்வி செழியன் வருகையைத் தெரிந்து தன் படைகளோடு வந்து எதிர்த்தான். பெரும்போர் நடந்தது. அப் போரில் பாண்டியன் வேலொன்று எவ்வி மார்பூடேகி மண்ணில் வீழ்த்தி மாய்த்தது. அவன் வீரர்கள் போர் செய்யா தொழிந்தனர். வேள் எவ்வி மனைவி அவண் வந்து அவன்மேல் விழுந்து அழுது புலம்பினாள்.

எவ்வி மாய்வையும் அவன் மனைவி புலம்பலையும் கண்டு வருந்தி வெள்ளெருக்கிலையார் என்ற புலவர் "நோவக் கடவேனோ யான்? எனது வாழக் கடவ மிக்க நாள் மாய்வதாக. பிடியினது அடிபோன்ற சிறிய இடத்தினை மெழுகித் தன்னை மேவப்பட்ட

காதலி புன்மேல் வைக்கப்பட்ட இனிய சிறிய பிண்டத்தை எவ்வாறு உண்டான் கொல்லோ? உலகத்தார் யாவரும் புகும் பரிசு திறந்த வாயிலையுடைய பலரோடுங் கூடி உண்டலை மருவியோன்" என்னும் பொருள்பட,

" நோகோ யானே தேய்கமா காலை
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயிற்
பலரோ டுண்டல் மரீஇ யோனே."

புறம்—234

என்னும் பாடலை வருந்திப் பாடினார்.

நெடுஞ் செழியன் மிழலைக் கூற்றத்தைக் கைப்பற்றியபின் முத்தூர்க் கூற்றத்தை அடைந்து வேளிர்களை வென்று அக்கூற்றத்தையும் கொண்டான். பாசறைக்குச் சென்று விழுப்புண்பட்ட வீரர்களைப் பார்த்து உரையாடும் பொழுது வாடைக்காற்று அம்மன்னன் மெய்யில் வீசி நடுங்குவித்தது. தன்னை நடுங்குவித்த வாடைக்காற்றுத் தனித்திருக்கும் தன் மனைவியையும் நடுங்குவித்து வருத்துமென்று எண்ணி அப்பொழுதே தேரேறிப் புலவர் பாட, வீரர்கள் சூழ, சங்கம் அதிர மதுரை மாநகரை எய்தினான். அரண்மனையை அடைந்து வாடையால் வருந்தி மெலிந்து துயிலிழந்து சோரும் தன் துணைவியைக் கண்டு அவளை மகிழ்வித்தான்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் என்ற புலவர் செழியன் வெற்றியையும், வாடையின் இயல்பையும், அதனால் வருந்திய கோப் பெருந்தேவியின் மெலிவையும், அவள் மெலிவை அம் மன்னன் வந்து நீக்கிய தன்மையையும் அமைத்து நெடு நல் வாடை என்னும் நூலைப்பாடி மன்னனை மகிழ்வித்தார். மன்னன் புலவர் திறமையையும் நூலின் அருமையையும் புகழ்ந்து அவனுக்குப் பரிசில் கொடுத்தான். மாங்குடி மருதனார் "நெல்லரி" என்னும் பாட்டைப்பாடி மன்னனைப் புகழ்ந்தார்.

## காஞ்சி

பேரரசர்களையும் வேளிர்களையும் வென்று பெறுதற்கரிய பெரும்புகழ் கொண்டு, தனக்கு நிகர் தானேயாகி விளங்கிய பாண்டியன் நெடுஞ்செழியன் தன் நாட்டை நன்கு காவல் செய்தான். அவன் ஆளுகைக்குட்பட்ட சிற்றரசர்களும் வேளிர்களும் திறை செலுத்தி வந்தனர். குடிகள் தங்கள் கடமைகளைக் கொடுத்தனர். மலை வளங்களும், வயல் வளங்களும் பொழில் வளங்களும், கடல் வளங்களும் அரண்மனையில் எங்குங் குவிந்து கிடந்தன. களவு, கொலை முதலியன நிகழாமல் காவலாளர்கள் காவல் செய்தனர். நீதி மன்றங்கள் முறை கூறுவோர் உரை கேட்டு நடுநிலைமையோடு ஆராய்ந்து முடிவு செய்தன. அறக்கூழ்ச்சாலைகள் உழைப்பில்லார்க்கும் ஆதரவில்லார்க்கும் பொருளில்லார்க்கும் உணவு கொடுத்தன. மருத்துவ நிலையங்கள் நோயாளர்களுக்கு மருந்தளித்தன. படைப் பயிர்சிக் கழகங்கள் இளைஞர்களுக்கு, விற்

பயிற்சியும், குதிரை ஏற்றமும், மற்போரும் கற்பித்தன. செந்தமிழ்க் கழகங்கள் அறம் பொருள் இன்பங்களின் இயல்பையும், கடவுளியல்பையும் எடுத்துரைத்தன.

மேலும் மன்னன் காடு கெடுத்துக் கழனி யாக்கினான். வீடுகளைப் புதிதாய்க் கட்டிப் பலவூர்களை உண்டாக்கினான். குளங்கள் தொட்டுக் கூலங்களை விளைவித்தான். மரங்களை வழிகளில் வைத்து நெறிப்படுவார்க்கு நிழலாக்கினான். பூம்பொழிலும் பொய்கையும் உண்டாக்கினான். பள்ளிகள் அமைத்து அனைவர்க்கும் செந்தமிழைப் பயில்வித்தான். பாடும் புலவர்க்கும் பாணர்களுக்கும் பரிசில் வழங்கினான். எளிமையிற் காணும் இடத்திலிருந்து குடிகள் கூறும் குறைகளை நீக்கினான்.

போர் செய்வதற்குப் பகைவரின்மையால் சேவற்போரும், தகர்ப் போரும் பார்த்தும், சொற் போரும் இசைப்போருங் கேட்டும் பொழுது போக்குவான். சிவபெருமான் முதலிய தெய்வங்களுக்கு விழாவெடுத்துப் பலரையும் தொழும்படி செய்வான்.

ஓங்கிய புகழையுடைய மாங்குடி மருதனார் பாவலர் புகழும் பாண்டியன் திறமையையும் அறச் செயலையும் தெரிந்து அவனுக்கு வீட்டுநெறி உணர்த்த எண்ணி, அவனை அணுகி, "மன்ன! வென்று புகழ் கொண்ட வேந்தே! மலர் தலை யுலகத்துப் பிறந்து மாய்ந்தோர் கடல் மணலினும் பலராவர். பிறவியினால் பயன் பெற்றோர் சிலராவர். நீ கல்வியில் சிறந்

தனை. காவல் புரிதலிற் சிறந்தனை. நல்லறங்களை நாடிச் செய்தாய். வில்லும் புலியும் வேறு கொடிகளும் வல்லமை யிழந்து வணங்க நின்றாய். நீ நினைந்த நிலமும் பொருளும் நின்னை நாடி வந்தடையும். நின்னுடைய புகழ் மண்ணில் மாயாது. உலகம் பலருக்கும் பொதுவாகும். பகைவர் தங்கள் படையால் வலிமை யடையின் உலகம் அவரை அடைந்துவிடும், உருளும் சக்கரம் போலச் செல்வம் ஓரிடத்தும் நில்லாது. உடம்பும் உயிரும் ஒன்றி வாழினும் ஒன்றைவிட்டொன்று பிரியும் இயல்பின. உயிர் உடலைவிட்டுப் பிரியும் பொழுது அதனைத் தொடர்ந்து செல்வன நல்வினை தீவினைகளேயாம். நீ செய்யும் நல்வினைகள் புகழையும் இன்பத்தையும் நல்கினும் அவை பிறவியை ஒழிக்கா. அவிசொரிந்து வேள்வி செய்வது உயிர்க்கொலையாகும். நான் சொல்லிய இவற்றை நீ பலரிடமும் கேட்டு உண்மையை அறிவாயாக. செழிய? கடவுள் வழிபாட்டில் நின்கருத்தைச் செலுத்துவாயாக. அக்கடவுள் வழிபாட்டிலும் சமயக்கணக்கர் தாம் தாம் கண்டு கூறிய வழிகளிற் செல்லாது செந்தமிழ் மாந்தர் தெள்ளிதின் ஆராய்ந்து உரைத்த கந்தழிக் கடவுளைக் கருத்தில் வைத்து மெய்யறிவாகிய விளக்கினால் அகவிருளை நீக்கி அக்கடவுளைக் கண்டு களிப்பாயாக. மக்கட் பிறப்பினால் எய்தும் மிக்க பயன் இதுவேயாகும். நின் வாழ்நாள் சிறந்து விளங்குக" என்னும் பொருள்பட மதுரைக் காஞ்சி என்னும் அரிய நூலைப் பாடி மெய்யுணர்த்தினர்.

பாண்டியன் கேட்டு மலர்த் தேனுண்ணும் வண்டு போல் மகிழ்ந்தான், உலகினியல்பையும் உண்மை அறிவையும் அறிந்தான். காஞ்சி பாடிய மாங்குடி மருதனார்க்கு உயர்ந்த பரிசில் உவகையில் நல்கினான். புலவர் கூறியபடி நான் எனது என்னும் செருக்கறுத்து அவா வொழித்துப் பிறவா யாக்கைப் பெருமானை மனத்திலிருத்தி அகவிருள்கடிந்து அவனருளாலே அவனை உணர்ந்து பிறவி நீங்கிப் பேரின்பமுற்றான்.

# கொடை மன்னர் மூவர்

(உரை நடை)

1. வள்ளல் ஓரி.

2. வள்ளல் காரி.

3. வள்ளல் அதியமான்.

# கொடை மன்னர் மாண்பு

## தமிழ்த் தெய்வ வணக்கம்

தேனினு மினிய தீஞ்சொல்
செய்யவாய் திறந்து பேசி
நானிலம் புகழும் பாடல்
யாமொடும் நன்கு பாடிக்
கானிலந் தொடங்கின் றுடும்
செந்தமிழ்க் கன்னி தன்னை
ஊனிறை உறுப்பால் நெஞ்சால்
உயிரினுல் வணங்கு வேமால்.

வானினிடத்தே உலாவும் முகில் துளிகளை யுடைய மழையைப் பொழிவதால், கார்காலத்திலும் வறண்ட வேனிற்காலத்திலும் பல்வகைப் பயிர்களை யும் வெற்றிடம் சிறிதுமின்றிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானில மெங்கும் வளர்ப்பது தமிழ் நாடாகும். அந்நாடு, சேய்கள் இருக்கும் இடத்தை நாடிச் சென்று பாலூட்டி வளர்க்கும் செவிலித் தாயாரைப் போன்று பயிர்கள் நிற்கும் இடந் தேடிச் சென்று அவற்றை வளர்க்கும் காவிரி முதலிய ஆறுகளையுடையது. உண்டு உண்டு அழித்தாலும் ஒழிவுறுத உணவுகளையும், கண்டு கண்டு நீங்கினும் கண்டு முடிவுறுத காட்சிகளையும், தமக்கு வேண்டுவனவற்றைக் கொண்டு கொண்டு, மேலும் மனம் நிறைவுறுமல், இன்னும் கொடு என்று அடையும் மக்களுக்கு, இன்னும் இருக்கின்றன என்று தருகின்ற பலவகை இயற்கை வளங்களை யும் உடையது. உலகத்திலே தோன்றிய மொழிகள்

அனைத்திற்கும் முன்னால் தோன்றியும், வடமொழிக்கு அறிவுநூல்களைப் புகட்டியும், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளைப் பெற்றெடுத்தும், புகழ் பெற்று விளங்கும் தமிழ் மொழியைத் தன்னகத்தேயுடையது. வடக்கில் வேங்கட மலையையும் ஏனைத் திசைகளில் கடத்தற் கரிய கடல்களையும் அரணாக உடையது. தன்னை நோக்கி வரும் பகைவர்களை வென்றடக்கும் பல அரசர்களையுடையது. குன்றனைய கொடி மாடங் களையுடைய தெருக்களைக்கொண்ட அரசர்கள் வீற் றிருக்கும் தலைநகரங்களையும், வேறு பல ஊர்களையும் நல்லறங்களைச் செய்யும் குடிகளையும் உடையது. பிறப்பினால் உயர்வில்லை; அறிவினாலே உயர்வு உண்டு என்னும் அறிஞரை உடையது.

அத்தகைய தமிழ் நாட்டில் பெருஞ்சித்திரனார் முதலிய பல புலவர்கள் வாழ்ந்து வந்தார்கள். பெருஞ் சித்திரனார் சோழ நாட்டிலுள்ள ஆவூரிற் பிறந்தவர். மூலங்கிழாருடைய புதல்வர். தம்மனத்திற்கினிய மங்கையை மணந்து பல புதல்வர்களைப்பெற்றெடுத்து மகிழ்ந்தார். தாம் ஈட்டும் பொருள் தம் வாழ்க்கைக் குப் போதுமானதாயில்லை. தம் தந்தையார் ஈட்டி வைத்திருந்த பொருள்களையும் செலவு செய்து காலங் கழித்தார். பக்கத்திலுள்ள பலரிடத்தும் பல பொருள் களைக் கடன் வாங்கிச் செலவு செய்தார். நாளுக்கு நாள் புலவர் நல்குரவினால் நலிவு எய்தலானார்.

பெருஞ்சித்திரனாருடைய தாயார் மூப்பினால் தளர்ச்சி யடைந்தவள். முதுகு கூனியவள். கோலூன்றி நடந்து செல்பவள். மூப்பின் தளர்ச்சி

யாலும் வறுமையின் வருத்தத்தினாலும் தன் உயிரைக் கொண்டு செல்லாத காலனை ஒரு பக்கம் வைது கொண்டிருப்பாள். அவருடைய மனைவி அழுக்கேறிய உடையை உடையவள். தானியம் இல்லாமையினால் நிலத்தில் முளைத்திருக்கும் கீரைகளைக் கொய்து சமைத்துப் பிள்ளைகளுக்கும் கணவருக்கும் ஊட்டிப் பசியினால் ஒருபக்கம் வருந்திக் கொண்டிருப்பாள். கைக்குழந்தை உண்ணுவதற்குப் பாலில்லாமலும் வேறு குழந்தைகள் கஞ்சி யில்லாமலும் தாயின்மேல் விழுந்து அழுது கொண்டிருப்பார்கள். புலவரும் உடலின் தளர்ச்சியாலும் உள்ளக் கவலையாலும் துன் புற்று வாழ்ந்தார்.

பெருஞ்சித்திரனார் வேறு புலவர்களைப் போலத் தம் வறுமைப் பிணியை நீக்க எண்ணினார். எண்ணி வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சியை அடைந்தார். அவன் கொடுத்த பொன்னைக்கொண்டு வந்து தம் தாயார்முதலியோர்களை ஊட்டிவளர்த்தார். வெளிமான் என்னும் சிற்றரசனிடம் சென்றார். புலவர் சென்றகாலத்தில்அவன் உயிர்நீங்கும்நிலையிலிருந்தான். அவன் தன் தம்பி இளவெளிமானை அழைத்துப் புலவருக்குப் பொருள்கொடு என்றுகூறி இறந்து போனான். இளவெளிமான் புலவருக்குச் சிறிது வழங்கியதனால், அதனைப் பெற்றுக்கொள்ளாமல், அவ்விடத்தை விட்டகன்று முதிரமலைக்குத் தலைவனாகிய குமணன் என்னும் வள்ளலை அடைந்தார். அடைந்து, "முதிரமலைத் தலைவ! ஓ குமண! பறம்பு மலைக்கு வேந்தனாகிய பாரியும் உயர்ந்த உச்சியையுடைய கொல்லிமலையை

யாண்ட வலிய வில்லையுடைய ஓரியும், காரியென்னும் பெயரையுடைய குதிரையைச் செலுத்திய பெரிய பூசலை வென்ற மாரிபோலும் வண்மையையும் மிக்க போரினையுமுடைய மலையனும், செலுத்தப்படாத உயர்ந்த குதிரை யென்னும் மலையையும் கூரிய வேலையும் கூவிளங்கண்ணியையும் வளைந்த ஆரத்தையுமுடைய எழினி அதியமானும், மிகக்குளிர்ந்த மலையின்கண் இருள் செறிந்த பெரிய முழையினையும் மலைத்தற்கரிய வலியினையுமுடைய தெய்வங்காக்கும் உயர்ந்த சிகரங்களையுடைய பெரியமலை நாடனாகிய பேகனும் திருந்திய சொல்லையுடைய மோசி யென்னும் புலவனாற் பாடப்பட்ட ஆயும், ஆசைப்பட்டுத் தன்னை நினைந்து வருவாருடைய வறுமையை மிகவும் நீங்கத்தவிராது கொடுக்கும் கூறுபாடமைந்தவண்மையினையுடைய பகைவரைத்துரத்திய நள்ளியும் எனச் சொல்லப்பட்ட எழுவரும் இறந்தபின்பு கண்டார்க்கு இரக்கம் வரும்படி பாடி வருவாரும் பிறருங்கூடி இரந்தோரது துன்பத்தைத் தீர்க்கக் கடவேன் யான் என்று நீ இருத்தலால் விரைந்து இவ்விடத்தே பரிசில் பெற நினைந்து வந்தேன் 'யான்'' என்னும் பொருள்பட "முரசுகடிப் பிகுப்ப" என்னும் பாடலைப்பாடினார். குமணன் சொல் நய மிகுந்த அவருடைய பாடலைக்கேட்டு மகிழ்ந்து, அவரைத் தன் அருகிருத்தி உணவருத்தி உபசரித்தான். பின்பு புலவருக்குப் பொன்னும் பூணும் உடையும் அவருள்ளம் உவக்கக் கொடுத்தும், அவர் செம்மாந்து செல்லுமாறு பெரிய யானையும் கொடுத்தான்.

பெருஞ்சித்திரனுர் குமணன் கொடுத்த பரிசில் களைப் பேருவகையோடு பெற்று அவனிடம் விடை கொண்டு அவன் கொடுத்த யானைமீதிவர்ந்து செம் மாந்து தம்மூருக்கு மீண்டார். மீளும் வழியில், தமக் குச் சிறிது பொருள் கொடுத்துத் தக்கவாறு தம்மை உபசரியாத இளையவெளிமானுரரை அடைந்து,யானை யினின்றும் இறங்கி, அவ்யானையை அவனுடைய காவல்மரத்தில் கட்டி, அவனுறையும் அரண்மனையுட் சென்று, அவனைக்கண்டு,"இரப்போர்க்கு ஈந்து பாது காப்பாய் நீயும் அல்லை; புரப்போர் இரப்போர்க்கு இல்லையும் அல்லர்; இனி இரப்போர் உண்டாதலை யும் காண்பாயாக; இனி இரப்போர்க்கு இடுவோர் உண்டாதலையும் காண்பாயாக, நின்னுடைய ஊரின் கண் காவலையுடைய மரம் வருந்தக் கொண்டு வந்து யாம் கட்டிய உயர்ந்த நல்ல இலக்கணமுடைய யானை எமது பரிசில்; விரைந்த செலவினையுடைய குதிரை யையுடைய தலைவனே இனியான் போவல் என்னும் பொருள்பட,

இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க் கில்லையும் அல்லர்
இரவலர் உண்மையுங் காண் இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங் காண் இனிநின் னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே. புறம்—162

என்னும் பாடலைப்பாடி' யானையை அவ்விடத்தில் விட்டு விட்டுக் குமணன் கொடுத்தபொருள்களோடு தம்மூரை அடைந்தார்.

தம் தந்தையார் பரிசில் பெற்று மீண்டதை அறிந்த அவருடைய மக்களும் அவருடைய மனைவியாரும் அவரை வரவேற்றுச்சூழ்ந்திருந்தார்கள். தாம் கொண்டு வந்த பொருள்களை அவர்களுக்குக் காட்டி வள்ளல் குமணனுடைய கொடையையும் குணங்களையும் அவர்களுக்குப் புகழ்ந்து கூறினர். பின்பு "நின்னைக் காதலித் துறையும் நின் சார்வாய மகளிர்க்கும் நீ அன்பு செய்து ஒழுகப்பட்ட மகளிர்க்கும் பல குணங்களும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய நினது சுற்றத்து மூத்த மகளிர்க்கும் நமது சுற்றத்தினது மிக்க பசி நீங்க நினக்கு நெடு நாட்படக் குறித்த எதிர்ப்பை தந்தோர்க்கும், மற்றும் இன்ன தன்மையார் என்று கருதாது என்னொடு கூடி உசாவுவதுஞ் செய்யாது சதுரப்படக் குடிவாழ்க்கை வாழக்கடவே மென்று கருதாது பலாப்பழம் முதலாயின தூங்கும் முதிரமென்னும் மலைக்குத் தலைவனாகிய திருந்திய வேலையுடைய குமணன் நல்கிய செல்வத்தை நீயும் யாவர்க்கும் வழங்குவாயாக" என்னும். பொருள்பட,

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே, புறம்—163

என்னும் பாடலைப்பாடித் தாம்கொண்டு வந்த பல பொருள்களையும் பலருக்கும் கொடுக்கும்படி தம் மனைவிக்குக் கட்டளையிட்டார். புலவர் தம் வறுமை நீங்கப் பெற்றுத் தாமும் தம் இனத்தாரும் உண்டு,பிறர்க்கும் கொடுத்து,நல்லறம் செய்து வாழ்ந்தார். அப்புலவர் பெருமான் வள்ளல் குமணனிடம் புகழ்ந்து கூறிய முறையில் வள்ளல்கள்எழுவருடைய வாழ்க்கைகளில் ஓரி, காரி, அதியமான் என்ற மூவர் வரலாறுகள் இந்நூலில் கூறப்படுகின்றன.

---

# 1. வள்ளல் ஓரி
## (ஆட்சி தலைப்பு)

கொங்கு நாட்டில் சிறந்து விளங்கும் மலை கொல்லி மலை. அது தன்னிடம் வருகின்றவரனைவர்களுக்கும் முதன் முதல் நிழலைக் கொடுக்கும். பின்பு, அவர்கள் குளிப்பதற்கு நீரைக் கொடுக்கும். உண்ணுவதற்குக் கனிகளையும் காய்களையும் கொடுக்கும். உண்ட பின் முடித்துக்கொள்வதற்கு நறுமணமுடைய மலர்களைக் கொடுக்கும். பூசிக் கொள்வதற்குச் சந்தனத்தைக் கொடுக்கும். கொண்டு செல்வதற்கு மணிகளையும் முத்துக்களையும் கொடுக்கும். தம்மிடம் வரும் புலவர்களுக்கு வள்ளல்கள் வழங்குமாறு போலப் பலவற்றையும் வருவார்க்கெல்லாம் வழங்குதலினால் புலவர்களால் அதுபுகழப்பட்டுள்ளது. அம் மலையில் வாழும் குறவர்கள், அகிலையும் சந்தன மரங்களையும் எரியூட்டி அழித்து, அவ்விடத்தில் யானை மருப்பினால் வேலி அமைத்து, அருவி நீர்பாய்ச்சித் தினை,ஐவனம் முதலிய பயிர்களை வளர்ப்பார்கள். பெண்கள் அப் பயிர்களைப் பகற்காலங்களில் முத்துக்களாகிய கற்களை வைத்துக் கவணெறிந்து காவல் செய்வார்கள். விளைந்த பின் தானியங்களை அனைவரும் தங்கள் வீட்டில் நிரப்பிக்கொள்வார்கள். சிறுவர்கள் முயலையும் வேங்கைக் குட்டிகளையும் முடுக்கிப் பிடிப்பார்கள். ஆடவர்கள் அயிலையும் அம்பையும் கையிற்கொண்டு சென்று புலி கரடி முதலிய விலங்குகளை வேட்டையாடுவார்கள். மகளிர்கள் மயில்போல் நடந்து மலர் கொய்து மகிழ்ந்து விளையாடுவார்கள்.

கொல்லிமலை நாட்டை அறநெறியில் அரசாண்ட அரசன் வல்வில் ஓரி ஆதன் என்பவன். இவன் சிறு வயதிலே கல்வியில் வல்லவனானன். வில்லிலும் வீரனாக விளங்கினான். வில் வித்தையில் வல்லவனாக விளங்கியதனால் இவன் வல்வில் ஓரி என்று வீரர்களால் புகழப்பட்டான்.

வல்வில் ஓரியாதன் தன் தாய்மொழியாகிய தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினான். அம்மொழி சொல் நயம் பொருள் நயமுடையதாயிருப்பதையும், உவமேயத்திற்குத் தகுந்த உவமானத்தை எடுத்துக் கூறி விளக்குவதையும், அக நோயை நீக்கும் அரு மருந்தாயிருப்பதையும் அறிந்து அதனை நன்கு கற்றறிந்தான். பின்பு, தன் மனத்திற் கியைந்த மங்கை யொருத்தியை மணந்து இல்லற நெறி யொழுகி நல்லறம் பல புரிந்து வந்தான். அவன் தன் நாட்டை வறிஞன் ஒருவன் தன் வயலைஅடிக்கடி சென்று கவனிப்பதுபோலவும், ஒரு மாது தன் மகவை அடிக் கடி கவனிப்பது போலவும் கவனித்து குறை கடிந்து முறை செய்து வந்தான். தன்னை நோக்கிவரும் புலவர் களுக்கு அருமருந் தனைய அமுதருத்தி அவர்களுக்கு அன்பினால் அருங் கலங்களும் ஆடையும் பொன்னும் அளித்து வந்தான்.

## வேட்டை

இவ்வாறு வாழ்கின்ற காலத்தில் ஓரி வேட்டை யில் விருப்புடையவனாய் வில்லும் அம்பும் வேலும் எடுத்துக்கொண்டு கொல்லி மலையை நோக்கிச் சென்

ருன். சென்ற நெறியில், கொடையிற் சிறந்த கொற்றவன் வருகையை யறிந்த நில மடந்தை தன் பல கண்களினால் அவனைக் கண்டு மகிழ்வது போல அங்கிருந்த கருவிளை மலர்கள் மலர்ந்திருந்தன. அந் நில மடந்தை அவனைக் கண்டு இரும்பூதுற்று மயிர் பொடித்தாற் போலப் புற்கள் பொலிந்து விளங்கின. பெண்கள் தங்கள் மொழியினால் தங்களை வெல்வதை அறிந்த கிள்ளைகள் அவர்களுடைய தினைப்புனத்திலுள்ள கதிர்களைத் தின்றழிப்பதற்குச் செல்லும். அவற்றை அப் பெண்கள் கண்டு கவணால் எறிந்து காவல் செய்வார்கள். அம் மலையிலுள்ள மந்திகள் மாங்கனிகளில் வெறுப்பு ஏற்படின் பலாக் கனிகளை மாந்திக் காட்டில் வளர்ந்துகிடக்கும் ஊசலில் களித்து விளையாடும். மான்களிற் சில தினைக்கதிர்களைத் தின்று கொண்டிருக்கும். சில தாவி விளையாடும். சில மான்கள் வேங்கையைக் கண்ட விடத்து வெருண்டு ஓடும்.

காவலன் கண்ணுக்கினிய காட்சிகளைக் கண்ட விடத்துச் சிறிது நின்று நின்று கண்டுமகிழ்ந்தான். மான் முதலிய விலங்குகளையும் கண்டான். அவன் அப்பால் செல்வதை நிறுத்திக்கொண்டான். ஓரம் பெடுத்து வில்லில் இணைத்து அவ்விலங்குகளை எய்தான். அவ்வம்பு பற்பல விலங்குகளின்மேல் பாய்ந்து அவற்றைக் கீழே வீழ்த்தித் தானும் கீழே விழுந்தது. அவ்விடம் விட்டகன்று சென்றபொழுது புலியும், கரியும் ஒன்றோடொன்று வெகுண்ட முழக்கம் ஒரு பக்கம்கேட்டது. மேகமும் வேழமும் மாறு கொண்டு முழங்கும் முழக்கம் ஒருபக்கம் கேட்டது.

காரிருளனைய கரடி பன்றிகளின் முழக்கம் ஒருபால் கேட்டது. முழக்கம் வரும்வழியை நோக்கி அரசன் நடந்து சென்றான்.

அரசன் நடந்து சென்றபொழுது ஒரு கரியை ஒரு புலி வெகுண்டு நோக்கி வாயைத் திறந்து உருமிக் கொண்டிருந்தது. அவ்விரண்டு விலங்குகளுக்குப் பின்புறம் ஒரு பன்றியும் ஒரு மானும் நடந்துகொண் டிருந்தன. அவை நான்கினையும் அவ்வரசன் கண்டு அவற்றை எய்வதற்கெண்ணிக் கணையை எடுத்துக் குறி வைத்துஎய்தான். அவன் எய்த அம்பு ஒருவாழை மரத்திலுள்ள காயொன்றினையும் கனியொன்றினை யும் இலையின் காம்பொன்றினையும் பூவின் மடலொன் றினையும் இலையொன்றினையும் எளிதில் துளைத்து ஊடுருவிச் சென்றாற் போலக் கரியினையும் புலியினை யும், கலைமானையும், பன்றியையும் ஊடுருவிச்சென்று, மேலே தலையை நீட்டிக்கொண்டு புற்றிலிருந்த உடும் பினையும் ஊடுருவிச் சென்று அப்புறம் போயது.

## பரணரைக் காணுதல்

இங்ஙனம் வில்லில் ஓரிவேட்டையாடும்பொழுது வேறோரூருக்குச் செல்ல எண்ணித் தம்மினத்தாரோடு அம்மலைவழியாக நடந்து ஓரிடத்தில் தங்கியிருந்த வன்பரணர் என்னும் புலவர் விண் என்று ஒலிக் கும் ஓரொலியைக் கேட்டார். அவ்வொலியைத் தொடர்ந்து விலங்குகளினுடைய ஒலிகளையும் கேட் டார். தம் கண்களுக்கு முன்பாகவே கணையொன்று கடுகிச் செல்வதையும் கண்டார். என்னை? யார் கணை

விடுவது? என்று திகைத்துக் கொண்டிருந்தார். திகைத்து நின்றளவில், முன்சென்ற கணை மண்ணில் வீழ்ந்து புதைந்தது. ஒருவிலங்கு மண்ணில் துள்ளித் துள்ளிப்புரண்டு கொண்டிருந்தது. இக் காட்சிகளைக் கண்டபுலவர் விரைந்து சென்ற படை யாது? எய்தவன் யாவன்? என்று அறிவதற்கு மெல்லச் சென்று பார்த்தார். உடும்பையும் கணையையும் கண்டார். எய்தவன் யாவன் என்று பார்த்தபொழுது, அக்கணை வந்த வழியில் ஒன்றன் பின் ஒன்ருகப் பல விலங்குகள் மண்ணிடை வீழ்ந்து மாய்ந்து கிடத்தலைக் கண்டு வியப்பும் திகைப்புங் கொண்டு நின்ருர்.

வன் பரணர் அங்ஙனம் திகைத்து நிற்கும் பொழுது, இடது கையில் வில்லை ஏந்தியவனும், மாலையை யணிந்த மார்பை யுடையவனும, சந்தனம் பூசிய தோள்களை யுடையவனுமாகிய ஓராடவன் அங்கே வந்தான், தன் அம்பினுக்கு இரையாகி மண் ணிடைக் கிடந்த மாக்களைக் கண்டான். அவ்விலங் குகளை வழியிற் செல்லும் யாருக்காவது கொடுக்கலா மென்றெண்ணி நிமிர்ந்து பார்த்தான். அவன்பார்வை வன்பரணர் மேல் விழுந்தது. வன்பரணரும் அவ ரைக்கண்டார்.

அவ்வாடவன் யாவன் என்று வன்பரணர் எண் ணினர். இருவரும் ஒருவரை யொருவர் அறியார். ஆடவனுடைய வடிவமும் அணிகலங்களும் அவனை மன்னன் என்று தெரிவித்தன. அவன் தம்மைப்

பார்த்து அணுகுஞ் செயல் அவனை அருளுடைய வன் என்று தெரிவித்தது; அவ்வளவில், புலவர் விரைந்து நடந்து தம் உறவினர் உறையும் இடத்தை அடைந்தார். பாணர்களே! பறையை அடியுங்கள். யாழை வாசியுங்கள். இசைப்பாட்டைப் பாடுங்கள். பிரம்பை எடுத்து என் கையிற் கொடுங்கள் என்று கூறினர். தோற்கருவிகளும் துளைக்கருவிகளும் அளவோடு ஒலித்தன. யாழ் வாசிக்கப்பட்டது. இசைப்பாட்டுப் பாடப்பட்டது. வன்பரணரும் அவருறவினரும் இங்ஙனம் அவ்வாடவனை வரவேற்றனர். அவன் அவர்களிசையைக் கேட்டு அகமிக மகிழ்ந்தான். அவர்கள் பாடப்பாட அவர்கள் இசையில் மனத்தைப் பதியவைத்தான். அப்பாடல்களின் பொருளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். இங்ஙனம் அவ்வாடவன் மகிழ்ச்சியடைவதைக் கண்டும் அவன் தோற்றப் பொலிவைக் கண்டும் வன்பரணர் அவனைப் புகழ்ந்து பாடத் தொடங்கினர். அப்புகழுரையைக் கேட்பதற்கு நாணி அவன் தலைகவிழ்ந்தான். மேலும் தன்னைப் புகழாதபடி, இது மானூன் ; இதனைத் தின் மின். இது தேன்; இதனைப் பருகுமின் என்று கூறி அவர்களை உண்பித்தான். மேலும்,"பாணர்களே! நீவிர் கல்லின் வழியாகவும் காடுகளின் வழியாகவும் இங்கு நடந்து வந்திருக்கிறீர்கள். வழியில் பல அல்லல்களை அடைந்திருப்பீர்கள். உணவருந்திக் களைப்பு நீங்கு முன் பாட்டுக்களைப் பல திறத்திலும் பாடினீர்கள். உங்கள் இசை மிகவும் இனிமையாயிருந்தது. யான் தனித்து இங்கு வேட்டையாட வந்தேன். உங்கள்



TAMIL NADU ARCHIVES
EGMORE, MADRAS-600 008
106189

இசைக்குத் தக்கவாறு கொடுப்பதற்கு என்னிடம் பொருளில்லை. இப் பொன்னையும் மணியையும் பெற்றுக் கொள்ளுங்கள். என்மேல் வெறுப்புக் கொள்ளாதீர்கள்" என்று பலவற்றைக் கொடுத்து அவர்களிடம் விடைபெற்றுத் தான் வந்தவழியே சென்று அரண்மனையை அடைந்தான்.

வன்பரணரும் அவருறவினரும் அரசன் சென்றபின் அவனைப் புகழ்ந்தார்கள். அவன் நல்ல குணமுடையவன் என்றனர். அவன் சொற்கள் இனிமையானவை என்றனர். அவனைப் புகழும்போது, தான் பெரியோனுதலில், கேட்பதற்கு நாணினன் என்றனர். வன்பரணர் அவன் வேட்டையின் திறமையையும் அவனைக் கண்ட வரலாற்றையும் விரித்துக் கூறினர். அனைவருஞ் சென்று அவன் வேட்டையாடிய விலங்குகளைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

## பாணர்கள் அரண்மனையை அடைதல்

வழியிலே கண்ட மன்னனை அவன் அரண்மனையிலும் காணவேண்டும் என்று எண்ணினர்கள். எண்ணி, மன்னன் சென்ற வழியே நடந்து சென்றார்கள். வழியில் மழைநீரால் மாசு நீங்கிய கருங்கற்கள் பாகனல் கழுவப்பட்ட யானைகள் போன்று காணப்பட்டன. தினைக் கதிர்களையும் தேமாங் கனிகளையும் பறித்து மலைமேலேறி அவற்றை உண்ணும் மந்திகள் இல்லறத்தினின்றும் நீங்கித் துறவற வாழ்க்கையை மேற்கொண்டு காய்கனி யுண்ணும் முனிவர்போன்று விளங்கின. இக்காட்சிகளைக் கண்டு செல்லுகையில்

மக்கள் மருளுமாறு அங்குமிங்கும் சென்று திரியும் கொல்லிப் பாவையையும் கண்டு இறும்பூதுற்று ஏகினார்கள்.

பாடலில் வல்லவராகிய பாணருடைய வருகையை அறிந்து, தங்கள் இசைமுறையைக் காட்டி அரங்கேற்ற எண்ணி, வண்டு குழலொலி எழுப்பியது; அருவி முழவொலி எழுப்பியது; கிள்ளை இசைப்பாட்டுப் பாடிற்று. அவற்றைக் கேட்டு நன்று நன்று என்று புகழ்ந்து பாணர்கள் நடந்து சென்றார்கள்.

மானினம் நிழலில் துஞ்ச
மரையினம் புலிகண் டஞ்சத்
தேனினந் தளிகள் செல்லச்
செழுங்கொடி மலர்ந்து நல்கக்
கானிடை மஞ்ஞை யாடக்
கண்டுகண் டுவந்து பாணர்
வானிடைக் கொடிக ளாடும்
மன்னவன் கோயில் சேர்ந்தார்.

அரண்மனை உள்ளிடம் அகன்றிருந்தது. பல தூண்களைப் பல வரிசைகளில் கொண்டிருந்தது. உள்ளே நுழைந்து மன்னனைக்கண்டு பாணர்கள் வணங்கினார்கள். வாழ்த்தினார்கள். முன்போலக் கருவிகளை இயக்கி இன்னிசைப் பாட்டுக்களைப் பாடினார்கள். மன்னன் அவர்களிசையில் ஈடுபட்டுக் கேட்டு இன்பந் துய்த்தான். வன்பரணர், "ஆனையைக் கொன்று வீழ்த்திய சிறந்த தொடையை யுடைய அம்பு பெரியவாயை யுடைய புலியை இறந்து பாட்டை யுறுவித்துத் துளைபொருந்திய கோட்டை யுடைத்

தாகிய தலையினையுடைய புள்ளிமான் கலையையுருட்டி உரல் போலும் தலையையுடைய கேழலாகிய பன்றியை விழச்செய்து அதற்கு அயலதாகிய ஆழ்தலையுடைய புற்றின்கண் கிடக்கின்ற உடும்பின்கண் சென்று செறியும் வல்வில்லா லுண்டாகிய வேட்டத்தை வென்றிப்படுத்தி யிருந்தவன், புகழமைந்த சிறப்பினையுடைய அம்பு ஏத்தொழிலிலே மிகச் சென்றுறுதற்குக் காரணமாகிய கொலைவன் யாரோ தான்? அருவியையுடைய பயன்படு மலைக்குத் தலைவனாகிய ஓரியோ அல்லனோ தான்? அவனைத் தரும் யான் பாடுவன். விறலி ஒரு வண்ணம் பாடு. யாழிலே பண்ணை நிறுத்துமின். சல்லியை வாசியுமின். சிறு பறையை அறையுங்கோள். கரிய கோலைக் கையின் கண்ணே தாருங்கோள் என்று சொல்லி அணுகித் தலைவனுதலாலே இருபத்தொரு பாடற்றுறையையும் முறையாற் பாடி முடித்துப் பின்னர்க்கோவே என்று அவன் பெயர் கூறிய காலத்து அவ்விடத்து அவ் வார்த்தை தன் பெயராதலால் நாணி, பின்னை யாங்கள் நாட்டிடந்தோறும் சென்று வருவோம்; இவ் விடத்து ஒரு வேட்டுவரில்லை நின்னை ஒப்பாரெனு யாம் விரும்பியது கூறவும் அதற்குக் காலந் தரானாய் வேட்டையின்கண் தானெய்த மானினது நிணத்தையுடைய தசையினது புழுக்குடனே ஆவின் நெய்யை உருக்கினாற்போன்ற மதுவைத் தந்து தன்னுடைய மலையின்கட்பிறந்த வலியில்லாத நல்ல பொன்னைப் பல மணித்திரள்களுடனே கலந்து இதனைக் கொள்மினெனச் சொல்லிச் சுரத்திடத்தே

எமக்குத் தந்தான் முழைமையை யுடைத்தாகிய உச்சியையுடைய உயர்ந்த பெரிய கொல்லிமலைக்குத் தலைவன். பாதுகாவாத வண்மையினையுடைய வெற்றியை விருப்புவோன்'' என்னும் பொருள்பட வேழம் வீழ்த்த என்னும் பாட்டைப் பாடினார்.

புகழுரையைக் கேட்பதற்கு நாணும் புரவலனாகி ஓரி புலவராகிய வன்பரணர் அன்பினால் இயம்பிய தமிழ்ப் பாட்டைக் கேட்டு மகிழ்ந்து பணிந்தான். வன்பரணருக்கும் அவரோடு உடன்வந்த அவருறவினர்களுக்கும் அமிழ்தனைய அடிசிலூட்டி அணிகலங்களும் ஆடைகளும் கொடுத்து யானைகளையும் பரிசிலளித்தான். பாணர்கள் அரசன் கொடுத்த பரிசில்களைப் பெற்று மகிழ்ந்து அவனிடம் விடைபெற்றுத் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். தாங்கள் கொண்டு சென்ற பரிசில்களைப் பலர்க்குங் காட்டி அரசனையும் அவன் விற்றிறமையினையும் அவன் கொல்லிமலையையும் புகழ்ந்தார்கள். கொண்டுசென்ற யானைகளைக் கந்துகளிற் கட்டிக் கவளமூட்டி வளர்த்தார்கள்.

அவர்கள் கொண்டு சென்ற அணிகலங்களைத் தங்கள் மனைவியர்களிடம் கொடுத்தார்கள். அவர்கள் அவற்றை வாங்கிக் காதணிகளை கழுத்திற் பூட்டியும், கழுத்தணிகளை காதுகளிற் பூட்டியும், கழற்றியும் மயங்கினார்கள். கொண்டு சென்ற பொருள்களைக் கொண்டு உண்டு உடுத்து உவந்தனர். முன்போல் பரிசில் பெறுவதற்கு எண்ணினார்களில்லை, பரிசில் பெற எண்ணு

மையினால் தாங்கள் கற்ற பாடற்றிறமையையும் மறந்து வாழ்ந்து வந்தனர்.

## வன்பரணர் வருத்தம்

பொருள் மிகுதியினாலும் வறுமை யின்மையினாலும் பழமையான தங்களுடைய தொழிலை மறந்த பாணர்களுடைய நிலைமையை வன்பரணர் எண்ணி வருந்தினார். வல்வில் ஓரியினுடைய கொடையே பாணர்கள் தங்கள் பாடற்றொழிலை மறப்பதற்குக் காரணம் என்று நினைத்தார். "முகில் சூழ்ந்த மலைக்குத் தலைவன் நாடோறும் பட்டம் முதலாகிய பூண்களை அணிந்த யானையை இரப்போர்க்குக் கொடுக்குங் கதிர் விடுகின்ற பசும் பொன்னாற் செய்த அணியினையும் வளைந்த கடகமணிந்த முன் கையினையுமுடைய கொல்லும் போர் அமையாத ஆதன் ஓரியினது மழைபோலும் வள்ளிய கொடையைக் காண்டற்கு மிகவும் சென்றது எம்முடைய கூத்தச் சுற்றம். அச் சுற்றத்தார் குளிர்ந்த நீரின்கண் பூவாத மணி மிடைந்த குவளைப்பூவை வெள்ளி நாரால் தொடுக்கப் பட்ட பொன்னரி மாலையினையும் பிற அணி கலங்களையும் யானையணிகளுடனே பெற்றனராய் நீங்கிப் பசியாராகலானே கொல்லோதான் வாரால் வலித்துப் பிணிக்கப்பட்ட பல கருவியையும் தொகுதிகொண்ட இனிய இயங்க ளொலிப்பத் தமது பாடலையும் மறந்து ஆடுதலும் மாட்டாராயினர்" என்னும் பொருள்பட,

மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்
இழையணி யானை இரப்போர்க் கீயும்
சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை
அடுபோ ராஅ ஆத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றது மன் எம் கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியங் கறங்க
ஆடலும் ஒல்லார்தம் பாடலுமறந்தே,

புறம்-153

என்று பாடி வருந்தினர்.

## கழைதின் யானையார் வருகை

கல்வியிற் சிறந்த கழைதின் யானையார் என்னும் புலவர் வல்வில் ஓரியினது கொடைத் திறத்தைக் கேள்வியுற்றுக் கொல்லி நாட்டை அடைந்து அரசனைக் கண்டு, "இழிந்தோன் கூற்றுல் ஈ எனச் சொல்லி இரத்தல் இழிந்தது. அவ்வீ என்றதனெதிர் ஈயேன் என்று சொல்லி மறுத்தல் அவ்விரத்தலினும் இழிந்தது. ஒருவன் இரப்பதன் முன்னே அவன் குறிப்பை முகத்தான் உணர்ந்து இதனைக் கொள்வாயாக என்று சொல்லித் தானிரந்து கொடுத்தல் ஒருவற்கு உயர்ந்தது. அதனை அவன் அவ்வாறு கொடுப்ப அதனெதிர் கொள்ளேன் என்று சொல்லி மறுத்தல் அக்கொடையினும் உயர்ந்தது. தெளிந்த

நீர்ப் பரப்பின் ஒலிக்கும் திரையையுடைய பெரிய கடல் நீரை உண்ணாராவர் தண்ணீரை விரும்பினோர். ஆவும் மாவும் சென்று நீரை உண்ணக் கலங்கிச் சேற்றோடு கூடிய சிறுமை யுடைத்தேயாயினும் உண்ணும் நீரையுடைய தாழ்ந்த விடத்துச் செல்லும் வழி பல வாகும்; தாம் புறப்பட்டுச்செல்லப்பட்ட வழியிடத்து அப்பொழுது செய்யும் புள் நிமித்தத்தையும் புறப் பட்ட முழுத்தத்தையும் பழித்தலல்லது தாம் பரிசில் பெறக் கருதிச் செல்லப்பட்டோரை அவர் ஈத்திலராயினும் பரிசிலர் பழியார். ஆதலால் நீ எனக்கு இன்னையாயினும், ஓரி, ஆகாயத்தின்கண் மின் முதலிய தொகுதியையுடைய மழைபோல யாவர்க்கும் எப் பொருளையும் வரையாது வழங்கும் வண்மை யுடை யோய் நின்னை வெறேன்; வாழ்வாயாக" என்னும் பொருள்பட,

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர் வேட் டோரே
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கி னதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை

உள்ளிச் சென்ரோர்ப் பழியலர் அதனால்
புலவேன் வாழிய ரோரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே.

புறம் - 204

என்னும் பாடலைப் பாடித் தம் வாழ்க்கையின் நிலைமையினை எடுத்துரைத்தார்.

ஓரி மன்னன் அப் புலவரைச் சில பகல் தம்மோடிருத்தி, நல்லுணவு அருத்திச் செந்தமிழ்ச் சுவைகளை அவர் பால் கேட்டறிய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த தம் கருத்தினை மாற்றி, அவருக்கு அப்பொழுதே பல பரிசில்கள் கொடுத்தனுப்பினான்.

வள்ளல் ஓரி பல பகைவர்களை வென்றும், தமிழ் மொழியை வளர்த்தும், புலவர்களுக்குப் பரிசில் வழங்கியும் அறநெறியில் நாடு காத்தும் பல நாள் வாழ்ந்து இறைவன் திருவடியை யடைந்தான். இவன் வாழ்க்கை அதியமான் வரலாற்றிலும் கூறப்படும்.

# 2. வள்ளல் காரி

## ஆட்சி

பக்கத்திலுள்ள குருந்த மரத்தில் படர்ந்து மாலை நேரத்தில் மலர்களை மலர்த்தி மணத்தைப் பரப்புகின்ற முல்லைச் செடிகள் மிகுந்து வளரும் நாடு மலையமானாடாகும். அந் நாட்டில் பெண்ணையாறு பல காலாகச் சென்று வயலிலுள்ள பயிர்களை வளர்க்கும். காலில் படுத்திருக்கும் எருமை தன் கன்று தன் பக்கம் வருவதைக் கண்டு அதனுக்குப் பாலூட்டும். நண்டுகள் வயலிலுள்ள வளைகளில் சென்று கண் வளரும். தவளைகள் அந் நண்டுகளுக்குத் தாலாட்டுக் கூறும். தாமரைகள் தங்கள் கணவனாகிய ஞாயிற்றின் புறப்பாட்டை முதன் முதல் காலையில் கண்டு வந்து தெரிவிக்கும் வண்டுகளுக்கு மலர்களாகிய கிண்ணத்திலுள்ள தேனை உண்பிக்கும்.

அந்நாட்டில் பல ஊர்கள் உண்டு. அவ்வூரிலுள்ள மக்கள் தாங்கள் இளமையிற் பழகிய தொழில்களைச் செய்து, அவற்றிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு நல்வாழ்க்கை வாழ்ந்து உறவினருடனுண்டு உறைந்தனர். அவ்வூர்களுள் பாவலர்களால் புகழப்படுவதும் காவலனுறைவதுமாகிய கோவலூர் தலைநகராகும். மாரியைப்போல் வரையாது வழங்குபவனும் பலநாற் கேள்வியுடையவனும் போரினில் புலி போன்று போரிடுபவனுமாகிய காரி அத் தலைநகரி.

விருந்து தன்னுட்டைக் காவல் செய்துகொண்டு வந்தான். அவன் மனைவி கற்பிலும் குணத்திலும் சிறந்தவள். அவளும் அவனும் மலரும் மணமும் போல மனமொன்றுபட்டு இல்லற வாழ்க்கையை இனிது நடத்தி வந்தனர்.

இங்ஙனம் வாழும் நாளில் கபலரென்னும் புலவர் கோவலூரிலுள்ள திருமுடி காரியைக் கண்டு பரிசில்பெற எண்ணித் தம்மூராகிய வாதவூரிலிருந்து புறப்பட்டார். புறப்பட்டு மாமரம் நிறைந்த வழியே நடந்து சென்றுர். மாமர நிழலில் மங்கை யொருத்தி நல்லிசையோடு கூடிய பாட்டுப்பாடி நெல் குற்றிக் கொண்டிருந்தாள். கிளி அவளுடைய இசைப்பாட்டைக் கேட்டு அவ்விடத்தை விட்டகன்று வேருரு மரத்தையடைந்து அவளைப் போன்று பாடிப் பழகிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டே நடந்து சென்றுர். ஒரு புறத்தில் எருமைகள் வயலினுள் செல்லத் தொடங்கின. தவளைகள் அவற்றைத் தடுத்தன. எருமைகள் நிற்காமல் அவ்வயல்களில் நுழைந்து காவிமலர்களையும் கரும்புகளையும் தின்று அவ்விடத்தை விட்டகன்று அருகிலிருந்த பொய்கையி லிறங்கி மூழ்கின. மற்ருெரு புறத்தில் முற்றக்கற்ற மூதறிவாளரைப் போன்று வெண்ணெல் விளைந்து தலைசாய்ந்து நின்றன. இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டே கோவலூரை நெருங்கினுர். பரிகளையும் கரிகளையும் பலர் பழக்கும் ஒலிகள் கேட்டன. இளம் பெண்களுக்குப் பலர் இசை பயிற்றும் ஒலி

கள் கேட்டன. கபிலர் அவற்றைக் கேட்டுக் கொண்டே தெருவழியாக நடந்து அரண்மனையை அடைந்தார்.

அரசன் அரசிருக்கையிலிருந்து கொண்டு தன்னிடமிருக்கும் பாணர்களுக்கும், தமிழ் புலவர்களுக்கும், இசை வல்லார்களுக்கும் பொன்னும் தேரும் கொடுத்துக்கொண்டிருந்தான். கபிலர் காவலனை அடைந்தார். "ஒரு திசைக்கண் வள்ளியோனாகிய ஒருவனை நினைந்து நான்கு திசையினுமுள்ள பரிசின் மாக்கள் பலரும் வருவர்; அவர் வரிசையறிதல் அரிது. கொடுத்தல் மிகவும் எளிது. பெரிய வண்மையையுடைய தலைவ! நீ அவ்வரிசை யறிதலை நன்றாக அறிந்தாயாயின், அறிவுடையோரிடத்து வரிசை கருதாது ஒரு தரமாகப் பார்த்தலைத் தவிர்வாயாக" என்னும் பொருள்பட,

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் டோன்றல்
அது நன் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர்மாட்டே

புறம் - 121

என்னும் பாடலைப் பாடினார்.

கபிலரது பாடலைக் கேட்ட காவலன் அவரைத் தன்னோடு சிலபகல் தங்கும்படிகேட்டுக் கொண்டார். அவர் அரசன் விருப்பப்படி அவனோடு சிலபகல் தங்கி

யிருந்தார். அவர் செந்தமிழ் மொழியின் சிறப்பை அரசனுக்கு எடுத்துரைக்க எண்ணி, "அரசே! தமிழ் மொழி கூறுவதற்கு இன்னோசையுடைய மொழியாகும்; வடமொழி முதலியவற்றில் காணப்படும் வல்லோசைகள் தமிழ் மொழியில் இல்லை. தமிழ்மொழி இலக்கண வரம்புடையது. கண்களாற் காணும் காட்சிகளைப் பற்றியும் கருத்தினால் எண்ணும் எண்ணங்களைப் பற்றியுமே எடுத்துரைக்கும். நிகழாத பொய்நிகழ்ச்சிகளை எடுத்துரைத்து மக்களை மயக்குவதில்லை. இயற்கையாக ஒலி உண்டாகும் முறையில் உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் எடுத்துரைக்கிறது. ஒன்றிரண்டெழுத்துக்களால் சொற்களை உண்டாக்குகிறது. உலகத்தில் வாழ்வதற்கேற்ற முறைகளையும் அறங்களையும் தொழில்களையும் விரித்துக் கூறுகிறது. பிறமொழிகளிற் கூறப்படாத அகப்பொருள் புறப்பொருள் ஆகிய இரண்டினையும் எடுத்தியம்புகிறது. போர் முறையைக்கூறும் புறப்பொரு ளிலக்கணத்தையும் காதலர் வாழ்க்கையைக்கூறும் அகப்பொரு ளிலக்கணத்தையும் கற்பதனால் தமிழர்கள் புகழோடு வாழ்கிறார்கள். அவற்றைக் கற்காதொழியின் அறியாமை ஏற்பட்டுப் பிறர்க்கு அடிமையாவர்" என்று எடுத்துரைத்தார். காவலன் அவருரையை அன்பொடு கேட்டு மகிழ்ந்து அவருக்குப் பொன்னுடையும் பூண்களும் வேண்டுவன அணிவித்து யானைமருப்பா லியன்ற தேரிலேற்றி அனுப்பினான். கபிலர் மன்னன் பிரிவுக்கு வருந்தினான். நல்ல நாளன்றாகப் போகிப் புல், நிமித்தம்

இடையே நின்று தடுப்பச் செவ்வியன்ருகச் சென்று கூடிக் கூறுபாடன்ருக முனியும் வார்த்தைகளைச் சொல்லினும் வறிதாக மீள்வாரல்லர். ஒழுங்குபட ஓசை நிறைந்து ஒலிக்கும்அருவியையுடைய பெருமை பொருந்திய மலையையுடையோனைப் பாடியவர்கள் என்னும் பொருள்பட ஒரு பாட்டுப் பாடிப் பிரிந்து சென்ருர்.

## நப்பசலையார் வருகை

சின்ஞட்களுக்குப் பின் நப்பசலையார் என்னும் நல்லிசைப் புலவர் மெல்லியலார் காரி மன்னவனுடைய வண்மையைக் கேள்வியுற்று அவனிடம் பரிசில் பெறக்கருதி வந்தடைந்தார். "பறையொலி போலும் ஒலி பொருந்திய அருவியையுடைய முள்ளூர்க்கு வேந்தே! அழித்தற்கரிய தன்மையையுடைய நின் சுற்றத்துடனே பெருக, நிலத்தின்மேல் மிக்க மாந்தரெல்லாரினும் அறிவின்கண் மாசற்ற அந்தணனாகிய கபிலன் இரந்து செல்லும் புலவர்க்கு இனிப் புகழ்தற்கு இடனில்லையாகப் பாடினான். அதனைக்கொண்டு சினமிக்க சேனையையுடைய சேரன் மேல்கடலின்கண் பொன்னைத்தரும் நாவாய் செலுத்திய அவ்விடத்து வேறு சில மரக்கலம் போகமாட்டாத அத்தன்மையுடையேமாயும் எமது மிடி துரக்க நின்புகழ் கொடுவர வந்து நினது வண்மையிலே சில சொல்லத் தொடுத்தனம் யாங்கள். முட்போலும் பல்லினையுடைய பாம்பை எறியும் இடியேறு போல முரசு கிளர்ந்தொலிப்பத் தலைமையை

யுடைய யானையுடனே அரசு போர்க்களத்தின் கட்படப் பொறுத்தற்கரிய பூசலைச் சிதறவெட்டிப் பெரிதும் பொருந்தாத பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றுப் பக்கத்தை யுடைய நாட்டை யுடையோய் என்னும் பொருள்பட ஒரு பாட்டுப் பாடித் தாம் வந்த கருத்தினைத் தெரிவித்தனர். மன்னன் அவருக்கு வேண்டிய பரிசிலைக் கொடுத்தனுப்பினன். நப்பசலையாரும் தம்மூருக்கு மீண்டனர்.

## போர்

காரி மன்னன் தன் கற்பிற் சிறந்த காதலியோடு இல்லறம் நடத்திவந்தான். நாட்டையும் நன்கு காத்துவந்தான். காத்து வரும் காலத்தில் வடநாட்டு ஆரிய மன்னர் சிலர் காரி மன்னனை வெல்லக்கருதித் தங்கள் படைகளோடு முள்ளூரை அடைந்தனர். முள்ளூர் அவர்களால் கொள்ளையிடப்பட்டது. அவ்வூரினர் விரைந்தோடிவந்து கோவலூரை யடைந்து ஆரியர் வருகையையும் அவர்கள் செய்தசெயலையும் அரசனிடம் கூறினர். அரசன் வெகுண்டு தோள்தட்டிச் சிரித்து நின்றான்.

சேர ரல்லீர் செம்பிய ரல்லீர் அவர்தாமும்
வீரங் காண்பர் எம்படை வேண்டி விரைவாரே
கூரம் பேவிக் கூற்றுயிர் கொள்ளக் குறித்தீரே
வாரம் பாடின் ஊர்பல கொண்டு மகிழ்வீரே.

ஆற்றல் காட்ட ஆரிய ரேஇங் கடைந்தீரோ
மாற்றார் வந்தால் ஓடுவரோ தென் வளநாட்டார்
தோற்றால் வாழேம் இன்றெனின் நும்மைத் துணித்தேம்.

என்று கூற்றம் போலக் கூறி எழுந்தான். பறைகளும் சங்குகளும் ஆரவாரித்தன. வீரர்கள் வெகுண்டு வேந்தனை அடைந்தனர். காரி மன்னன் தன் நால் வகைப் படைகளோடும் புறப்பட்டான். தூளிகள் விண்ணுலகம் படர்ந்து காரிமன்னனுக்குப் பகைவர் களாகிய ஆரியர்களுடைய உயிர்கள் நாளை வந்து சேரும் என்று தெரிவித்தன. படைகள் கழனிகளைத் தாண்டியும் சோலைகளைத் தாண்டியும் முள்ளூரை அடைந்தன. அங்கிருந்த ஆரியர் படைகளைக் கண்டு ஆரவாரித்து அவர்களோடு போர் புரிந்தன.

ஒருவர் முன் ஒருவர் ஓடினர். சினந்து ஒருவரோ டொருவர் உரையாடினர். கருவிழியினின்றும் நெருப் புப் பொரி தோன்ற விழித்து நோக்கினர். வாள்களை வீசினார்கள். வேல்களை எறிந்தார்கள். அவை பகைவர் தோள்களிலும் தாள்களிலும் பாய்ந்து அவர்களை நிலத்தில் வீழ்த்தின. சிலர் முன்னேறிச் சென்று பகைவர் தலைகளைச் சீவினர். சிலர் வில்லை வளைத்துக் கணைகளைத் தொடுத்தனர். சிலர் வெகுண்டு சென்று கரிகளையும் பரிகளையும் ஆட்களையும் வெட்டினர். யானைகள் தங்களுக்கு முன் வரும் வீரர்களும் பரிகளும் மாளும்படி கால்களால் மிதிக்கும். காரிமன்னன் தன் காரிக்குதிரையிலேறி அதனைச் செலுத்தினான். அது படைக் கடலினூடே பாய்ந்து சென்றது. சூறாவளிக் காற்றைப் போல நாலா பக்கமும் சுற்றித் திரிந்தது. அது காலெடுப்பதையும் கீழே வைப்பதையும் யாரும் யறிந்திலர். அக்குதிரையைச் செலுத்தும் காரி மன் னன் வேல்களைப் பகைவர்மேல் வெகுண்டோச்

சினன். அவ்வேல்கள் ஆரியப் படைகள் மேல் பாய்ந்து ஊடுருவி அப்பால் சென்றன. ஆரிய மன்னர் களும் அவர்கள் படைகளும் ஆடிக்காற்றில் அகப் பட்ட பதர்கள்போல் அகங்குலைந் தோடிச் சென்ற னர். மானத்தைவிட்டு, வாள் முதலிய படைகளைக் கீழே எறிந்து கற்களும் முட்களும் கால்களில் தைக்கக் கால் வாங்கி நடந்தனர்.

வீரர்கள் ஆரவாரித்து அரசனை அணுகினர். அவனுடைய அருந் திறலைப் புகழ்ந்தனர். முள்ளூரி லுள்ள மக்கள் மகிழ்ந்து மன்னனை வணங்கி வாழ்த் தினர். மன்னர் வாகை சூடித் தன் படைகளோடு கோவலூரை அடைந்தான்.

தமிழ் நாட்டு மன்னரும் வீரர்களும் காரிமன் னன் வலிமை மிகுந்தவன் என்று வாயாரப் புகழவும், செந்தமிழ்ப் புலவர்கள் அவன் சீர்களை எடுத்துப் பாடவும் தன் நாட்டைக் காவல் செய்துவந்தான். பின்பு தன்னை வென்ற அதியமானையும் வென்று தன் நாட்டைப் பெற்று, நன்கு ஆட்சி செய்து இறுதியில் விண்ணுலகடைந்தான். இவனுடைய வாழ்க்கை அதியமான் நெடுமான் அஞ்சி வரலாற்றிலும் விரித் துக் கூறப்படும். ஆண்டுங் காண்க.

# வள்ளல் அதியமான்

## ஆட்சி

கன்னல் வளரும் வயலெங்கும்
கதிர்முத் தொளிரும் அயலெங்கும்
தென்னை ஈனும் விரிபாளை
தேங்காய் வீழ்த்தும் மடுவாளை
நன்னீ ரோடும் பன்னண்டு
நாளும் பாடும் பொன்வண்டு
பொன்னி பாயுந் தென்னாடு
பொருவில் கொங்கு நன்னாடே.

கொங்கு நாட்டின் ஒரு பகுதிக்குத் தகடூர் தலை நகராக விளங்கியது. தகடூரைச் சுற்றிப் பெரிய மதிலிருந்தது. அதனை அடுத்து நிமிர்ந்து உயர்ந்த நெல்லும் அதனை அடுத்து வாழையும் அதனை அடுத்தடுத்துப் பலா, கமுகு தென்னை மரங்களும் சூழ்ந்திருந்தன அந் நகரத்திலிருந்த அதியர் குலத்தில் பூவின் இயைந்த மணம் போலவும் பொன்னின் இயைந்தவொளி போலவும் அதியமான் நெடுமான் அஞ்சி தோன்றினான்.

அதியமான் இளமைப் பருவத்திலே பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்றான். தமிழ்த் தேனைப் பருகினான். பண்டிதரிடத்தில் இலக்கண இலக்கியங்களையும் அரசியல் நூல்களையும் அறிவியில் நூல்களையும் கற்றுணர்ந்தான். வில்வித்தையிலும், வாள் வித்தையிலும், கரியேற்றத்திலும், பரியேற்றத்திலும் வல்லவ

றுன். வடிவார் குழலி என்ற மங்கையை மணந்து உடலும் உயிரும் போல ஒன்றி இல்லறம் நடத்தினுன். அவன் தன் தந்தை விண்ணுல கடைந்தபின் தான் தன்னுடைய நாட்டை அரசாண்டு வந்தான். அதியமான் குடையும், அவன் தன்னிடத்தே முறை வேண்டினர்க்கு நடுநிலை யறிந்து கூறும் விடையும், அவன் நாட்டு மக்களை மகிழ்வித்தன. அவனுடைய கொடை புலவர்க ளுள்ளத்தைப் பூரிக்கச் செய்தது.

## ஔவையார் வருகை

ஔவையார் அதியமான் தமிழறிவையும் கொடையையும் புலவர்கள் புகழக் கேட்டார். அவனிடம் பரிசில் பெற எண்ணினுர். பூங்கொடி கால் கொண்டு நடந்து சென்ருற் போல வழியே நடந்து சென்ருர். பொன்னளிக்கும் புரவலனை நாடிச் செல்லும் தன்னைப் போலவே பழமுடைய மரங்களை நாடிப் பறவைகள் வானத்தில் பறந்து செல்வதைக் கண்டு மனமகிழ்ந்து நடந்தார். நடந்து சென்ற வழியில், வண்டுகள் பாடிச் சென்றன. தாழைகள் மடல் வாய்திறந்து சோறளித்து அவற்றிற்கு விருந்து செய்தன. கொன்றை மலர்கள் வண்டுகாள் கொண்டு செல்மின் என்று பொன் மலர் நல்கின. அக்காட்சியைக் கண்டு களித்து ஔவையார் நடந்து சென்ருர். காந்தட் செடிகள் மலர்களாகிய கைகளால் அவர் செல்லும் வழிகளைத் தெரிவித்தன. வயல்களில் வளர்ந்து நின்ற நெற் பயிர்கள் அவரைத் தலைகளால் வணங்கி நின்றன. மாடத்திலிருந்த கொடிகள் வருக

என்று அழைத்தன. தகடூரைத் தமிழ் மூதாட்டியார் அடைந்தார்.

காலை நேரத்தில் முறைவேண்டுவார்க்கும் குறை வேண்டுவார்க்கும் காட்சிக் கெளியனாய் அதியமான் நாளோலக்கத்தி லமர்ந்திருந்தான். ஔவையார் அகழ் கடந்து வாயில் கடந்து மண்டபத்தை அடைந்தார். வாழ்க மன்னவ! என்று வாழ்த்தினார். வணங்கினார். மன்னன் இவருக்கு இருக்கை கொடுத்தான். தாம் கொண்டு வந்த யாழை எடுத்து இசையூட்டினார். காந்தள் மலரனைய கைவிரல்களால் நரம்புகளைத் தடவி வாசித்தார். வாயினாலும் பாடினார். பாடிய பண்ணும் பாடலும் அதியமானையும் அவணிருந்தோரையும் மகிழ்வித்தன. மன்னன் நன்று நன்று என்று நவின்று அவர் பாடலையும் அவரையும் புகழ்ந்தான். ஔவையாரை அழைத்துச் சென்று தன் வாழ்க்கைத் துணைவிக்குக் காட்டி அவர் புலமையைத் தெரிவித்தான். அமிழ்தமனைய அறுசுவை உணவு அவருக் களித்தான்.

## ஔவையார் சினம்

ஒரு நாளாயிற்று இருநாளாயின அதியமான் பரிசில் கொடுத்து ஔவையாரை அனுப்பவில்லை. அதியமானுடைய கல்வியின் திறமையும், சொல்லின் திறமையும், உபசரிக்கும் திறமையும் ஔவையாருக்கு இன்பத்தைக் கொடுத்தன. பரிசிலளித்து அனுப்பாதது அவர் மனத்தை வருத்தியது. பரிசல் பெருமலை வீட்டுக்குச் செல்லத் துணிந்தார். அரசனிடம்

சென்று தெரிவித்தாரிலர். "வாயில் காப்போய்! வாயில் காப்போய்! விரைந்த குதிரையுடைய குரிசிலாகிய நெடுமான் அஞ்சி தான் தன் தரமறியான் கொல்லோ? அது கிடக்க. என் தரம் அறியான் கொல்லோ? அறிவும் புகழும் உடையோர் இறந்தாராக, வறிய இடத்தையுடைய உலகமும் அன்று. ஆதலாற் காவினேம் யாழை. கட்டினேம் பைகளை. மரத்தைத் துணிக்கும் தச்சன் பயந்த மழுவையுடைய கைத் தொழில் வல்ல மகார் காட்டிடத்துச் சென்றால் அக் காட்டகம் பயன்படுமாறு அவர்க்கு எத் தன்மைத்தோ? எமக்கும் யாதொரு திசைக்கட் போகினும் அத்திசைக்கண் சோறு அத்தன்மைத்து." என்னும் பொருள்பட என்று வெகுண்டு பாடி விரைந்து சென்றார்.

வாயி லோயே வாயி லோயே
* * *
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறி யலன்கொல்? என்னறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே. அதனால்
காவினம் கலனே. சுருக்கினெம் கலப்பை.
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே. புறம்-206

வாயிற் காவலன் ஔவையாரின் சினத்தை அறிந்தான். அரசனிடம் விரைந்து சென்று ஔவையாரின் செல்கையைக் கூறினான். மன்னன் கலக்க

மடைந்தான். நடந்து சென்று ஔவையார் செல்கையைத் தடுத்து அழைத்துக்கொண்டு வந்தான். இருக்கையில் இருத்திப் பொன்னும் மணியும் பூந்துகிலும் கொடுத்தனுப்பினன்.

## பெருஞ் சித்திரனர் வருகை

பெருஞ் சித்திரனர் என்னும் புலவர் மிகுந்த வறுமையுடையவர்; பல புதல்வர்களையுடையவர். மன்னர்களைப் பாடிப் பரிசில் பெற்று வறுமையைப் போக்கியும் மக்களை வளர்த்தும் வந்தார். அவர் அதியமானிடம் பரிசில் பெற எண்ணிக் காடும் மலையுங் கடந்து வழியிலுள்ள பலவூர்களையும் கடந்து தகடூரை யடைந்தார். அரண்மனையை அடைந்தார். அரசன் அமைச்சரோடு தன் பகையை அடக்குவதற்குச் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். பெருஞ் சித்திரனர் வருகையை அறிந்த அஞ்சி ஏவலனை அழைத்து அவனிடம் பரிசில் கொடுத்து அனுப்பினன். அரசன் கொடுத்த பரிசிலை ஏவலன் சித்திரனரிடம் கொண்டு வந்து கொடுத்தான். சித்திரனர் திகைத்தார். தம்மைக் கண்டு தம் தகுதி யறிந்து பரிசில் கொடுக்காததற்கு வருந்தினர். அவன் கொடுத்த பரிசிலைப் பெறுவதற்கு மறுத்தார். அதியமான் அவர் மன நிலையை அறிந்து தானே வந்து உபசரித்துப் பரிசில் கொடுத்தான். அதனைப் பெற்றுப் பெருஞ் சித்திரனர் தம் ஊர்போய்ச் சேர்ந்தார்.

அறிவிற் சிறந்த ஔவையார் நாஞ்சில் என்னும் ஊருக்குத் தலைவனகிய வள்ளுவனிடம் சென்றார்

அவன் அவரை மதித்துப் பெரிய யானையைப் பரிசி லளித்தான். அதனைப் பெற்றுக் கொண்டு அவனைப் புகழ்ந்து பாடி அவனிடம் விடை பெற்று அந் நாஞ் சிலை விட்டகன்று தம் ஊருக்குப்போய்ச் சேர்ந்தார். ஔவையார் அடிக்கடி அதியமானிடம் வந்து பரிசில் பெற்றுக்கொண்டு செல்வதும் வருவதுமாக வாழ்ந்து வந்தார்.

## எழுவரை வெல்லல்

எழினி என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் புலவர்களை ஆதரிப்பவன். பெரும் படையை யுடையவன். அதியமானின் உறவினன். அவ்வெழினி அதியமானிடம் பகைமையுடையவன். அதியமானை வெல்லவேண்டுமென்று நீண்ட நாளாக நினைத்துக் கொண்டிருந்தான். தன் படை வலிமையால் அவனை வெல்ல முடியாது என்று எண்ணினன். தனக்குத் துணையாக ஆறு சிற்றரசர்களைச் சேர்த்து அவர் களுடைய படைகளையும் தன் படையோடு சேர்த்து முன்னால் அனுப்பினன். எழினியும் அவனோடு சேர்ந்த சிற்றரசர்களும் பரிமேலேறித் தகடூர் நோக்கிச் சென்றார்கள். கொடிகள் சென்றன. படைகளும் நடந்தன. மன்னர்களும் படைகளும் தகடூரை அடைந்தனர்.

அதியமான் பகைவர் வருகையை அறிந்தான். தன் படைகளைத் திரட்டி அவர்களை எதிர்த்தான். இருதிறத்தினர்களும் போர் புரிந்தனர்.

குத்தினர். வெட்டினர். கொத்தினர். முட்டினர்.
கத்தி சுழற்றினர். கைப்படை தொட்டனர்.
ஒத்த உரத்தினர் பற்றிவு ருத்தனர்.
செத்தனர் பற்பலர் சீர்கொ ளூரத்தினர்.

கரிகளும் கரிகளும் ஒன்றோடொன்று பொருதன. பரிகளும் பரிகளும் ஒன்றோடொன்று பகைத்துச் சண்டை செய்தன. தேர்களும் தேர்களும் ஒன்றோடொன்று சினந்து எதிர்ந்தன. வீரர்களும் வீரர்களும் ஒருவரோடொருவர் வெகுண்டு மலைந்தனர். செருமேற் சென்ற மன்னர் எழுவரும் வாளாலும் வேலாலும் கரிகளையும் பரிகளையும் காலாட் படைகளையும் கொன்று குவித்தனர். அதியமான் நெடுமான் அஞ்சி செருக்களம் புகுந்தான். வில்லை எடுத்தான் அம்பினைத் தொடுத்தான். அவைகள் எதிர்ந்த பகைவர்மேல் பாய்ந்தன. அம்புகள் பாயப்பட்ட வீரர்கள் ஆரைகள் இணைக்கப்பட்ட குறடுபோலக் காணப்பட்டனர். வாளை வீரர்கள்மேல் வீசினான். பனைமரங்களிலிருந்து காய்கள் வீழ்வனபோல மறவர் தலைகள் உடம்பிலிருந்து மண்ணில் வீழ்ந்தன. வேல்களை எறிந்தான். அவை யானைகளின்மேல் பாய்ந்து ஊடுருவிச்செல்ல, கருமுகில் மண்ணில் வீழ்ந்து புரள்வனபோல வீழ்ந்து புரண்டன. பகைவர்களும் அவர்கள் படைகளும் எதிர்ப்பதற்கு அஞ்சின. எழினி அதியமான் எறிந்த வேலொன்றினுக்கு இரையாயினான், மன்னர் அறுவரும் எழினி மண்ணில் வீழ்ந்தவுடன் புறமுதுகிட்டுப் போர்க்களத்தை விட்டகன்றனர். அவர்கள் படைகளும் அவர்களைத் தொடர்ந்து ஓடின.

ஔவையார் போர் நிகழ்ச்சியைப் பார்க்கப் போர்க்களம் போயிருந்தார். அதியமான் ஆற்றலை அறிந்தார். "திண்ணிய பிணிப்பையுடைய முரசம் இழு மென்னும் ஓசையை யுடைத்தாய் ஒலிப்ப, மேற் சென்று போரை வெல்லுதல் இனி எங்கே யுள்ளது? நின்னொடு எதிர்ந்து வந்தோர் நினது தூசிப்படையைப் பொறுத்தற்கும் மாட்டாராய்ச் சிதறிக் கெட்டுப் போகலிலே மருவிய பெருமையில்லாத அரசரது நோயின் பக்கத்தான் இறந்த உடம்பை அணைத்துத் தமது ஆசைத் தன்மையை மறந்து அவர் வாளாற் படாத குற்றம் அவரிடத்தினின்றும் நீக்கவேண்டி அறத்தை விரும்பிய கோட்பாட்டையுடைய நான்கு வேதத்தையு முடைய அந்தணர் நல்ல கூற்றிலே பொருந்திய பசிய தருப்பைப் புல்லைப் பரப்பினராய்க் கிடத்தித் தமது ஆண்மையே பற்றுக்கோடாக நல்ல பூசலிலே பட்ட மேம்பட்ட வீரக் கழலினை யுடைய வேந்தர் செல்லும் உலகத்திலே செல்க என்று வாளோக்கி யடக்கும் இழிதகவும் பிழைத்தார்கள். வரியையுடைய தேனீ ஒலிக்கும் வாயின்கண் வந்து புகுகின்ற மதத்தினையுடைய தலைமை பொருந்திய யானை போர்க் களத்தின் கண்ணே படப் பொறுத்தற் கரிய பூசற்கண்ணே சிதற வெட்டி, பெரிய தகைமை யுடையாய் நீ சீரிய புண்பட்டபடியால்," என்னும் பொருள்பட,

திண் பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது? வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு

ஓடல் மரீஇய பீடில் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத் தொழிய
வருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே. புறம்-93

என்ற பாட்டைப்பாடி அதியமானைப் புகழ்ந்தார். அதியமான் முரசங்கள் ஆர்க்கவும், பல்லியங்கள் முழங் கவும், சாமரைகள் இரட்டவும், படைகள் பின்தொடா ரவும், பரிமிசை இவர்ந்து தன் கோயிலை அடைந் தான்.

## மகப் பேறு

அதியமான் போர்க்களஞ் சென்றிருந்த பொழுது அவன் மனைவி வடிவார் குழலிக்கு ஓராண் மகவு பிறந்தது. ஆண்மகவு பிறந்தசெய்தி அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரசன் புண்பட்ட போர்க் கோலத்துடனே அம்மகவைப் பார்க்கச் சென்றான். அதுவே முதல் மகவாதலின் அதனைப்பார்த்து அகம் மிக மகிழ்ந்தான். மகவைப் பார்த்து அகம் மிகவும் மகிழ்ந்த பின்பும் போர்க்களத்தில் மாற்றுரை வெகுண்டு பார்த்ததனால் ஏற்பட்ட அவனுடைய கண்

களின் செந்நிறம் மாறுமல விருந்தது. அருகிலிருந்த ஔவையார் "கையின் கண்ணது வேலே; காலின் கண்ணது அணிந்த வீரக்கழல்கள்; உடம்பின் கண்ணது வேர்வை; மிடற்றின் கண்ணது ஈரம்புலராத பசிய புண்; பகைவர் தொலைதற்கு ஏதுவாகிய வளரும் இளைய பனையினது உச்சியின்கண்ணே வாங்கிக் கொள்ளப்பட்ட ஊசித் தன்மையைப் பொருந்திய வெளிய தோட்டையும், வெட்சியினது பெரியமலரையும், வேங்கைப்பூவுடனே விரவிச் சுருண்ட கரிய மயிர் பொலிவு பெறச் சூடிப் புலியோடு பொருத வலிய யானையை யொப்ப இன்னமும் நீங்காது சினம். ஆதலால், ஐயோ பிழைத்தாரல்லர் இவனைச் சினப்பித்தவர்கள்; பகைவரை வெகுண்டு பார்த்தகண் தன்னுடைய புதல்வனைப் பார்த்தும் சிவப்பு நீங்காவாயின" என்னும் பொருள்பட ஒரு பாட்டுப் பாடினார். அதியமான் அவர் பாடலைக் கேட்டு மகிழ்ந்தான். நாளோலக்கத்தை அடைந்தான். போரிற் புண்பட்டவர்களுக்கும் பகைவரை வென்றவர்களுக்கும் புலவர் களுக்கும் பொன்னும் பிறவும் கொடுத்தான்.

அதியமான் தன் நாட்டை நன்கு காவல் செய்து வந்தான். தன் நாட்டு மக்களுக்குப் படைப் பயிற்சியளித்து வந்தான். மன்னன் தன் மனைவியோடு ஒன்றுபட்டு நல்லறஞ் செய்தும் மகவொடு மழலை கேட்டு மகிழ்ந்தும், ஔவையாரோடு அருந்தமிழ் ஆராய்ந்தும், இன்னிசை கேட்டும் இன்பந் துய்த்துப் பன்னாள் வாழ்ந்தான்.

## தூது

தொண்டைமான் இளந்திரையன் என்பான் அதியமானிடம் பகைமை கொள்ளத் தொடங்கினான். தொண்டைமான் புலவர்களைப் பேணும் புகழுடையான் என்பதையும், செந்தமிழ் அறிந்த பைந்தமிழ்க்குரிசில் என்பதையும் அறிந்து அதியமான் ஒளவையாரை அனுப்பி அவன் பகைமையை அடக்க எண்ணினான். ஒளவையாரிடத்திலும் தன் கருத்தினை உரைத்தான். இளந்திரையன் இருந்து அரசாளும் காஞ்சிமா நகருக்கு அவரை ஏகுவித்தான்.

ஒளவையார் அதியமானிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனையை அகன்றார். தகடூரையும் அதனைச் சார்ந்த வயல்களையும் கடந்து ஒரு பூம் பொழிலை அடைந்தார். குயிலும் பிறவும் ஒளவையார் வருகையை அறிந்தன. தாங்கள் பழகிய இசையையும் நடிப்பையும் காட்டி அவரிடம் நல்லுரை பெற எண்ணின. குயில் இன்னிசை பாடியது. வரி வண்டு குழலூதியது. மயில் ஆடிற்று. ஒளவையார் அக்காட்சியைக் கண்டார். நன்று நன்று என்று நவின்று அப்பால் நடந்தார். ஒரு பக்கம் வாழை மரமும், பலாமரமும், மாமரமும் தமிழ் மொழியின் சுவையைக் கேள்விப்பட்டன. அவை தமிழின் சுவையைப் போன்ற இன்சுவையைத் தாம்பெற வேண்டும் என்று எண்ணின. உணவு உண்ணும் வேராகிய வாயையுடைய தலைப்பாகத்தைத் தரையில் வைத்துத் தலைகீழாகத் தவம்புரிந்தன. தமிழின்

இன்சுவையை உண்டு உண்டு இன்புற்ற தையலாரா கிய ஔவையார் தங்கள் அருகே வருவதைத் தெரிந் தன. தங்கள் பழங்கள் தமிழ்ச் சுவைபோன்று இனிமையுள்ளனவா? என்று அவற்றை உண்டு இனி மையின் தன்மையை எடுத்துரைக்க என்று அவ ருக்கு முன்பு தங்கள் கனிகளை உதிர்த்தன. அவற்றை உண்டு ஔவையார் அப்பால் நடந்தார். பச்சைப் பசும் பட்டினை விரித்தாற் போன்ற பசும்புல் வெளி இருந்தது. அப்புல் வெளியினூடே நடந்து சென்றார். மாடத்தின் உச்சிகளில் கட்டப்பட்டிருந்த கொடிகள் தமிழ் மூதாட்டியாரை வருக வருக என்று மகிழ்ந்து அழைப்பன போல ஆடின. காஞ்சிமா நகரை ஔவையார் கண்ணுற்றார். நகரினுள் நுழைந்து நடந்து சென்றார்.

காஞ்சிமா நகரம் மாடங்களால் மிகுந்த வனப் புடையது. மாடங்களின்மேல் மங்கையர் மூன்று பந்துகளினாலும் அவற்றிற்கு மேற்பட்டதொகையை யுடைய பந்துகளாலும் எறிந்தும் பிடித்தும் விளை யாடிக் கொண்டிருந்தனர். மாடத்தினுள்ளே சான் றோர் பலர் தமிழ்ச் செய்யுளிலுள்ள தீஞ்சுவைகளைத் தேனையுண்ணும் வண்டுகள் போல் தேர்ந்து கொண் டிருந்தனர். அவர்களைப் பார்த்துக்கொண்டே தெரு வழியாக நடந்து சென்றார். சிறுவர்கள் சிறு தேரு ருட்டி விளையாடினர். மகளிர் பலர் மெல்லிய நூல் களைப் பஞ்சினால் நூற்றுக் கொண்டிருந்தனர். ஆட வூர்கள் பழங்கள், பூக்கள், தளிர்கள் முதலிய உருவங் களை விளிம்பில் அமைத்துப் பாலாவி யனைய மெல்லிய

ஆடைகளை நெய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தொழிலைக் கண்டு கொண்டே காவலன் வாழும் குன்றமனைய கோவிலை அடைந்தார்.

அரசனுக்கு ஔவையார் தம் வருகையைத் தெரிவித்துச் சபையை அடைந்தார். இளந்திரையன் வருக என்று வரவழைத்துத் தமிழ் மூதாட்டிக்கு இருக்கை கொடுத்தான். அவர் நலத்தை வினவி அறிந்தான். வந்த வழியைப் பற்றியும் ஆங்காங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கேட்டறிந்தான். உண்ணற்கினிய உணவூட்டி உபசரித்தான்.

இளந்திரையன் ஔவையாரைப்பற்றி நன்கறிவான். அரசனால் ஆதரிக்கப்படுதலை அறிவான். அவைப் புலவராய் இருத்தலை அறிவான். அதியமான் அவருக்குப் பரிசில் கொடுத்துப் பாராட்டுதலை அறிவான். அவருக்குத் தன் படைப் பெருக்கத்தைக் காண்பித்தால் அவர் தன் வலியைப்பற்றி அவனிடம் தெரிவிப்பார் என்று எண்ணினான். தெரிவிப்பின் அதியமான் தனக்கு அடங்கி நடப்பான் என்றும் எண்ணினான்.

வருக என்று ஔவையாரை இளந்திரையன் அழைத்துக்கொண்டு சென்றான். சென்றுகொண்டிருக்கையில் நும் அகன்ற இடத்தையுடைய நாட்டில் பொருநருளரோ என்று வினவினான். அவ்வினாவிற்கு ஔவையார் நன்கு விடையளிக்க வேண்டுமென்று எண்ணினார். “மட்பத்தினையும் மையுண்ட கண்களையும் ஒளிதங்கிய நுதலினையுமுடைய விறலி! என்னோடு

பொருவாருமுளரோ நும்முடைய பெரிய இடத்தை யுடைய நாட்டின்கண் என்னைக் கேட்டலமையாத செருச் செய்யும் தானையையுடைய வேந்தே! நீ போர் செய்யக் கருதுவையாயின்; எம்முடைய நாட்டின் கண்ணே அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரரும் உளர். அதுவேயன்றி; மன்றின்கண் தூங்கும் பிணிப் புற்ற முடிவினது காற்றெறிந்த தெளிந்த ஓசையை யுடைய கண்ணின்கண் ஒலியைக் கேட்பின், அது போர்ப்பறை என்று மகிழும் என்னுடைய தலைவனு முளன்'' என்னும் பொருள்பட,

மடவரல் உள்கண் வாணுதல் விறலி
பொருநரு முளரோநும் அகன்றலை நாட்டென
வினவ லாணுப் பொருபடை வேந்தே
எறிகோ லஞ்சா அரவி னன்ன
சிறுவன் மள்ளரு முளரே. அதாஅன்று
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னும் என்னையும் உளனே. புறம்-89

என்ற செய்யுளை அவனுக்கு முன்னால் எடுத்துரைத்தார்.

ஔவையார் உரைத்த உரைகளைக் கேட்டுக் கொண்டே இளந்திரையன் அவரை அழைத்துச் சென்றான். அருகிலிருந்த மடவார் உறையும் மாளிகையைக் காட்டினான். வருக என்று மேலும் அழைத்துச் சென்று இவை போரிடும் பரிகள். இவை போரிடும் கரிகள் என்றும் அவற்றைக் காட்டிக்

கொண்டு சென்றான். படைக் கொட்டிலுக்கு அழைத்துச்சென்று அழகுற அணி அணியாய் அமைக்கப்பட்டிருந்த வேற்படைகளையும், விற்களையும், அம்புகளையும், ஈட்டிகளையும், வாள்களையும், கேடயங்களையும், பிறவற்றையும் காட்டினான். ஔவையார் அஞ்சினாரில்லை. அதியமான் திறமை அவருக்குத் தெரியும். அவன் திறமையை அறியாத இளந்திரையனுக்கு அதனை அறிவுறுத்த எண்ணினார். "இவை தாம் பீலி அணியப்பட்டு மாலையைச் சூட்டப்பட்டு உடலிடந்திரண்ட காம்பை அழகுபடச் செய்யப்பட்டு நெய்யிடப்பட்டுக் காவலையுடைய அகன்ற கோயி லிடத்தன. அவை தாம், பகைவரைக் குத்துதலால் கங்கும் நுனியும் முரிந்து கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தன வாயின எந்நாளும்; செல்வமுண்டாயின் உணவு கொடுத்து, இல்லையாயின் உள்ளதனைப் பலரோடு கூடவுண்ணும் வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனாகிய தலைமையையுடைய எம் வேந்தனுடைய கூரிய நுனியையுடைய வேல்கள்" என்னும் பொருள்பட,

*இவ்வே, பீலியணிந்து மாலை சூட்டிக்*
*கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து*
*கடியுடை வியனக ரவ்வே. அவ்வே*
*பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து*
*கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்*
*உண்டாயிற் பதங் கொடுத்து*
*இல்லாயின் உட னுண்ணும்*
*இல்லோர் ஒக்கற் றலைவன்*
*அண்ணலங் கோமான் வைநுதி வேலே* புறம்-95

என்று முன்னர் இளந்திரையனைப் புகழ்வது போலப் பழித்தும், அதியமானை இகழ்வதுபோலப் புகழ்ந்தும் எடுத்துரைத்தார். இறுமாந் துரையாடிய இளந்திரையன் ஔவையார் உரைகேட்டு அடங்கினான்.

மங்கை சொல்லம்புகளால் மன்னன் வலியிழந்தான். இது நாணத்தக்க செயல் என்று தான் நாணி மறைவதுபோல ஞாயிறு மேலை மலையை அடைந்தான். அரசனை வென்ற அரிவை யாவள் என்று அலைகடல் மங்கை அகத்தெழு மகிழ்ச்சியால் தன் முகத்தை உயர்த்திப் பார்ப்பது போலத் திங்கள் திரைக்கடலிலிருந்து தோன்றிற்று. காலையில் கதிரவன் எழுந்தபின் ஔவையார் அரசனிடம் விடை பெற்று முன் சென்றவழியே திரும்பித் தகடூரையடைந்து நெடுமானைக் கண்டு நிகழ்ச்சிகளனைத்தையும் எடுத்துரைத்தார். அவன் ஔவையாருடைய திறமையைக் கேட்டு வியந்து அவரிடம் முன்னையினும் பன்மடங்கு அன்பு வைத்தான். பொன்னும் பூணும் அவருக்குப் பரிசிலளித்தான்.

## ஔவைக்கு நெல்லிக் கனி ஈதல்

ஒருநாள் அதியமான் தனக்குரிமையாகவுடைய குதிரைமலையையும் அதனைச் சார்ந்த காட்டினையும் காண்பதற்கு எண்ணித் தன் பரி இவர்ந்து சென்றான். செல்லும் வழியில் ஒரு சோலை இருந்தது. அதனுள் நுழைந்தான். பல மாமரங்களும் தென்னைமரங்களும் பலாமரங்களும் பிற மரங்களும் வளர்ந்திருந்தன.

பறவைகள் பாடிப் பறந்து அங்குமிங்குந் திரிந்தன. அரசன் குதிரையினின்றும் இறங்கி அங்குள்ள காட்சிகளைப் பார்த்துக்கொண்டே நடந்து சென்றான். பெரிய பலாமரமொன்றில் நல்ல பழங்கள் பல பழுத்திருந்தன. அதனருகே மாமரம் தன் கிளையிலுள்ள குலையை அசைத்து அசைத்துப் பலாமரத்திலுள்ள பழத்தைக் கீழே வீழ்த்திற்று. பழத்தை இழந்து பலாமரம் வருந்திக் கொண்டிருந்தது. தென்னை அதனை அறிந்து தன் உச்சியிலிருந்த நெற்றைப் பலாப் பழத்தை வீழ்த்திய மாமரக்குலையை வீழ்த்திக் கீழே உதிர்த்தது. அக்காட்சியையும் பிற காட்சிகளையும் கண்டு சோலையின்றும் அகன்று மலைச்சாரலை யடைந்தான். சாரலில் அருவிநீர் பாயப்பெற்றுத் தினைப்பயிர் நன்கு விளைந்திருந்தது. விளைந்த அத்தினைப் பயிரைக் காவல் செய்வதற்கு ஒரு கன்னிப்பெண் வந்திருந்தாள். அவள் குறிஞ்சிப் பண்ணைத் தன் வாயால் இனிமையுறப் பாடிக் கொண்டிருந்தாள். பண்ணைத் தொடங்குவதற்கு முன்னால், அவளிருந்த கொல்லையிலுள்ள தினைப்பயிரைத் தின்பதற்கு யானை ஒன்று வந்திருந்தது. பண்ணை எடுத்து அப்பெண் பாடப் பாட யானையின் செவிக்கு இனிமை ஏற்பட்டது. இருந்த இடத்திலிருந்துகொண்டு அவள் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தது. தின்னுதற்குவந்த தினையுணவை மறந்தது. கன்னிப்பெண் காவல்செய்கிறாள் என்று அக்கொல்லையை விட்டு நீங்கவுமில்லை. மலைச்சாரல் வழியாகச் சென்றுகொண்டிருந்த மன்னன் அக்காட்சியைக் கண்டான்:

கன்னிப் பெண்ணின் இசை இனிமையையும் களிற்றின் இசைக் கேள்வியையும் தன்னுள்ளே எண்ணி மகிழ்ந்தான். அவ்விடத்தை விட்டகன்றான்.

ஓரிடத்தில் ஒரு மான் காணப்பட்டது. அதனருகே ஒரு நாகிளங் கன்றும் காணப்பட்டது. அது அன்று ஈன்ற கன்று. அக் கன்றினுடம்பை அம்மான் நாவினால் நக்கி நக்கி அதனையும் நடத்தித் தானும் நடந்து கொண்டிருந்தது. அக்காட்சியையும் காவலன் கண்டு சென்றான்.

அதியமான் மேலும் நடந்தான். பசும் புல் தரையில் புலியொன்று படுத்திருந்தது. அதனை எய்வதற்கு வில்லை எடுத்து அம்பைத் தொடுத்தான். புலி அரசனைக் கண்டது. அம்பு விடுமுன் எழுந்து அவ்விடத்தை விட்டு அகன்றது. அரசனும் அதனைத் தொடர்ந்து சென்றான். செல்லும் நெறியில் ஒரு சித்தன் காணப்பட்டான். வில்லைக் கீழே வைத்துவிட்டு வேந்தன் அச் சித்தனை வணங்கி நின்றான். அச் சித்தன் அரசனுக்கு இருக்கை கொடுத்தான். அரச! நின் கொடைத் திறமையையும் கோலின் திறமையையும் கேள்விப் பட்டிருக்கிறேன். நீ நல்ல புகழோடு வாழ்கிறாய். நீ நீண்டகாலம் வாழ்வாயாக என்று கூறினான். காட்டினூடே சென்று நெல்லிக்கனி ஒன்று பறித்து வந்து அதியமானிடம் கொடுத்து மன்னவ! நெல்லிக் கனிகளில் பலவகை உண்டு. நெல்லிக்கனிகளை உண்ணின் அவை நீர் வேட்கையை நீக்கும். நான் கொடுத்த இக் கனியும் நெல்லிக்கனிதான். இது ஏனைக் கனிகளைப்

போன்றதன்று. இது தன்னை உண்டவர் சாவினை ஒழிக்கும் என்று கூறி மறைந்தான். சித்தனைச் சிவபெருமான் என்று எண்ணினன். அவன் அளித்த நெல்லிக்கனியை அதியமான் உண்டானில்லை. தான் உண்பதனினும் ஔவையார் உண்ணுவாராயின் தமிழ்மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மை உண்டாகும் என்று எண்ணினன். நடந்து வழியே வந்து பரிமிசை யிவர்ந்து அரண்மனை அடைந்தான்.

அதியமான் ஔவையாரை அழைத்தான். அருகே அமர்த்தினன். காட்டில் கன்னிப் பெண் குறிஞ்சிப் பண் பாடிய திறமையையும் அதனை அமைதியோடு கேட்டுக்கொண்டிருந்த யானையின் செயலையும் எடுத்துரைத்தான். அவ்வுரையினுக் கிடையில் சித்தன் கொடுத்த நெல்லிக் கனியை நல்கித் தின்னுக என்று செப்பினன். ஔவையார் கனியைக் கையினல் வாங்கினர். காட்சிக்கு இனிமையாயிருந்தது. வாயில் போட்டார். தின்றார். தீஞ்சுவை யுடையதாயிருந்தது. "மன்னவ! கனி இன்சுவை யுடையதாயிருக்கிறது இன்னும் ஒன்று தருக. இக்கனி எப்படி உனக்குக் கிடைத்தது என்று கேட்டார். சித்தனைக் கண்ட வரலாற்றையும் அவன் கொடுத்த வரலாற்றையும் அவன் கூறிய கூற்றையும் கூறினன். ஔவையார் அவன் உரைத்த உரையைக் கேட்டுத் திகைத்தார். அரசன் தானும் உண்ணமல் தன்னுடைய மனைவி மைந்தனுக்கும் ஊட்டாமல் தன்னை யழைத்துக் கொடுத்ததற்கு வியப்படைந்தார்.

"வெற்றியுண்டான தப்பாத வாளை எடுத்துப் பகைவர் களத்தின்கட் படவென்ற கழலவிடப்பட்ட வீரவளை பொருந்திய பெரிய கையினையுடைய மிக்க ஆரவாரத்தைச் செய்யும் மதுவினையுடைய அதியர் கோமான், மாற்றுரைப் போரின் கட்கொல்லும் வீரச் செல்வத்தினையும் பொன்னாற் செய்யப்பட்ட மாலையையுமுடைய அஞ்சி, நீ பால் போலும் பிறை நுதல் போலப் போலிந்த திருமுடியினையும் நீல மணி போலும் கரிய திருமிடற்றினையுமுடைய ஒருவனைப் போல, பெரும பழைய நிலைமையையுடைய பெரிய மலையிடத்து விடரின்கண் அரிய உச்சிக்கண் கொள்ளப்பட்ட சிறிய இலையினையுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெருதற்கரிதென்று கருதாது பெறும் பெரும்பேற்றினை எமக்குக் கூறுது நின்னுள்ளே அடக்கிச் சாதலொழிய எமக்கு அளித்தாயாதலால் நிலைபெறு வாயாக" என்னும் பொருள்பட,

வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித்தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால் புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணி மிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது

*ஆதல் நின்னகத் தடக்கிச்*
*சாதல் நீங்கஎமக் கீந் தனையே.*

என்று பாடி மன்னனுக்கு வாழ்த்துரைத்தார்.

ஔவையார் அதியமானிடத்தில் மிகுந்த மதிப்பு வைத்து வாழ்ந்து வந்தார். அதியமானும் அவரிடத்தில் மிகுந்த மதிப்பு வைத்து வாழ்ந்து வந்தான். அவனுடைய குடையைப் பற்றியும் அருளைப் பற்றியும் வீரத்தைப்பற்றியும் ஔவையார் புகழ்ந்து பாடியுள்ளார்.

## தமிழுறி வுறுத்தல்

அதியமானுடைய தவமகன் பெயர் பொகுட்டெழுனி. அவன் கல்வியும் வில்வித்தை முதலியவையும் கற்றறிந்தான். அவனுக்கு ஔவையார் தமிழ் இலக்கணங்களையும் இலக்கியங்களையும், அறம் பொருள், இன்பங்களின் இயல்பையும் கற்பித்தார். அவனும் நன்குகற்றறிந்தான். அவனுக்கு ஔவையார் அருந்தமிழ் இயல்பை எடுத்துரைக்க எண்ணினார். உலகின்கண் புகழே நிலைத்து நிற்பது. புகழை ஒருவனுடைய வலிமை எடுத்துரைக்கும். அவனுடைய கொடையும் எடுத்துரைக்கும். உலகமும் எடுத்துரைக்கும். தமிழும் எடுத்துரைக்கும். இந்நான்கில் தமிழே சிறந்தது. முதல் மூன்றும் ஒருவனுடைய புகழை எடுத்துரைத்தாலும் அவற்றால் எடுத்துரைக்கும்புகழ் சில பகலே நிலவுலகில் நிற்கும். தமிழ் மொழி எடுத்துரைக்கும் புகழ் பலகாலம் பாரிடை நிலவும். மேலும் அது அன்னையையும் தந்தையையும் அழைப்பதற்கு

உதவுகிறது. தன்னையும் அறிவிக்கும்; பிறரையும் அறிவிக்கும். நன்மைகளையும் தீமைகளையும் நமக்கு எடுத்துரைக்கிறது. பழமையான மொழிகள் என்று சொல்லப்படும் வடமொழி, இலத்தீன், கிரீக்கு, ஈபுரு முதலிய மொழிகளினும் பழமை வாய்ந்தது. பழமை வாய்ந்த தமிழ்மொழி பழமை வாய்ந்த நிகழ்ச்சிகளைப் பிற்காலத்தார்க்கு எடுத்துரைக்கிறது. எடுத்துரைக்கும்பொழுது, தன்னை அணிகளால் அழகுபடப் பாடிய புலவர்களைப்பற்றியும் அப்புலவர்களுக்குப் பொருள் முதலியன உதவிய அரசர் முதலியோர்களையும் கூறும். பிறர் புகழை எடுத்துரைப்பதில்லை. உலகத்தில் பிறந்தவர் கணக்கற்றவர். இறந்தவர்களும் கணக்கற்றவர். முன்னோரில் எவர் இப்பொழுது இருக்கின்றனர். முன்பு பிறந்திறந்த பல்லோருள்ளும் நம் தமிழ் மொழி எடுத்துரைக்கும் சிலரையே நாம் அறிகிறோம். பிறரை நாம் அறிய முடியவில்லை. ஆகையால் இளவரசே, தமிழ் மொழியில் பற்றுவை. தமிழ் மொழியைப் பேணு. தமிழ்ப்புலவர்களை நீ ஆதரி என்று அவனுக்கு அறிவுறுத்தினர். அவனும், அவற்றைக் கேட்டு மகிழ்ந்து அங்ஙனமே நடந்து வந்தான். ஔவையாரையும் நன்கு பேணி வந்தான். கற்பன கற்றறிந்த பொகுட்டெழினியைப் புதல்வராகப் பெற்றதும், மாண்பிற் சிறந்த வடிவார் குழலியை மனைவியாகப் பெற்றதும், அறிவிற் சிறந்த ஔவையாரை அவைப் புலவராகப் பெற்றதும், நமது தவமே யாகும் என்று அதியமான் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

## காரியோடு போர் புரிதல்

ஒருநாள் அதியமானிடம் ஓரொற்றன் வந்தான்; வணங்கி நின்று, மன்னவ! கோவலூரைக் காவல் செய்யும் காவலராகிய காரிமன்னர் தங்களை முன் போல் மதிப்பதில்லை. இப்பொழுது தங்களைப் பழித் துப் பேசுகிறார். தம் நாட்டின்மேல் படையெடுத்து வரின், வரும் மன்னரை மாய்ப்பேன் என்றும் பேசு கிறார் என்று சொன்னான். அவன் சென்றபின் வேறிரண்டு ஒற்றர்கள் வந்து அங்ஙனமே விளம்பிச் சென்றனர். மன்னன் சினங்கொண்டான். காரி யோடு போர்செய்து அடக்கக் கருதினான். படை களைத் திரட்டுவதற்குப் பறையறையக் கட்டளை யிட் டான். பறையறையப்பட்டது. பறையொலி கேட்ட மறக்குல மங்கையர்களும் வீரர்களும் மகிழ்ச்சியடைந் தார்கள். வீரர்கள் போர்க் கோலம் பூண்டு புறப்பட் டார்கள். மங்கையர்கள் வழியனுப்பினார்கள்

கரியெரிந்து மீளெனக்
கணைகொடுத் தனுப்புவார்.
பரியெரிந்து மீளெனப்
படைகொடுத் தனுப்புவார்.

வரிவிலேந்தி முன்னம் நண்ணும்
மள்ளரை எதிர்க்கையில்
வெரிநிடின் வீசாதே யென்று
வேல்கொடுத் தனுப்புவார்,

மங்கையர் கொடுத்த படைகளை மகிழ்ந்து பெற்றுக் கொண்டு வீரர்கள் அரண்மனையை அடைந்தார்கள். அரசன் நால்வகைப்படைகளையும் முன்னால் நடத்தி

அவர்களுக்குப் பின்னால் புரவிமீ திவர்ந்து போனான். ஔவையாரும் அரசனோடு சென்றார். மக்களும் புலவர்களும் வாழ்த்தி வழியனுப்பினர். பறைகள் முழங்கின. சங்குகள் ஆர்த்தன. தூளிகள் எழுந்தன. வீரர்கள் கூற்றம் போன்று நடந்து கோவலூரை அடைந்தார்கள்.

காரி மன்னன் படை வருகையை அறிந்தான். தன் படைகளை அனுப்பித் தானும் போர்க்களம் புகுந்தான். அதியமான் படையும் காரிமன்னன் படையும் போர் புரிந்தன. வீரர்கள் வெகுண்டு ஒருவரோடொருவர் போர் புரிந்தனர். களிறும் களிறும் கனன்று முட்டின. பரிகள் பாய்ந்து பகைவரை மிதித்தன. தேர்கள் விரைந்து சென்று தெவ்வரை மாய்த்தன.

வேலும் வாளும்சென்று சென்று
    வீரர் மார்பு பாய்யுமால்.
கோலும் எஃகும் ஏகி ஏகிக்
    கொய்யு ளைமா வீழ்த்துமால்.

காலும் கையும் வீழ யானை
    கல்லெனப் புரண்டிட
மேலும் மேலும் வாளை ஏவி
    வெட்டு வார்பல் வீரரே.

தாள்கள் வீழும் கைகள் வீழும்
    தார்புனைந்த மார் பொடு
தோள்கள் வீழும் சென்னி வீழும்
    சோறி வீழும் யானையின் கோடு வீழும்
நின்று சென்று மீளிகள்
    வாள்க ளேந்தி மாறு கொண்டு
மாய்க்கு மக்க ளத்திலே.

அதியமான் வில் முதலிய படைகளை எடுத்துக் கொண்டு போர்க்களம் புகுந்தான். அவன்வருகையை அறிந்த காரியும் அவன் வீரரும் அவனோடு போர்புரிந் தனர். அவன்மேல் வேலை எறிந்தார்கள். வாளை வீசி ஞர்கள். அம்புகளைத் தொடுத்தார்கள். அதியமான் அவற்றைத் தன் கேடயத்தால் தடுத்தான். வில்லை எடுத்தான். அம்புகளை இணைத்தான். என் அம்புகளின் சுவையைக் காண்மின் என்று பகைவர்மேல் ஏவினான். வில்லை எடுத்ததைப் பகைவர் அறிந்திலர். அம்பு க்ளை ஏவுவதைப் பகைவர் அறிந்திலர். எதிரே நிற்ப வரைக் கீழே வீழ்த்துவதை அறிந்திலர். பகைவர்கள் தங்கள் தங்கள் உடம்பின் மேல் பட்டுப் புண்படுத்து வதையும் ஊடுருவிச் செல்வதையும் அனுபவித்தறிந் தார்கள். எதிர்த்து நின்று போரிடச்சென்ற காரி மன்னனுடைய வீரர்கள் அஞ்சினார்கள். வில்லையும் வேலையும் பிறபடைகளையும் எறிந்துவிட்டு அவரவர் ஏறிச்சென்றயானைகளையும் குதிரைகளையும் தேர் களையும் செலுத்தி விரைந்து களத்தை விட்டகன்ற னர். காரி மன்னனும் அதியமான் அம்புகளால் புண் பட்டு எதிர்க்கும் ஆற்றலின்றித் தன் காரிக் குதிரை யிவர்ந்து களத்தைவிட்டகன்ருன்.

வீரர்கள் ஆர்த்தெழுந்தார்கள். பறையொலியும் பணில வொலியும் காதுகளைச் செவிடு படுத்தின. அதியமான்வாகைசூடினான். ஔவையார் அவனருகே வந்தார். போரை விரும்பி ஒலிக்கும் ஓசை பொருந் திய முரசினையுடைய ஏழரசரோடு பகைத்து மேற் சென்று போரின் கண் வென்று நின்வலியைத்

தோற்றுவித்த அன்றை நாளும் பாடுபவர்க்குப் பாட அரியை; நீ மாறுபாடு மிக்க கோவலூரை அழித்து வென்று பிறவும் அரண்களை அழிக்கின்ற ஆழியைத் தாங்கிய நினது தோளை இற்றை நாளும் பரணன் பாடினன் என்று அவனைப் புகழ்ந்து பாடினார். அதியமான் காரி மன்னனுடைய கோவலூரைத் தன் வசப்படுத்தினன். சில நாள் அவ்வூரிலிருந்து ஆவன செய்தபின் அவன் தகடூர் வந்து சேர்ந்தான்.

தகடூர் வந்து சேர்ந்த மன்னன் முகத்தினும் மார்பினும் விழுப்புண் பட்ட வீரர் தலைவர்களை அழைத்தான். வீரர்களை அழைத்தான். பரிசில் பல வழங்கினன். பாவலர்களை அழைத்தான். பாணர்களை அழைத்தான். ஔவையார் பரணர் முதலிய பெரும் புலவர்களை அழைத்தான். அவர்களுக்குப் பொன்னும் பூணும் கொடுத்தான். அதியமான் தம் நாட்டிற்குப் பல நன்மைகள் செய்தும், தமிழ் மொழியை பேணி வளர்த்தும் பாண்டிய மன்னனும் சோழ மன்னனும் தங்களுக்குப் படைத்துணை வேண்டும் பொழுது சென்றுஅவர்களோடு அவர்கள் மற்றுரை வென்றும், தன்னுட்டினுக்கு அணித்தா யிருக்கின்ற கொல்லி மலைக்குத் தலைவனுகிய வல்வில் ஓரியினேடு உறவு பூண்டும் வாழ்ந்து வந்தான்.

## கொல்லிக் கூற்றப் போர்

போர்க் களத்தில், புறமுதுகு காட்டி ஓடிய காரி மன்னன் காடு கடந்தும் நாடு கடந்தும் வானுற உயர்ந்த மலைகளடர்ந்த சேர நாட்டை அடைந்தான்.

சேர நாட்டின் ஒரு பகுதியைப் பெருஞ் சேர லிரும் பொறை என்னும் மன்னன் ஆண்டு கொண்டிருந் தான். அவன் பெரும்படையை யுடையவன். புல வர்களைப் பேணும் புகழையுடையவன். அவனைக் காரி மன்னன் அடைந்தான். அதியமான் தன்னூ ராகிய கோவலூரின் மேல் படையெடுத்து வந்த தையும், அவன் தன்னை வென்று அவ்வூரையும் நாட் டையும் கைப்பற்றியதையும் அவனிடம் எடுத்தியம் பினன். இரும்பொறை தன் அமைச்சகர்களை அழைத் துச் சூழ்வன சூழ்ந்தான். அமைச்சர்கள் அதியமான் வலிமையையும் அவன் துணை வலிமையையும் ஆராய்ந் தார்கள். ஆராய்ந்து தங்களுக்குப் பகைவனும் கொல்லி மலைக்குத் தலைவனுமாகிய வல்விலோரியோடு முதலில் போரிடின் அவன் அதியமானைப் படைத்துணை கழைப்பான். அவ்விருவரையும் கொல்லிக் கூற்றத் தில் போரிட்டு வெல்வது எளிது. அதன்பின் அதிய மானுக்குரிய தகடூரின் மேலும் படையெடுத்துச் செல் லலாம் என்றூர்கள். அங்ஙனமே இரும்பொறையும் காரியும் பேசி முடிவு செய்தனர்.

இரும்பொறை தன் வீரர்களை அழைத்துக் கொல் லிக்குச் சென்று ஓரி மன்னனுடைய ஆனிரைகளைக் கைப்பற்றி வருமாறு கட்டளையிட்டான். வீரர்கள் அரசன் கட்டளைப்படி கொல்லிக் கூற்றத்தை அடை ந்து ஆனிரைகளைக் கைப்பற்றி மீண்டனர். அரசன் வள்ளுவனை அழைத்துக் கொல்லிக் கூற்றத்திற்குச் சென்று போர்ப் பறை அறையுமாறு கட்டளையிட் டான். வள்ளுவன் சென்றூன். "பெருஞ் சேர லிரும்

பொறை மன்னர் கொல்லிக் கூற்றத்தின் மேல் படை எடுக்க வருகிறார். நோயுடையவர்களும், நோன்பியற்றும் தவசிகளும் பெண்பாலாரும், பிள்ளையில்லாரும் காவலிடங்களை அடைவார்களாக. ஆக்களையும் அப்புறப்படுத்துக'' என்று பறை யறைந்து மீண்டான்.

போர் வீரர்கள் பொங்கி யெழுந்தார்கள். ஆரவாரித்து அகம் மகிழ்ந்தார்கள். வில்லும், வாளும் வேலும், கணையும் எடுத்தார்கள். பரிகள் பண் அமைக்கப் பெற்றன. கரிகள் மணிகள் பூட்டப்பட்டன. தேர்கள் அலங்கரிக்கப்பட்டன. பதலைகளும் பம்பைகளும் முரசங்களும் பேரிகைகளும் முழங்கின. விண்மதிகள் மண்ணிடை ஊர்ந்து சென்றாற்போல வெண் குடைகள் சென்றன. மின்னற் கொடிகள் அசைந்து செல்வனபோன்று மன்னவன் விற்கொடிகள் முன்னர் சென்றன. காலாட் படையினர் கைகளிற் படைகள் ஏந்தி, அலைகடல் ஆர்த்துச் செல்வது போன்று ஆர்த்துச் சென்றார்கள். கோவலூர்க் காரி மன்னன் தன் காரிக் குதிரைமீது ஏறிச் சென்றான். இரும்பொறை மன்னன் வஞ்சி சூடித் தேரி வர்ந்து சினந்து சென்றான். புலவர்கள் வாழ்த்தினர். மாடமிசை யிருந்த மங்கையர்கள் மன்னன் வாகை சூடுக என்று மலர் மாரி பொழிந்தனர்.

நாற் படைகளும் நடந்து சென்றன. நகர மாந்தர்கள் படைகளுடைய செல்கையைப் பார்த்துப் பலர் புகழ்ந்தனர். ஆர்த்துப் பலர் அக மகிழ்ந்தனர். வாழ்த்திப் பலர் வழியனுப்பினர். இரும்பொறை மன்

னன் வில்லெடுத்தான். போர் களத்தில் எத்தனை பேர் மாய்வாரோ? வேங்கை வெகுண்டெழுந்தால், மானி னம் எங்ஙனம் எதிர்த்து நிற்கும்? என்று மன்னனைப் பலர் புகழ்ந்தார்கள். மன்னன் வல்விலோரி யோடு போர்புரியச் செல்கிறான். நாம் அவனுக்குரிய கொல்லி மலையோடு போர் புரிவோம் என்று எண்ணி மலை நாட் டிலுள்ள மலைகளெல்லாம் கடந்து செல்வன போன்று மத யானைகள் நடந்து செல்கின்றன காண்மின் என்று பலர் யானை படைகளைப் புகழ்ந்தார்கள். பாரில் வாழும் பரிகளில் ஓரி மன்னனுடைய ஓரிக் குதிரையும் காரி மன்னனுடைய காரிக் குதிரையும் சிறந்தவை யாகும். இவை இப்போரில் ஒன்றோடொன்று போரிடும். நாம் சென்று காண்போம் என்று நடப்பன போன்று பரி கள் படர்வதைப் பார்மின் என்று பலர் குதிரைகளைப் புகழ்ந்தனர். போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடா மல் விழுப்புண்பட்டு மண்ணிடை வீழ்ந்திறந்த மற வர்களை விண்ணுலகினுக்கு ஏற்றிச் செல்லும் விமா னம் போன்று தேர்கள் செல்கின்றன என்று தேர் களைப் பலர் சிறப்பித்துரைத்தனர். வில்லில் வல்ல வீரன் ஓரி அடிக்கடி வேட்டையாடிப் பல விலங்குகளை யும் மாய்த்தான். இன்று அவனோடு போர் புரிய வேண்டுமென்று பல வேங்கைகள் வெகுண்டெழுந் தாற் போன்று வீரர்கள் செல்வதைக் காண்மின்கள் என்று வீரர்களைப் பலர் புகழ்ந்தார்கள். கொல்லிக் கூற்றத்தினை நோக்கி நாற்பெரும் படையும் நடந்து சென்றன.

இரும்பொறை தன் நாட்டின்மேல்படை எடுத்து வருவான் என்று ஓரி உறுதியாய் எண்ணிக்கொண்டிருந்தான். தனக்குப் படையொடு வந்து உதவும் படித் தூதுவனை அனுப்பினான். அவனும் தகடூரை அடைந்து அதியமானைக் கண்டு, இரும்பொறை வருகையையும் அவன் எண்ணத்தையும் விரித்துரைத்தான். ஒற்றர்கள் காரி மன்னனுடைய வாழ்க்கையைப்பற்றியும் இரும்பொறையினுடைய எண்ணத்தைப்பற்றியும் எடுத்தியம்பிய உரைகளையும் அதியமான் ஆராய்ந்தான். இருபகைவர்களும் போர் புரிந்து ஓரி மன்னனை வென்றபின் தன்னோடும் போர்புரிய வருவார்கள் என்று எண்ணினான். எண்ணினவன் தன்னுடைய நண்பர்களாகிய பாண்டியனிடமும் சோழ மன்னனிடமும் தூதுவரை அனுப்பிப் பெரும் படைகளைப் பெற்றான். பின்பு போர் நிகழ்ச்சியைப் பறை சாற்றித் தன்னாட்டினர்களுக்குத் தெரிவித்தான். பறை யொலியை ஆடவரும் மகளிர்களும் கேட்டு அகமகிழ்ந்தார்கள்.

அரசன் இருக்கும் அரண்மனையை நோக்கி வீரர்கள் சென்றனர். சிலர் வேலும் வாளும் ஏந்திச் சென்றார்கள். சிலர் வில்லும் அம்பும் கொண்டு ஏகினார்கள். சிலர் ஈட்டியும் மழுவும் எடுத்து நடந்தனர். சிலர் தோளே துணையாகச் சென்றனர். சில வீரத் தாயர் தங்கள் சிறுவர்களுக்கு வெள்ளுடை உடுத்தி மணமலர் முடித்து வாளும் வேலும் கொடுத்துச் செல்க என்று செருக்களத்திற்கு அனுப்பினர். பிள்ளாய்! உன்னை நான் பெற்றெடுத்து வளர்த்து

என் கடனை முடித்தேன். உன் தந்தையார் உனக்கு கல்வி கற்பித்து அவர் கடனை முடித்தார். உன் அரசன் போர்த்தொழில் கற்பித்துத் தன் கடனை முடித்தான். நீ பகைவனை வாளால் எறிந்து உன் கடனைச் செய் என்று தன் தனி மகனைக் களத்திற்கு அனுப்பினுள். பிள்ளாய்! உன்னைப் பெற்றெடுத்து உன் முகம் நோக்கி முதன் முதல் பெரு மகிழ் வடைந்தேன். பின்பு உன் குதலை மொழியைக் கேட்டு உள்ளங் குளிர்ந்தேன். அதன் பின் நீ கல்வி கேள்விகளிற் சிறந்தவன் என்று சான்ருேர் கூறக் கேட்டுக் களிப்படைந்தேன். இன்று போர்க்களஞ் சென்று யானை எறிந்தாய் என்னும் உன் புகழ்ச்சியைச் செவிகளால் கேட்பேனுயின் உவகை எய்துவேன் என்று ஒரு தாய் தன் மகனைச் செலுத்தினுள். மக்கட் பிறப்பைப் பெறுவது அரிது. மக்களாய்ப் பிறப்பினும் மறக்குடியில் பிறப்பது அரிது. மறக்குடியிற் பிறப்பினும் வலிய உடம்பைப் பெறுவது அரிது. வலிய உடம்பு பெறினும் விற்பயிற்சி கொள்வது அரிது. விற்பயிற்சி கொள்ளினும் போர்க்களம் புக்கு விழுப்புண் படுதலும் வீரர்களை வெல்லுதலும் அரியனவாம் என்று ஒரு தாய் தன் மகனை அனுப்பினுள்.

வீரர்களிற் சிலர் மன்னனுடைய கட்டளையைச் செய்து முடித்து வருகிருேம் என்று தங்கள் தாயாரிடத்தும் மனைவியரிடத்தும் கூறி விடை பெற்றுச் சென்ருர்கள். சிலர் தங்கள் மக்கள் முகங்களைப் பார்த்துச் சென்றனர். சிலர் தங்கள் குடியிற் பிறந்த வீரர்களை வணங்கிச் சென்ருர்கள்.

அதியமான் நெடுமான் அஞ்சி பொய்கையில் நீராடிப் பட்டுடை உடுத்து, மணமலர் முடித்துப், படைகள் எடுத்துத் தேரில் ஏறினன். புலவர்கள் வாழ்த்தினர்கள். போர் முரசங்கள் அதிர்ந்தன. சங் கங்கள் ஆர்த்தன. நெடுங்கோளன் என்ற பெயரை யுடைய படைத்தலைவன் படைகளை நடத்திச் சென் றன். பாண்டியனுடைய படைகளும் சோழன் படை களும் அப்படைகளோடு சென்றன. படைகளது செல்கையினுல் தூளிகள் விண்ணில் எழுந்தன. நிலத் தில் கிடந்த கற்கள் தூளாயின. காடுகள் அழிந்து வெளியாயின. பலகாதம் கடந்தார்கள். அதியமா னும் வீரர்களும் கொல்லிக் கூற்றத்தை அடைந் தார்கள். வல்விலோரி அவர்களை வரவேற்றான்.

பெருஞ்சேர லிரும்பொறையும் காரி மன்னனும் தங்கள் படைகளைச் செலுத்திக் கொண்டு கொல்லிக் கூற்றத்தை அடைந்தார்கள். ஓரி மன்னனும் அதியமா னும் தங்களுடைய பெரும் படைகளோடு பகைவர் களை எதிர்த்தார்கள்.

இருவருடைய படைகளும் ஒன்றோடொன்று எதிரும் இரு பெருங்கடல் போன்று எதிர்ந்து போரிட்டன, இரு பக்கங்களி லிருந்தும் வீசப்பட்ட வேல்கள் எங்குங் காணப்படாத நீரிலிருந்து எரியும் நெருப்புப் போன்று இலங்கின. கொடிகள் கடலில் வீசும் மின்னல் போல் விளங்கின. கரிகள் அங்கு காணப்படும் முகில்போல் காட்சியளித்தன. வீரர்கள் எதிரிகளை வெட்டு வெட்டு வென்று கூறி வெகுண்டு

போரிட்டனர். அடி அடி என்று ஆர்த்துப் போரிட்டனர். கைகளை ஓடி ஓடி என்றுரைத்து மலைந்தனர். பகைவர் குருதியைக் குடி குடி யென்று கூறி முன் நடந்தனர்.

வில் வீரரும் வில் வீரரும் வெகுண்டு போரிட்டனர். வாள் வீரரும் வாள் வீரரும் மாறு கொண்டு மலைந்தனர். பரியும் பரியும் பகைத்தன. கரியும் கரியும் கனன்றன. வீரர்களிற் சிலர் யானையை வீழ்த்தி அப்பால் நடந்தனர். சிலர் பரிகளை மாய்த்துப் பகை வரை அடைந்தனர். சிலர் தேரை வீழ்த்திச் சினந்து திரிந்தனர். சிலர் வீரரை வீழ்த்தி வெகுண்டு செருக்கினர். சிலர் கைகளிலுள்ள வேல்களைக் கரிகளின் மேல் எறிந்து விட்டு மெய்யில் பாய்ந்திருந்த வேலைப் பிடுங்கி வீரர்கள் மேல் ஓச்சினார்கள்.

கண்ணேமென எண்ணிலர் காமருடல்
புண்ணுமென எண்ணிலர் பொன்றிடின்மெய்
மண்ணுமென எண்ணிலர் வாள்வயவர்
நன்னுருடல் வெட்டிந டந்தகல்வார்.

சிளந்தார்தமை வாளினிற் சீவுதலை
பனங்காயெனப் பாரிடை வீழும் உளம்
கனல்வெங்கரிக் கால் உரல்போலுருளும்
முனங்கை பனந்துண்டில் முரிந்துவிழும்.

சிலைவல்லவர் சென்னியின் மேல்நடந்து
புலிபோல் விரைந் தெங்கணும் போம்புரவி
மலைசெல்வது போற்செலும் மால்களிறு
கொலைவேல்மற மள்ளரைக் கொன்று செலும்.

உடலெங்கணும் வெங்கணை யுட்புகலின்
மடல்வன்பனை போலுவர் வாள்மறவர்
அடர் செங்கினைத் தாளூறு நீள்வரையாம்
மிடல் சேரொரு கையுடை வேழமரோ.

போர்க்களத்தில் வீரர்கள் தங்கள் வில்லில் இணைத்துத் தொடுத்த அம்புகள் விண்ணிலிருந்து விழும் மழைத்துளிகள் போல் காணப்பட்டன. வேல்கள் மின்னல் போல் காணப்பட்டன. சங்கொலி இடியொலி போன்றிசைத்தன. குதிரைகளின் செல்கை கடுங்காற்றைப் போன்றிருந்தது. களத்தில் ஓடும் செங்குருதி செம்புனலைப் போன்றிருந்தது. பருந்தும் காக்கைகளும் நிணங்களைத் தின்று குருதி நீராடின. கால்கள் வெட்டுப் பட்டும், கைகள் ஒடி பட்டும். தோள்கள் அறுபட்டும் பலர் நிலத்தே கிடந்தனர். களிறுகளும் இவுளிகளும் மாய்ந்து கிடந்தன.

ஓரி மன்னன் தன் ஓரிக் குதிரையி லிவர்ந்தும் காரி மன்னன் தன் காரிக் குதிரையி லிவர்ந்தும் செருக்களம் புகுந்தனர். அவர்கள் ஏறிய குதிரைகள் நிலத்தில் பாய்ந்து செல்லும். விசும்பில் தாவிச் செல்லும். கண்களுக் கெட்டும் தொலைவில் வரும். நொடிப் பொழுதில் மறைந்து விடும். இடது பக்கத்தில் செல்வன போன்றிருக்கும் வலது பக்கத்தில் ஓடும். அக் குதிரைகளி லேறிய மன்னரிருவரும் தங்கள் பகைவர் மேல் கணைகளை எய்வார்கள். வேலை ஓச்சுவார்கள். வாளை வீசுவார்கள். ஈட்டிகளால் குத்துவார்கள். வீரர்களும் அவர்களைக் கண்டு வெருண்டார்கள். பெருஞ் சேர லிரும்பொறையும் அதியமானும் தங்கள் பரியி

லிவர்ந்து செருக்களத்துட் சென்றனர். வீரர்களோடு போர் புரிந்தார்கள். எதிர்ந்தவர்களை விண்ணுலகத்தினுக் கேகுவித்தனர். அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் கண்டனர். ஒருவர் மேலொருவர் படைகளைச் செலுத்தினர். இரு புலிகள் தம்முட் பகைத்துப் பொருதாற் போன்று அவ்விரு வேந்தரும் வெருவாது பொருதனர்.

ஓரியும் காரியும் ஒருவரை யொருவர் கண்டனர். ஒருவர் மேல் ஒருவர் படைகளை உய்த்தனர். தம் முன் வரும் படைகளைக் கேடயத்தினுல் தடுத்து வாளையும் வேலையும் செலுத்தினர். வெல்வேன் என வீரம் பேசினர். மார்பும் முகமும் புண் பட்டன. குருதி அருவிபோல் உடம்பிலிருந்து விழுந்தது. காரியினுடைய வேலொன்று ஓரி மன்னனுடைய உடம்பிற் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. மண்ணில் விழுந்து மன்னன் மாய்ந்தான். நில மடந்தை தன் தவமகனைத் தன் மடியில் கிடத்தினுள். தமிழ் மடந்தை அவ்வீர வேந்தனை விண்ணுலகம் சேர்த்தாள்.

ஓரி மன்னன் மாய்ந்த செய்தியைக் கேட்டுக் கொல்லிக் கூற்றத்தினர் மனம் வருந்தினர். படைகளைக் கீழே எறிந்தனர். புறங்காட்டிப் போர்களத்தை விட்டு அப்புறம் போயினர்.

காரி மன்னன் உள்ளங் களித்தான். புலிபோல் ஆர்த்தான். வெற்றிச் சங்கமும் இடிபோல் முழங்கின. அம்மன்னன் தன்னைப் பின்தொடர்ந்து ஆரவாரித்து

வரும் வீரர்களோடு அவ்விடத்தை விட்டகன்று பெருஞ்சேர லிரும்பொறையும் அதியமானும் போரிடும் இடத்தை அடைந்தான். பெருஞ்சேர லிரும்பொறையோடு சேர்ந்து அதியமானை எதிர்த்தான். அதியமானும் அஞ்சாது நின்று பகைவர் இருவரோடும் போரிட்டான். படைகளை ஏவினன். புண் பட்டும் போரிட்டான். பகைவரிருவரும் பெரும்படையோடு எதிர்ந்ததனல் அதியமான் போரிடுவதற் கஞ்சி புறங் காட்டினன்.

கோவலூர் மலையமான் திருமுடிக் காரியும் பெருஞ்சேர லிரும்பொறையும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர். தோள் புடைத் தார்த்தனர். வென்றி முரசம் முழங்கின. வீரர்கள் மன்னர்களைச் சூழ்ந்து ஆர்த்தனர். ஏத்தினர். வாழ்த்தினர்.

நிற்க, போர்க்களத்தைவிட்டு ஓடிய வீரர்களிற் சிலர் ஓரிமன்னன் மாய்ந்த செய்தியை அரசிக்கு அறிவித்தார்கள். அரசி அதனைக் கேட்டுக் கலங்கினள். கலுழ்ந்தாள். கணவனைத்தேடி காரிகை களத்திற் கேகினள். மானினம் வருந்தவும் மயிலினம் இணையவும் நடந்தாள்.

ஒருகணை வேட்டத் துய்க்கின்
உயிர்பல மண்ணில் வீழும்
பொருகளத் தேகின் யாவர்
புறமுது கிடா தார்? இன்று
மருவலர் கணையால் எங்கோ
மாண்டனன் என்னின் என் னெஞ்சு
உருவுமால் அவர்க்கியா னன்றோ
உடம்பெனப் புலம்பிச் செல்வாள்.

சென்றவள் களத்தை அடைந்தாள். கணவன் புண்பட்டு மாய்ந்த உடம்பைக் கண்டாள். மின்னற் கொடி வெற்பிடை வீழ்ந்தாற் போன்று அரசி அவ் வுடம்பின்மீது வீழ்ந்தாள். முகத்தோடு முகத்தைச் சேர்த்தாள், நெட்டுயிர்ப்புற்று அழுதாள். பாம்பு தன் உரியைக் கழற்றினாற் போன்று அரசி தன் மெய்யை அகற்றினாள். தன் துணைவனை நாடி அவன் சென்ற வான் நெறிவழியே தொடர்ந்து சென்றாள்.

கொல்லிக் கூற்றத்தார் ஓரி மன்னனையும் உயி ரிழந்த அவன் மனைவியையும் ஓரிடத்தே புதைத்து அவர்களுக்குக் கல் நட்டு விழா வெடுத்து வணங் கினார்கள்.

## தகடூர்ப் போர்

பெருஞ் சேர விரும்பொறையும் மலையமான் திருமுடிக் காரியும் ஓரி மன்னனுடைய கொல்லிக் கூற் றத்தைத் தம் ஆளுகைக்குள் ஆக்கிச் சின்னாள் அங்குத் தங்கியிருந்தனர். பின்பு போருக் காற்றாது புறங் கொடுத்தோடிய அதியமானை அவனிருக்கும் தகடூர் போய் வெல்ல எண்ணி, நாற்பெரும் படைகளோடு புறப்பட்டனர். சில சான்றோர் பெருஞ்சேர விரும் பொறையை அடைந்து, "மன்ன" மாறுகொண்ட மாற்றாரை எதிர்த்துப் போரிட்டு அவர் நாடுகளைக் கைப்பற்றுதல் மன்னர்களுக்குப் புகழ்ச்சியை உண் டாக்குவதேயாகும். புகழ்ச்சியை உண்டாக்கு வதா யிருப்பினும், ஒரு குடியில் பிறந்த நீயும் அதிய

மானும் ஒருவர்க்கொருவர் பகைத்துப் போரிடுவது உயர்வாகாது. போரிடினும் நீவிர் இருவரும் வென்றீர்கள் என்ற இசையைப் பெறமாட்டீர்கள். இருவருள் யாவர் தோற்பினும் அத்தோல்வி உங்களுக்கு இகழ்ச்சியை உண்டாக்கும். ஆகையால் நீ அதியமானோடு போர்புரியச் செல்லுதலை ஒழிவாயாக" என்று கூறினர். இரும்பொறை அவருரையை ஏற்றுக் கொள்ளாமல் படைகளுடன் தகடூரை அடைந்தான்.

அதியமான் தன்னை வென்ற பகைவர்கள் தகடூரின்மேல் படையெடுத்து வருதலை யறிந்து கோட்டை வாயில்களை அடைத்து அக்கோட்டையினுள் படைகளோடு தங்கியிருந்தான். மதிலிலும் வேல்களை எறியும் பொறிகளையும், கற்களை எறியும் பொறிகளையும், நெருப்புகளைக் கக்கும் பொறிகளையும், பிறபொறிகளையும் அமைத்துக் காவல் செய்திருந்தான்.

பகைவர்கள் தகடூரை நெருங்கினார்கள். காவற்குளங்களையும் காடுகளையும் சிதைத்தார்கள். ஊர்களை கொள்ளையிட்டனர். காவல் மரத்தை வெட்டினார்கள். தகடூரை அடைந்து உழிஞை சூடி மதிலை முற்றுகையிட்டனர். நொச்சி மாலை புனைந்து மதிலைக் காவல் செய்து கொண்டிருந்த அதியமானும் அவன் வீரர்களும் பகைவர்கள் தங்கள் அகழ்களையும் மதில்களையும் அழிக்காதபடி எதிர்த்துப் போரிட்டார்கள். தாங்கள் மதிலில் அமைத்து வைத்திருந்த பொறிகளையும் எதிரிகள்மேல் ஏவினார்கள்.

ஏவுவார் பொறியைச் சில்ல
எஃகெறிந் தெதிருமாற்றூர்
ஆவியைக் கவரும் சில்ல
அம்பெறிந் துடலை வீழ்த்தும்
வாவுதிண் மாவைக் கல்லால்
மாய்த்திடும் சில்லதீயைத்
தூவிடும் செம்பைக் காய்ச்சித்
துருத்தியிற் செலுத்துஞ் சில்ல.

மதிலின் வெளியிலுள்ளவர்கள் அகழியைத் தாண்டுவார்களாயின், உள்ளேயுள்ளவர்கள் வேலை அவர்கள் மேல் வீசுவார்கள். அகழியிலுள்ள கெண்டை மீன்கள் பகைவர்களைப் பாய்வதுபோல் வேல்கள் அவர்கள் மீதுபாயும். அகழியையுங் கடந்து ஏணி சாத்தி மதிலைக்கடக்க முயலுவராயின், வாளை வீசி அவர்களை வானுலகுய்ப்பர். இங்ஙனம் மதிலைக் காவல் செய்யும் நொச்சிப் படையும் மதிலைக் கைப் பற்றுவதற்குப் போர்புரியும் உழிஞைப் படையும் விடாது போர்புரிந்து கொண்டிருந்தன.

ஒளவையார் மதிலின் அகத்தே தங்கி யிருந்தார். அதியமான் மதிலுக்கு வெளியே வந்து போர் புரியாமல் ஒடுங்கி இருப்பதை அறிந்தார். அங்ஙனம் ஒடுங்கி இருப்பது அறமன்று என்று நினைந்தார். “முரிந்த வளையை யொப்ப மலர்ந்த வெண்காந்தட்பூ இலை தழைத்த மல்லிகையுடனே நாறும் மலைச் சாரற் கள் மறத்தையுடைய புலி சீறின் எதிர் நிற்கவல்ல மானினமும் உளவோ? மயங்கிய ஆகாயத்திடத்தும் திசையின் கண்ணும் ஞாயிறு கொதித் தெழுமாயின்

செறிந்த இருளுமுண்டோ? பாரத்து மிகுதியால் பார் அச்சு மரத்தோடு வந்து தாக்கி உற இருத்தலின் நிலத்தின்கட் குளித்த பண்டத்தையுடைய சகடத்தினது ஆழ்ச்சியைப் போக்குதற்கும் புனல் கொழிக்கப்பட்ட மணற் பரக்கவும் கற்பிளக்கவும் நடக்கவல்ல மிக்க மனச் செருக்கினையுடைய சடாவிற்குப் போதற்கரிய துறையும் உண்டோ? இல்லையன்றே; அதுபோல, கணைய மரத்தை யொக்கும் முழந்தாளிலே பொருதிய பெரிய கையாகிய தப்பாத வன்மையைச் செய்யும் கையினை யுடைய வீரர்க்குத் தலைவ! பெரிய நிலத்தின்கண் நினது மண்ணைக்கொண்டு ஆர்க்கும் வீரரும் உளரோ நீ போர்க்களத்திற் புகின் இல்லையன்றே." என்னும் பொருள்பட

உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழுஞ்சாரல்
மறப்புலி யுடலின் மான்கண முளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளு முண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி செல்லிய
வரிமணல் ஞெமிரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ
எழுமரங் கடுக்குந் தாடோய் தடக்கை
வழுவில் வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே. புறம் - 90

என்னும் பாட்டைப்பாடி எடுத்துரைத்தார்.

ஔவையார் வீரவுரை அதியமானுடைய சினத்தை மிகுதிப் படுத்தியது. பற்களைக் கடித்து

நகைத்தான். அவன் விழிகளிலிருந்து நெருப்புப் பொரி தோன்றின. போர் புரியப் புறப்பட்டான். படைகளை அணிவகுத்தான். அடைத்த மதிற்கதவுகளைத் திறந்தான். நெடுங்கோளன் என்ற படைத்தலைவனையும் பெரும்பாக்கன் என்ற படைத்தலைவனையும் முன்னால் அனுப்பி அதியமான் அமர்க்களம் புகுந்தான்.

பெருஞ்சேர லிரும்பொறையும் காரி மன்னனும் தங்கள் படைகளோடு எதிர்த்தார்கள். வீரர்கள் தங்கள் தோள்களைத் தட்டி ஆர்த்தெழுந்தார்கள். ஒருவரோடொருவர் போர் புரிந்து வாளால் சிலர் தோள்களை வெட்டினார்கள். சிலர் தலைகளை வெட்டினார்கள். சிலர் கை கால்களை வெட்டினார்கள். சிலர் அம்புகளை எய்து பரிகளையும் கரிகளையும் வீழ்த்தினர். அம்புகள் பல கரிகளினூடும் பரிகளினூடும் பாய்ந்து பறந்து போகும். வாளைமீன்கள் பிறழ்வனபோல மறவர்களுடைய தோள்களில் வாள்கள் வீழ்ந்து பிறழும். ஞானிகள் இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்று தத்துவப் பொருள்களை ஆராய்ந்து ஆராய்ந்து அப்புறஞ் செல்வது போலக் கணை முதலிய படைகள் அப்பொருள்களோடு சென்று அப்புறம் அகன்று செல்லும். தம் எதிரே வரும் வீரர்கள் தலையின்மேல் குதிரைகள் கால்களை உயர்த்தி மிதிக்கும். குதிரைமீதேறிச் செல்லும் வீரர்கள் யானையினுடைய தலைகளை வெட்டி வீழ்த்துவார்கள். நெடுங்கோளன் என்ற படைத்தலைவன் பகைவரோடு போர் புரிந்து பலரைக் கொன்றான். காரியும் பிட்டன் என்ற படைத் தலைவனும் பெரும்பாக்கனோடும்

நெடுங்கோளனோடும் போர் புரிந்து அவர்களுயிரை வானுலகிற் குய்த்தனர்.

எண்ணி லாதவர் சென்னி யிழந்தவர்.
கண்ணி ழந்தவ ரோகணக் கற்றவர்.
வண்ண மார்பிழந் தாரும் வரம்பிலார்.
புண்ணு ருதவ் ரில்லையப் போரினே.

செருக்களம் புகுந்த அதியமான் சினந்து போர் புரிந்தான். என்முன் வந்தான்; என்முன் வந்தான் என்று மாற்ருர் மனங் கலங்கும்படிச் சுற்றித் திரிந்தான். பலரோடு போர் புரிந்து அவர்களைப் பாரில் வீழ்த்திப் பெருஞ்சேர லிரும்பொறையைக் கண்டு அவனை அணுகினன். பகைவர் பலரையும் அம்பினுல் வென்று திரிந்த இரும்பொறையும் அதியமானோடு எதிர்த்து போர்புரிந்தான். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் அம்புகளை ஏவினர். வேல்களை எறிந்தனர். வாள்களை வீசினர். இருவர் உடம்புகளின் மேலும் படைகள் பாய்ந்து புண்படுத்தின. புண்பட்ட வாய் தோறும் குருதி அருவிபோல் சொரிந்தது. இருவரும் இடைவிடாது படைகளை ஏவிக்கொண்டிருந்தார்கள். சேரலிரும்பொறை ஏவிய வேலொன்று மின்னலைப்போல் மிளிர்ந்து விரைந்து சென்று அதியமான் அஞ்சியினுடைய அகன்றமார்பில் பாய்ந்தது. மன்னன் மார்பில் பாய்ந்தவேல் அதனினின்றும் அகன்று பாணர் கையிலிருந்த மண்டைப் பாத்திரத்தினுள் புகுந்து பின் இரப்பார் கைகளில் வீழ்ந்து பாவலருடைய நாவிலும் பாய்ந்து சென்றது. ஆண்மையிற் சிறந்த அதியமான் வீழ்ந்தான். பார் மடந்தை

அம்மைந்தனை மார்புறத் தழுவி அவன் வீரத்தைப் புகழ்ந்தாள். அவனை அழைத்துச் சென்று அவனுக்கு வானுலகளித்தாள்.

அதியமான் மண்ணில் வீழ்ந்ததை வீரர்கள் அறிந்தார்கள். அவன் வீழ்ச்சிக்கு வருந்தினார்கள். அழுதார்கள். தங்கள் படைகளைக் கீழே எறிந்தார்கள். போர் புரிவதை விடுத்துப் புலம்பி வருந்தினார்கள். அதியமான் மாண்ட செய்தியை ஔவையாருக்குச் சிலர் கூறினர். அவர் அச்செய்தி கேட்டவுடன் மூர்ச்சித்து விழுந்தார். அவருடைய தாமரை போன்ற முகம் ஒளியிழந்தது. அவருடைய உடம்பு அனலிற்பட்ட தளிர்போன்று வாட்டமெய்தியது. பின்பு, "சிறிய அளவினையுடைய மதுவைப் பெறின் எங்களுக்குத் தருவன். அது கழிந்தது. பெரிய அளவினையுடைய மதுவைப்பெற்றானாயின் அதனை யாம் உண்டு பாட எஞ்சிய மதுவைத் தான் விரும்பி நுகர்வான். அது கழிந்தது. சோறு எல்லார்க்கும் பொதுவாதலால் சிற்றளவினையுடைய சோற்றின் கண்ணும் மிகப்பல கலத்தோடுங்கூட உண்பன். அதுகழிந்தது. மிக்க அளவினையுடைய சோற்றின் கண்ணும் மிக்கப் பல கலத்தொடுங்கூட உண்பன். அது கழிந்தது. அன்போடு கூடிய ஊன்றடி உளதாகிய இடமுழுதும் எங்களுக்களிப்பன். அது கழிந்தது. அம்போடு வேல் தைத்து உருவுமிடமாகிய போர்க்களமுழுதும் தான் சென்று நிற்பன். அது கழிந்தது. தான் காதலிப்பார்க்கு மாலை சூட்டுதலான் நரந்தப் பூ நாறும் தன்னுடைய கையால் தான் அருளுடைமையிற் புலால்

நாறும் எம்முடைய தலையைத் தடவுவன். அது கழிந் ததே. அரிய தலைமையையுடைய பெரிய பாணரது அகலிய மண்டையின்கண் துளையையுருவி, இரப்ப வர் கையுளும் தைத்துருவித் தன்னுற் புரக்கப்படும் சுற்றத்தாரது புல்லிய கண்ணிற் பாவை ஒளிமழுங்க அழகிய சொல்லை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியை யுடைய அறிவினையுடையோர் நாவின்கண்ணேபோய் வீழ்ந்தது. அவனது அரிய மார்பத்தின்கண் தைத்த வேல். எமக்குப் பற்றுகிய எம்மிறைவன் எவ்விடத் துள்ளான் கொல்லோ? இனிப் பாடுவாருமில்லை. பாடுவார்க்கொன்று ஈவாருமில்லை. குளிர்ச்சியை யுடைய நீரையுடைய துறையின்கண் பகன்றையி னது தேனைப் பொருந்திய பெரிய மலர் பிறராற் சூடப்படாது கழிந்தாற் போலப் பிறர்க்கு ஒரு பொருளைக் கொடுக்காது மாய்ந்துபோம் உயிர் மிகப் பல' என்னும் பொருள்படப் பாடி வருந்தினுர்.

வடிவார் குழலி தன் காதலனுகிய அதியமானுயிர் விண்ணுலகடைந்தது என்று கேள்விப்பட்டவுடன் தன்னுடைய துணையை யிழந்த பெண் அன்றில் போன்று வருந்தி அழுது புலம்பினுள். பொகுட் டெழினியும் அமைச்சர்களும் தானைத் தலைவர்களும் குடிகளும் வீரரும் பிறரும் அரசன் மாய்வை எண்ணி எண்ணி வருந்தினுர்கள். அரசி தன் காதலனைக் காணுதற் கெண்ணிக் களத்தை அடைந்தாள். காத லன் உடம்பைக் கண்டாள். கலுழ்ந்து அவன் உடம் பின் மேல் விழுந்து

ஆருயிரே போரேறே
அண்ணல் அகன்மார்பா
பாருலகெங் கணும்படர்ந்து
பணியார் உயிர்கவர்ந்து
கூருடைவெங் கணையெயிற்றுக்
கூற்றுவப்ப வூட்டிய நின்
பேருதவி தனைமறந்து
பிழையுனக்குப் புரிந்ததுவே
உன்முகங்கண் டழுதழுதிங்
குறுதுயர்கொள்ளுங் கொடிய
என்முகங்கண் டுரைபகரும்
எண்ணமிலை யெனின் எழினி
தன்முகங்காண் அருகிருந்து
தமிழிசைக்கும் ஔவை எழில்
மென்முகங்காண் இன்றெவரும்
வெம்பகைவ ராயினமோ?

என்று புலம்பி அழுது புரண்டாள்.

வீரரும் பிறரும் சந்தனம் முதலிய மணமுடைய கட்டைகளை அடுக்கி அரசன் உடம்பை அவ்வீமத்தின்மேல் வைத்து நெருப்பிட்டு எரித்தார்கள். அவன் அரும் புகழைக் கல்லில் எழுதி நட்டு மாலை சூட்டி அவனை வணங்கினார்கள்.

பெருஞ்சேர லிரும்பொறையும் காரி மன்னனும் பெருமகிழ்ச்சியோடு தகடூரைத் தன்னடிப்படுத்தினர். அதியமான் மகன் பொகுட்டெழினி வென்ற மன்னருக்குத் திறை செலுத்தித் தந்தையைப் போன்றே தகடூரை ஆண்டுவந்தான்.

No. 106189

# Sanga Kalathu Vendarum Velirum

BY

Vidwan P. GOVINDA MUPPANAR

*Tamil Pandit, Sevaga Pandian High School, Rajapalayam.*

S. R. SUBRAMANIA PILLAI

PUBLISHER :: TIRUNELVELI

1—4—0